THE MADURA TAMIL SANGAM

INDIAN HISTORY

FIRST BOOK

BY

M. DURAISWAMY, M.A., L.T.,

(*St. Gabriel's High School, Madras.*)

THE MADURA TAMIL

M. R. APPADURAI

57, ANDERSON STREET, MADRAS.

PRICE AS. 9

First Edition ... 1941
Second Edition ... 1941

Approved by the Text-Book Committee, Madras.
Vide Ft. St. George Gazette, Part I-B, Page 72, dated 27th May, 1941.

THE MADURA TAMIL SANGAM

முன்னுரை

நமது தேச சரித்திரத்தைச் சிறுவர்கள் பள்ளிகளில் படித்துணரச் சென்னைக் கல்வி இலாக்காவினால் சமீபத்தில் முதல் மூன்று பாரங்களுக்கும் பிரசுரிக்கப்பட்ட இந்து தேச சரித்திர பாடத் திட்டத்தின்படி முதற்பாரத்திற்குரிய பாடத் திட்டத்தைத் தழுவி, இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

நமது நாட்டின் நிலைமையையும், மக்கள் நிலைமையையும் நம் மாணவர்கள் நன்குணர்வது வெகு அவசியமாகும். இப்புத்தகத்திலுள்ள பாடங்கள், இந்த வகுப்பிற்கு வேண்டிய விஷயங்களை மாணவர்கள் வெகு ஆவலுடனும் ஊக்கத்துடனும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துடன் எளிய நடையில், சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதப் பெற்றுள்ளன.

ஒவ்வோர் அரிய விஷயத்தையும் விளக்க ஆங்காங்கு அனேக உருவப் படங்களும் தேசப் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மாணவர்களின் பயிற்சிக்காகப் பாடங்களின் தொடக்கத்தில் குறிப்புகளும், இறுதியில் சில கேள்விகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் மாணவர்கள் கற்க வேண்டிய முறைப்படி இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. பல சரித்திர ஆசிரியர்களின் ஆராய்ச்சியில் புதியனவாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்களும், உண்மைகளும் அனுசரித்துக் கையாளப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தைப் படித்துணர்வார்களாயின், நம் மாணவர்கள் நல்ல பயனைப் பெற்று, சிறந்த ராஜ பக்தியும், தேச பக்தியுமுள்ளவர்களாயிருப்பார்கள் என்பது நிச்சயம். இப்புத்தகத்தைப் பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் பாட புத்தகமாக வைத்து ஆதரிக்க வேண்டுமென அவர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

பிரசுர கர்த்தர்

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	இந்தியாவின் இயற்கை அமைப்பு	...	1
2.	இந்தியாவின் பூர்விகக் குடிகள்	...	6
3.	திராவிடர்கள்	...	9
4.	ஆரியர்கள்	...	12
5.	புத்த மதமும் சமண மதமும்	...	25
6.	மகத ராஜ்யம்: சைசுநாக வமிசம்	...	30
7.	அலெக்ஸாந்தரின் படையெழுச்சி	...	32
8.	மௌரிய அரசர்கள்	...	36
9.	மௌரிய ஆட்சி முறை	...	43
10.	மௌரியர்களுக்குப் பின் வந்த அரசர்கள்: கனிஷ்கர்	...	46
11.	குப்த மன்னர்கள்	...	51
12.	ஹர்ஷ வர்த்தனர்	...	56
13.	ராஜ புத்திரர்கள்	...	61
14.	இஸ்லாம் மதம் தோன்றிப் பரவுதல்	...	67
15.	தக்காண ராஜ்யங்கள்	...	70
16.	தமிழ் நாட்டு ராஜ்யங்கள்	...	83
17.	இந்து மதப் பெரியார்கள்	...	99
18.	மூன்று சமயாசாரியர்கள்	...	103
	காலக் குறிப்பு	...	110

படங்களின் அட்டவணை

படம்			பக்கம்
1.	இமயமலைத் தொடர்	...	2
2.	கற்கால மண் பாண்டங்கள் (By permission of the Archaeological Survey of India)	...	7
3.	நீலகிரி மலையில் வசிக்கும் தோடர்கள் (By permission of the Archaeological Survey of India)	...	8
4.	திராவிடர்கள் நாக ஆராதனை செய்தல் (By permission of Klein and Peyerl)	...	10
5.	மோகஞ்சோதாரோவின் புதைபட்ட பட்டணம் (By permission of the Archaeological Survey of India)	...	11
6.	ஆரிய நாடுகள்	...	16
7.	இராமர் வில்லை முறித்துச் சீதையை மணத்தல்	...	18
8.	பாரதப் போர்க்களம்	...	21
9.	புத்தர் ஸ்தூபி (By permission of the Archaeological Survey of India)	...	26
10.	அலெக்ஸாந்தர்	...	32
11.	அலெக்ஸாந்தரின் படையெழுச்சி	...	34
12.	அசோகர் நாட்டிய கற்றூண் (By permission of the Archaeological Survey of India)	...	40
13.	கல்வெட்டுச் சாஸனங்கள் (By permission of the Archaeological Survey of India)	...	41
14.	அசோக சாம்ராஜ்யம்	...	44
15.	கனிஷ்க சாம்ராஜ்யம்	...	48
16.	கனிஷ்கரின் நாணயம்	...	49
17.	குப்த சாம்ராஜ்யம	...	52

படம் பக்கம்

18. குப்தரின் நாணயம் ... 53
19. ஹர்ஷ சாம்ராஜ்யம் ... 59
20. ராஜ புத்திர வீரன் ... 62
21. மெக்கா நகரம் ... 69
22. திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை ... 74
(*By permission of Klein and Peyerl*)
23. மஹாபலிபுரக் கல் ரதங்கள் ... 75
(*By permission of the Archaeological Survey of India*)
24. மஹாபலிபுரக் கோவில் ... 76
(*By permission of the Archaeological Survey of India*)
25. வரதராஜப்பெருமாள் கோவில் ... 77
(*By permission of the Archaeological Survey of India*)
26. எல்லோராவிலுள்ள கற்சித்திரம் ... 79
(*By permission of H. E. H. the Nizam's Archaeological Survey Dept.*)
27. அஜந்தாக் குகை ... 80
(*By permission of H. E. H. the Nizam's Archaeological Survey Dept.*)
28. தென்னிந்திய நாடுகள் ... 84
29. தஞ்சாவூர்ப் பிரகதீசுவரர் கோவில் ... 89
(*By permission of the Archaeological Survey of India*)
30. மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் ... 95
(*By permission of the Archaeological Survey of India*)
31. ஸ்ரீ ஆண்டாள் ... 102
32. ஸ்ரீ சங்கராசாரியர் ... 104
33. ஸ்ரீ ராமாநுஜர் ... 107
34. ஸ்ரீ மத்துவாசாரியர் ... 108



இந்தியா இயற்கையமைப்பு.

இந்து தேச சரித்திரம்

முதற்புத்தகம்

---:o:---

1. இந்தியாவின் இயற்கை அமைப்பு

[இந்தியாவின் விஸ்தீரணம் - அதன் எல்லைகள் - சமவெளிகள் - முக்கிய நதிகள் - மத்திய மலைத்தொடர்கள் - தக்காணப் பீடபூமி - கடற்கரைகள் - இவை சரித்திரத்தை எவ்வாறு பாதிக்கின்றன?]

இந்தியாவின் விஸ்தீரணம்

நம் இந்தியா தேசம், கண்டங்களில் பெரிதான **ஆசியாக்** கண்டத்தின் தெற்கிலுள்ளது. இத்தேசம் தெற்கு வடக்காக ஆயிரத்தெண்ணூறு மைல் நீளமுள்ளது; கிழக்கு மேற்காக வடபாகத்தில் சுமார் இரண்டாயிரம் மைல் அகலமுள்ளதாயும், தெற்கே செல்லச் செல்லக் குறுகியதாயும் அமைந்துள்ளது. ஆகையால், இதன் விஸ்தீரணம் சற்றேறக் குறையப் பதினைந்து லக்ஷம் சதுர மைல்.

எல்லைகள்

இந்தியாவிற்கு வடக்கே ஓர் இயற்கைப் பாதுகாப்பைப் போல **இமய மலை**யுள்ளது; மேற்கே **அரபிக் கட**லும், தெற்கே **இந்து மகா சமுத்திர**மும், கிழக்கே **வங்காள விரிகுடாக் கட**லும் எல்லைகளாய் உள்ளன. உலகத்திலேயே இமய மலைத் தொடர்களைப்போன்ற வேறு மலைத்தொடர் இல்லை. இதன் நீளம், சுமார் ஆயிரத்து அறுநூறு மைல் ஆகும். இது பல தொடர்கள் சேர்ந்து அமைந்திருப்பதால்,

இதன் அகலம் ஏறக்குறைய இருநூறு மைல் இருக்கின்றது. இதன்முக்கியமான சிகரங்கள், **எவரெஷ்டு, கிஞ்சன் ஜங்கா,**



படம் 1. இமய மலைத் தொடர்

தவளகிரி என்பன. இவை எப்போதும் பனியால் மூடப்பட்டிருக்கும். வட மேற்கிலும், வட கிழக்கிலும் இமயமலைகளி

லிருந்து சில கிளைகள் பிரிந்து செல்லுகின்றன. வடமேற்கி லுள்ள மலைகளுக்குச் **சுலைமான், ஹிந்து குஷ்** என்பன பெயர்கள்.

இமயமலைக்குத் தெற்கே விசாலமான சமவெளிகள் பரவி இருக்கின்றன. அப்பிரதேசத்தில் **சிந்து, கங்கை, யமுனை, பிரம புத்திரா** முதலிய பெரிய நதிகள் பாய்கின்றன. இங்குள்ள நிலம், ஆற்று வண்டல் படிந்து மிகவும் செழிப்புள்ள தாய் இருக்கின்றது. ஆனால், இதன் தென் மேற்குப் பாகத்தில் மழையற்ற ஒரு சிறு பாலைவனம் இருக் கிறது. இதைத் **தார்ப் பாலைவனம்** என்று வழங்குவார்கள்.

வடக்குச் சம வெளிகள்

வட இந்தியாவைத் தென் இந்தியாவினின்று பிரிப்பது போல இந்தியாவுக்கு நடுவில் கிழக்கு மேற்காக இரண்டு பெரிய மலைத் தொடர்கள் உள்ளன. அவைகளை **விந்திய மலைத்தொடர், சாத்பூரா மலைத்தொடர்** என்பர். அவற்றினின்று **நருமதை, தபதி** என்னும் இரண்டு பெரிய நதிகள் உற்பத்தியாகி, மேற்கு முகமாய் ஓடி, சமுத் திரத்தில் கலக்கின்றன.

மத்திய மலைத் தொடர்கள்

தென் இந்தியா, பெரும்பாலும் பீடபூமியாய் அமைந்துள் ளது. அதனைத் **தக்காணப் பீடபூமி** என்பர். தக்காணத்துக்கு வடக்கில் விந்தியா, சாத்பூரா மலைத் தொடர்களும், மேற்குப் பக்கத்தில் **மேற்குத் தொடர்ச்சி மலை**களும், கிழக்கில் **கிழக் குத் தொடர்ச்சி மலை**களும் இருக்கின்றன. இவ்விரண்டு மலைத் தொடர்களும் தெற்கே **நீலகிரி** என்னு மிடத்தில் கூடுகின்றன. இப்பீடபூமியின் மேற்குப் பாகம், கிழக்குப் பாகத்தைவிட உயரமாயிருக்கிறது; ஆகையாலேதான், இந்தியாவிலுள்ள தென் நதிகள் பெரும்பாலும் மேற்கு மலை

தக்காணப் பீடபூமி

களில் உற்பத்தியாகி, கிழக்குப் புறமாய்ச் சென்று, கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் இடைவழியிற் பாய்ந்து, கிழக்கிலிருக்கும் வங்காளக் குடாக்கடலில் விழுகின்றன. தென் இந்தியாவில் ஓடும் சில முக்கிய நதிகள் **கோதாவரி, கிருஷ்ணு, காவேரி** என்பன.

தென் இந்தியா ஒரு **தீபகற்பம்** ஆகும். அதாவது, இது மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளது. மேற்கில் **அரபிக் கட**லும், தெற்கில் **இந்துமகா சமுத்திர**மும், கிழக்கில் **வங்காளக்குடாக் கட**லும் உள்ளன. இரு பக்கங்களிலுமுள்ள கடற்கரைகளின் நீளம் மூவாயிரம் மைலுக்கு மேலாகவே இருக்கின்றது. இந்தியாவின் தென் கோடியில் உள்ளது **கன்னியா குமரி முனை**.

இயற்கை அமைப்பினுல் ஏற்பட்ட பலாபலன்கள்

ஒரு தேசத்தின் இயற்கை அமைப்பானது, அத்தேசத்தின் சரித்திரத்தைப் பாதிக்கும் என்பது யாவரும் அறியவேண்டிய விஷயம். மேற்கூறியவாறு இந்தியாவின் வடபாகத்தில் இமய மலைத் தொடர் இடைவிடாமல் அமைந்திருப்பதால், இந்தியாவிற்கு அன்னியர்கள் வருவது ஆதிகாலத்தில் கடினமாயிருந்தது. ஆனுல், இம்மலைத் தொடரின் மேற்குப் பாகத்தில் சில கணவாய்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை **கைபர்க் கணவாய், போலன் கணவாய்** என்பன. கைபர்க் கணவாயின் வழியே இந்தியாவினின்று அன்னிய தேசங்களுக்கு எளிதாகச் செல்லலாம். அதற்குத் தென்பாகத்திலுள்ள போலன் கணவாயின் வழியே இந்தியாவினின்று **காந்தகார், பலுச்சிஸ்தானம்** முதலிய இடங்களுக்குச் செல்லுதல் கூடும். ஆனுல், முக்கியமாகக் கைபர்க் கணவாயின் வழியேதான் அனேக ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே அன்னியர்கள் இந்தியாவின்மீது படை எடுத்து வந்துள்ளார்கள்.

அன்னியர்களை இந்தியாவின்மீது நாட்டமுறச் செய்தது கங்கை சிந்து நதிச் சமவெளிகளின் இயற்கைச் செல்வமே யாகும். இப்பிரதேசங்களில் மனிதர் அதிகம் கஷ்டப்படாமலே தமக்கு வேண்டும் உணவுப் பொருள்களை மிகுதியாகப் பெற லாம். ஆகையாலேதான், இந்தியாவில் ஆதியில் குடியேறின ஜனங்களெல்லாம் இச்சமவெளியிலேயே தங்கி வாழ்ந்து வந் தார்கள். வடகிழக்கினின்றும் **மங்கோலியர்** என்னும் அன் னியர்கள் இச்சமவெளிகளை நாடி வந்து குடியேறியுள்ளார்கள்.

விந்திய சாத்பூரா மலைகளால் பிரிக்கப்பட்டுள்ள தென் னிந்தியாவின் சரித்திரம், வட இந்தியாவின் சரித்திரத்தைப் போலல்லாமல்,தனித்திருப்பது நாம் கவனிக்கவேண்டுவதாகும். இங்கு வசித்து வந்தவர்களின் நாகரிகம் பழக்க வழக்கங்கள் முதலியன, வட இந்தியாவிலுள்ளவர்களின் நாகரிகம் பழக்க வழக்கங்களை ஒத்தன அல்ல. தென்னிந்தியாவில் இயற்கையா யமைந்துள்ள துறைமுகங்கள்,பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தென்னிந்தியரால் உபயோகப்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், நமது நாட்டில் கப்பல் வியாபாரமும், கப்பற் படைகளும் குறைவாகவே இருந்தன. ஆகையால், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள மாலுமிகள் முதல் முதல் வியாபாரத்திற்காக நம் மேற்குக் கடற்கரையிலுள்ள துறைமுகங்களை அடைந்து, பிறகு நாடெங்கும் பரவினார்கள்.

பயிற்சி :

1. இந்தியாவின் இயற்கை அமைப்பைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய் ?
2. இமய மலையினால் நம் தேச சரித்திரம் எவ்வாறு பாதிக் கப்பட்டுள்ளது ?
3. தென்னிந்தியாவின் சரித்திரம் வட இந்தியாவின் சரித் திரத்திற்கு மாறுபட்டிருப்பது ஏன் ?

2. இந்தியாவின் பூர்விகக் குடிகள்

[பழைய கற்காலம் - புதிய கற்காலம் - உலோக காலம் - ககிரோக்கள் - முண்டாக்கள் - கோலர்கள் - அவர்கள் சந்ததியார்கள்]

பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பு மனித வாழ்க்கை இப்பொழுது நாம் காணும் மாதிரி நாகரிகமுற்றதாய் இருக்கவில்லை. முதன்முதலில் மனிதர்கள் காட்டு மிராண்டிகளாய்க் காடுகளில் அலைந்து திரிந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு மலைகளிலுள்ள குகைகளும் மரக்கிளைகளுமே வீடுகளாயின.

பழைய கற்காலம்

அவர்கள் அறிந்திருந்த ஒரே தொழில், மிருகங்களை வேட்டையாடுவதுதான். அவர்கள் காய்கனிகிழங்குகளையும், வேட்டையாடிய மிருகங்களின் மாமிசத்தையும் புசித்து வந்தார்கள். வேட்டையாடத் தக்க ஆயுதங்களும் அவர்களிடம் இல்லை. கற்களால் கரடுமுரடாகச் செதுக்கப்பட்ட கருவிகளையே அவர்கள் உபயோகித்து வந்தார்கள். அத்தகைய கருவிகள் தென்னிந்தியாவில் பல பாகங்களில் கிடைத்துள்ளன. அக்காலத்தைப் **பழைய கற்காலம்** எனக் கூறுகிறோம்.

நாளடைவில் மனிதர்கள் அவ்வாயுதங்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் செய்யக் கற்றுக்கொண்டார்கள்; சிக்கிமுக்கிக் கற்களால் நெருப்புண்டாக்கும் விதத்தையும் அறிந்துகொண்டார்கள்; பிறகு சில மிருகங்களைப் பழக்கி, அவைகளை வளர்க்கலானார்கள்; கடைசியாக நிலத்தை உழுது பயிரிட்டு, அதன் பலன்களை அனுபவிக்கக் கற்றுக்கொண்டார்கள். இக்காலத்தில் அவர்கள் ஓடித் திரிந்து வேட்டையாடி ஜீவனம் செய்யாமல் வீடுகளைக் கட்டிக்கொண்டும், ஆடு மாடுகளை வளர்த்தும்,

புதிய கற்காலம்

நிலத்தை உழுது பயிரிட்டும் ஜீவனம் செய்து வந்தார்கள். இக் காலத்தைப் **புதிய கற்காலம்** என்று கூறுகிறோம்.

இக்காலத்தில் வசித்து வந்த மனிதர்களிடம் ஒரு நூதனப் பழக்கம் இருந்து வந்தது : அவர்கள் இறந்த பிரேதங்களைப் பெரிய கல் ஜாடிகளில் உட்கார வைத்து, அந்த ஜாடிகளைப் பூமியில் புதைத்து வந்தார்கள். அத்தகைய ஜாடிகள் புதுக் கோட்டை, திருநெல்வேலி ஜில்லாக்களில் அகப்பட்டுள்ளன.

படம் 2. கற்கால மண் பாண்டங்கள்

உலோக காலம்

காலம் செல்லச் செல்ல மனிதர்கள் உலோகங்களின் உபயோகத்தை அறியலானார்கள். முதலில் இரும்பினால் கருவிகளும், ஆயுதங்களும் செய்தார்கள் ; பிறகு தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களையும் கையாண்டார்கள்.

நீகிரோக்கள்
முண்டாக்கள்
கோலர்கள்

இந்தியாவின் ஆதிக் குடிமக்கள் **அந்தமான் தீவு, மலேயா** முதலிய நாடுகளில் வசிக்கும் **நீகிரோக்கள்** எனப்படும் ஜாதியார்களைப் போன்றவர்கள். அவர்களுக்குப் பிறகு முண்டாக்கள், கோலர்கள் என்னும் ஜாதியார்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் வமிசத்தினரை இப்பொழுதும் விந்திய மலைப்பிரதேசத்திலும், **ராஜபுதனம், நாகபுரி** முதலிய இடங்களிலும், தென்னிந்தியாவில் சில இடங்களி

படம் 3. நீலகிரி மலையில் வசிக்கும் தோடர்கள்

லும் காணலாம். தென்னிந்தியாவில் அவர்கள் **குறும்பர்கள்** என வழங்கப்படுகிறார்கள். நீலகிரி மலையில் வாழும் தோடர்களும் அவ்வினத்தைச் சேர்ந்தவர்களே.

பயிற்சி :

1. பழைய கற்காலத்திற்கும் புதிய கற்காலத்திற்கும் உள்ள வேற்றுமைகள் யாவை ?
2. இந்தியாவின் ஆதிக் குடிமக்கள் யார் ? அவர்கள் சந்ததியார்கள் இப்பொழுது எங்கெந்தப் பாகங்களில் காணப்படுகிறார்கள் ?

3. திராவிடர்கள்

[திராவிடர்கள் வருகை - அவர்கள் தோற்றம் - தொழில்கள் - பழக்க வழக்கங்கள் - சிந்து நதிப் பள்ளத்தாக்கின் புதைந்த நகரங்கள் - அவற்றின் நாகரிகம்]

வெகு காலத்திற்கு முன்னமே **திராவிடர்கள்** நம் நாட்டில் வசித்து வந்ததாகத் தெரிய வருகிறது. ஆனால், அவர்கள் இந்நாட்டிலேயே பிறந்தவர்களா, அயல்நாட்டினின்று இங்கு வந்து குடியேறினவர்களா என்பது சரித்திரக்காரர்களால் தீர்மானிக்க முடியவில்லை. ஒருசாரார் அவர்கள் ஆசியாக்கண்டத்தின் மேற்குப் பாகத்தினின்று வந்தவர்கள் என்று கூறுகிறார்கள்.

திராவிடர்கள் யார் ?

திராவிடர்கள் புதிய கற்காலத்திலேயே இந்தியாவில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் சிறந்த நாகரிகமுடையவர்கள்; கறுத்த தேகமும், சுருட்டை மயிரும், தடித்த உதடுகளும், தட்டையான மூக்கும் படைத்தவர்கள்.

அவர்கள் தோற்றம்

இப்பொழுது வழங்கும் **தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்** முதலிய பாஷைகள், திராவிட பாஷைகளேயாகும். அவர்களுடைய முக்கியமான தொழில்கள் ஆடுமாடுகள் மேய்த்தல், வேட்டையாடுதல் முதலியன. ஆனால், அவர்களுக்கு விவ

அவர்கள் நாகரிகம்

சாயமும் தெரிந்திருந்தது. அவர்கள் பல கூட்டத்தினர்களாய்ப் பிரிந்திருந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. அவர்கள் வழிபாடு செய்துவந்த தெய்வங்கள், மரங்களும், பாம்புகளும், மழையும், காற்றும், பிறவும் ஆகும். நாள்



படம் 4. திராவிடர்கள் நாக ஆராதனை செய்தல்

அடைவில் அவர்கள் பல ராஜ்யங்களை ஸ்தாபித்துச் செம்மையாய் ஆண்டு வந்தார்கள். பிற நாடுகளுடன் வியாபாரப் போக்கு வரவுகளும் ஏற்படலாயின.

புதைந்த நகரங்கள்

சில வருஷங்களுக்கு முன்பு **பஞ்சாபில் மோகஞ் சோதாரோ, ஹாரப்பா** என்னும் இடங்களில் இரு புதைந்த நகரங்களைத் தோண்டிப் பார்த்தார்கள். அவைகளில் நல்ல செங்கற்களால் கட்டப்பட்ட அழகிய மாளிகைகள் இருக்கின்றன; விசாலமான தெருக்களும், சுகாதாரத்திற்கு அவசியமான சாக்கடைகளும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரக் கல்லினால் செய்யப்பட்ட கத்திகளும், பானைகளும், தங்கம், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களினால் செய்யப்பட்ட

ஆபரணங்களும், கண்ணாடி வளையல்களும், பல வித முத்திரைகளும். கிடைத்துள்ளன. இவைகளினின்று பல ஆண்டு



படம் 5. மோகஞ்சோதாரோவின் புதைபட்ட பட்டணம்

களுக்கு முன்னரே திராவிடர்கள் உயர்ந்த நாகரிகமுற்றிருந்தார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.

பயிற்சி :

1. திராவிடர்கள் யார் ?
2. அவர்களது நாகரிகத்தைப்பற்றி நீ என்ன கற்றுக் கொண்டாய்?
3. சிந்து நதிப் பிரதேசத்தின் நாகரிகத்தைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுது.

4. ஆரியர்கள்

[ஆரியர்களின் முதலிருப்பிடம் - அவர்கள் வந்ததன் காரணம் - வந்த வழி - அவர்கள் தோற்றம் - தொழில்கள் - பழக்க வழக்கங் கள் - வேதங்கள் - பிற்காலத்து ஆரியர்கள்]

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் **ஆரியர்கள்** என் னும் ஒரு ஜாதியார்கள் இந்தியாவில் குடியேறினார்கள். அவர் கள் முதலில் மத்திய ஆசியாவின் சமவெளிகளில் வசித்து வந் தார்கள். அவர்கள் ஆடு மாடுகள் மேய்ப் பதை முக்கியமான தொழிலாகக் கொண் டிருந்ததால், அவர்கள் ஓரிடத்திலேயே இருந்து வாழ இயலாமற் போயிற்று. மத் திய ஆசியாவில் குளிர் அதிகம் ஆகையால், அங்குச் செழிப் பான புல் விளையும் நிலங்கள் இல்லை. நாளடைவில் ஜனத் தொகை அதிகரிக்கவே, ஆரியர்கள் தங்கள் நாட்டை விட்டுச் செழிப்பான வேறு தேசங்களுக்குச் செல்லலானார்கள். ஒரு பகுதியினர், **ஐரோப்பாக்** கண்டத்திற்குச் சென்றனர்; மற் றொரு பகுதியினர், **பாரசீகத்**திற்குச் சென்று, அங்கிருந்து இந்துகுஷ் மலையைக் கடந்து, ஆப்கானிஸ்தானத்தை அடைந்து, கைபர்க் கணவாய் வழியே இந்தியாவிற்குள் வந்தனர். அவர் கள் முதலில் சிந்து நதிக் கரையில் வசித்து வந்தார்கள்; பிறகு பஞ்சாபு, கங்கைச் சமவெளிகளிலும் பரவினார்கள்.

ஆரியர்களின் குடியேற்றம்

ஆரியர்கள், திராவிடர்களைவிட நாகரிகத்தில் தேர்ச்சி அடைந்தவர்கள். அவர்களது தோற்றம் அழகு பொருந்தியது. அகன்ற நெற்றியும், வளைந்த மூக்கும், சிவந்த மேனியும் அவர் கள் தோற்றத்தின் முக்கிய அம்சங்கள். அவர்கள் மிக்க தைரியமும் போர்த் திறமையும் வாய்ந்தவர்கள்.

அவர்கள் தோற்றம்

அவர்கள் தெய்வ ஆராதனைக்காகத் தொடுத்த தோத்திரப் பாட்டுகளே **வேதங்கள்** எனப்படும். அவைகள் **இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்** என நான்கு வகைப்படும். அவற்றில் இருக்கு வேதமே மிகப் பழைமையானது. அவ்வேதத்தினின்று ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப்பற்றி அறிதல் கூடும். அவ்வேதங்கள் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளன.

வேதங்கள்

ஆரியர்கள், திராவிடர்களைப் போலப் பல கூட்டத்தினர்களாய்ப் பிரிந்து வாழ்ந்தார்கள். அனேகமாக அவர்கள் ஸம்ஸ்கிருத பாஷையே பேசினார்கள். அடிக்கடி அக்கூட்டத்தார் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டனர். ஆனால், திராவிடர்களை எதிர்த்துப் போராடுவதில் அவர்கள் ஒத்துழைத்தார்கள். அவர்கள் வந்த காலத்தில் இந்நாட்டில் வசித்து வந்த பூர்விகக் குடிகளைத் **தாசர்கள்** என்று பெயரிட்டு வழங்கினார்கள். ஆரியர்கள் கிராமங்களில் மரத்தால் கட்டப்பட்ட வீடுகளில் வசித்து வந்தார்கள்.

வாழ்க்கை

ஒவ்வோர் ஆரிய குடும்பத்திற்கும் தந்தையே தலைவன். அவன் சொற்படியே மற்றெல்லாரும் நடந்து வந்தனர். தெய்வங்களுக்குப் பூஜை செய்வதும், தன் குடும்பத்திற்கு உணவு சம்பாதிப்பதும் அந்தத் தந்தையின் முக்கிய கடமை. ஆரியப் பெண்களுக்குப் பல உரிமைகள் இருந்தன. சில குடும்பங்களில் ஸ்திரீகளுக்குத் தங்கள் கணவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளச் சுதந்திரம் இருந்தது. அவ்வாறு நடைபெற்ற கலியாணத்திற்குச் **சுயம்வரம்** என்பது பெயர். விதவைகள் மறு முறை கலியாணம் செய்துகொள்ளலாம். ஆரியர்களிடம் பல மனைவியர்களைக் கலியாணம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்து வந்தது.

ஆரியர்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலைப் போற்றி வந்தார்கள்; **பார்லி** (Barley), கோதுமை முதலிய தானியங்களைப் பயிரிட்டார்கள்; ஆனால், நெல்லை விளைக்கவில்லை; பெரிய மாட்டுப் பண்ணைகளையும் வைத்திருந்தார்கள்; பால், வெண்ணெய் முதலியவைகளை அதிகமாகப் புசித்து வந்தார்கள். அவர்கள் மாமிசம் சாப்பிடுவதும் உண்டு. **சோமம்** என்னும் செடியின் சாறாகிய **சோமரச**த்தையும், தானியத்தினின்று எடுக்கப்பட்ட **சுரா** என்னும் பானத்தையும் பருகுவதில் அவர்களுக்கு விருப்பம் அதிகம். ஒவ்வொருவருக்கும் நூல் நூற்கவும் நெசவு நெய்யவும் தெரியும்.

மதம்

அவர்கள் இயற்கைத் தோற்றங்களையே பெரிதும் தொழுது வந்தார்கள்; மழைக்குத் தெய்வமாக வருணனையும், இடிக்குத் தெய்வமாக இந்திரனையும், பகலுக்குத் தெய்வமாகச் சூரியனையும், நெருப்புக்குத் தெய்வமாக அக்கினித் தேவனையும் பூஜித்து வந்தார்கள். இத்தெய்வங்களுக்கு அவர்கள் சாதாரணமாக எருதுகளைப் பலியிட்டார்கள். அவர்கள் ஒரு காரியத்தை முன்னிட்டுச் செய்வதற்கு முன் அந்தக் காரியத்தில் ஜயமளிக்குமாறு தங்கள் தெய்வங்களைப் பிரார்த்திப்பது வழக்கம்.

யுத்தக் கருவிகள்

ஆரியர்கள் உலோகங்களின் உபயோகத்தை நன்கறிந்திருந்தார்கள். அவர்கள் போரில் முக்கியமாக வில்லையும் அம்பையும் உபயோகித்த போதிலும், ஈட்டி கோடரி முதலிய ஆயுதங்களையும் கையாண்டார்கள். ஆரியப் பிரபுக்கள் மரத்தால் செய்யப்பட்ட இரதங்களில் ஏறிச் சென்றார்கள்.

ஆரியர்களுள் ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் ஒவ்வோர் அரசர் இருந்தனர். அவருக்குப் புரோகிதரும் சேனாதிபதியும்

முக்கிய மந்திரிமாராவர். அவருக்குப் புத்திமதி கூறுவதற்கு ஜனங்களின் சபை ஒன்று இருந்து வந்தது.

ஆட்சி முறை

ஒவ்வொரு கிராமத்திற்கும் அவ்வாறே ஒரு தலைவர் இருந்தார்! அவரே அந்தக் கிராமத்தின் விவகாரங்கள் யாவற்றையும் பரிபாலித்து வந்தார்.

பிற்காலத்து ஆரியர்கள் :

நாளடைவில் ஆரியர்கள் வடஇந்தியா முழுவதையும் தங்கள் வசமாக்கிக்கொண்டு தங்களுக்குக் கீழ்ப்படிந்த திராவிடர்களோடு கலந்து வசித்து வந்தார்கள். ஆகையால், வடஇந்தியாவிற்கு **ஆரியாவர்த்தம்** என்னும் பெயர் வழங்கலாயிற்று.

இருக்கு வேத கால ஆரியர்களிடம் ஜாதிப் பிரிவினைகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், பிற்காலத்தில் இத்தகைய ஜாதி பேதங்கள் ஏற்படலாயின. தெய்வங்களை வழிபட்டு யாகங்கள் முதலியவைகளை நடத்தி வைத்த வகுப்பினருக்குப் **பிராமணர்** என்னும் பெயர் வழங்கலாயிற்று.

ஜாதிப் பிரிவினை

நாட்டை விரோதிகளிடமிருந்து சண்டை செய்து பாதுகாத்து வந்தவர்கள் **க்ஷத்திரியர்கள்** எனப்பட்டார்கள். வியாபாரத்தை முக்கிய தொழிலாக மேற்கொண்டவர்களுக்கு **வைசியர்கள்** எனவும், விவசாயம் முதலிய இதர வேலைகளைக் கவனித்து வந்தவர்களுக்குச் **சூத்திரர்கள்** எனவும் பெயர்கள் வழங்கலாயின.

வேதங்களுக்குப் பின்னர் மத சம்பந்தமான அனேக புத்தகங்கள் எழுதப்பட்டன. அவைகளுள் முக்கியமானவை, **பிராமணங்க**ளும், **உபநிஷத்துக**ளும்.

நாட்கள் செல்லச் செல்ல, கங்கை நதிப் பிரதேசத்தில் தோன்றிய ராஜ்யங்கள் பலமடைந்தன. அவைகளுள் முக்கியமானவை **பாஞ்சாலம், கௌரவம், கோசலம், மகதம்,**

ஆரிய ராஜ்யங்கள்



படம் 6. ஆரிய நாடுகள்

விதேகம், காசி என்பன. இந்த ராஜ்யங்களில் நடந்த முக்கியமான சம்பவங்களைப் பற்றித்தான் ***இராமாயணம், மகாபாரதம்*** என்னும் இரு பெரிய இதிகாசங்கள் எழுதப்பட்டுள்ளன.

(i) இராமாயணம்

இராமாயணம், அயோத்தியை ஆண்ட தசரதச் சக்கரவர்த்தியாரின் முதல் புதல்வரான இராமரைப்பற்றிக் கூறுகின்றது. இராமருடைய சகோதரர் மூவர். அவர்கள் பெயர்கள் ***பரதர், சத்துருக்கினர், இலட்சுமணர்*** என்பன. இராமருக்கு இளமையிலேயே மிதிலை அரசராகிய ஜனகரின் புதல்வியான ***சீதை***யை மணம் செய்வித்தனர். பரதரின் தாயான ***கைகேயி***, ராஜ்யத்தைத் தன் மைந்தருக்கே கொடுக்கவேண்டுமென்று தசரதரைக் கேட்டதுமல்லாமல், இராமர் 14 வருஷம் காட்டில் வாசம் செய்ய வேண்டுமென்றும் கேட்டனள்.

கதைச் சுருக்கம்

அப்படியே இராமர் சீதையுடனும் இலட்சுமணருடனும் காட்டுக்கு ஏகினர்; காட்டில் பலவிதக் கஷ்டங்களை அனுபவித்தனர். அப்பொழுது இலங்கையை ஆண்டுவந்த ***இராவணன்*** என்னும் கொடிய அரக்க அரசன், இவர்கள் இருந்த இடத்தை அணுகி, இராம லட்சுமணர் இல்லாத சமயத்தில் சீதையை அபகரித்துச் சென்றான். இராம லட்சுமணர் அவளை மீட்பதற்காகச் சென்று, கிஷ்கிந்தையில் வசித்துவந்த ***சுக்கிரீவன்*** உதவியைப் பெற்று, அரக்கர்களுடன் ஒரு பெரும்போர் தொடுத்தனர். அப்போரில் இராவணனும் மற்றும் பல அரக்கரும் மாண்டனர். சீதையை மீட்டுக்கொண்டு யாவரும் சந்தோஷமாய் அயோத்திக்குத் திரும்பிச் சென்றனர். 14 வருஷங்களும் கடந்துவிட்டபடியால், இராமர் மகுடம் சூட்டப்பெற்று, அயோத்தியை ஆண்டார்.



படம் 7. இராமர் வில்லை முறித்துச் சீதையை மணத்தல்

(ii) மகாபாரதம்

கதைச் சுருக்கம்

மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள கதை, அஸ்தினபுரத்தை ஆண்டுவந்த **திருதராஷ்டிரர், பாண்டு** என்பவர்களின் குமாரர்களைப் பொறுத்தது. திருதராஷ்டிரருக்கு நூறு குமாரர் இருந்தனர். அவர்களுள் பெரியவன், **துரியோதனன்** என்பவன். பாண்டுவிற்கு ஐந்தே பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள், **தருமர், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன்** என்பன. திருதராஷ்டிரரின் பிள்ளைகளான **கௌரவர்**களுக்கும் பாண்டுவின் பிள்ளைகளான **பாண்டவர்**களுக்கும் பகைமை இருந்து வந்தது. கௌரவர்கள், பாண்டவர்களை அழிக்கப் பல சூழ்ச்சிகள் செய்தார்கள். துரியோதனன் ஏற்படுத்திய சூதாட்டத்தில் தருமர் தோற்றுப்போகவே, பாண்டவர்கள் தங்கள் நாட்டை இழந்து பன்னிரண்டு வருஷம் வனவாசம் செய்ய நேரிட்டது. அதற்குப் பிறகும் ஒரு வருஷம் அவர்கள் தங்களை யாரும் அறியாதபடி மறைந்து வசிக்க வேண்டியதாயிற்று. நிபந்தனையின்படி அவர்கள் அப்பதின்மூன்று வருஷங்களுக்குப் பின்னர்த் தங்கள் நாட்டைத் திருப்பித் தருமாறு கேட்டபொழுது கௌரவர்கள் கொடுக்கவில்லை. அதன் பயனாக ஒரு பெரும்போர் நிகழ்ந்தது. **குருக்ஷேத்திரம்** என்ற இடத்தில் 18 நாட்கள் தீவிரமாய்ப் போர் நிகழ்ந்தது. கடைசியில் பாண்டவர்களே வெற்றியடைந்தார்கள். அந்தப் போரில் **கிருஷ்ண பரமாத்துமா** பாண்டவர்களுக்கு உதவி புரிந்தார்.

பகவத்கீதை

சண்டை நடக்கும்பொழுது அருச்சுனன் மனச் சோர்வுற்றுத் தன் சகோதரர்களான கௌரவர்களுடன் சண்டைசெய்ய இயலாதென்று கூறியதால், கிருஷ்ணர் அவனுக்குப் பல நீதிகளை எடுத்துரைத்தார். அந்நீதிகள் அடங்கிய புத்தகத்திற்குப் '**பகவத்கீதை**' என்பது பெயர்.



படம் 8. பாரதப் போர்க்களம்

இந்த நூல்களிலிருந்து நாம் அக்காலத்துப் பழக்க வழக்கங் களைப்பற்றி அறிகின்றோம். அக்கால அரசியல் முறையும், ஜனங்களின் வாழ்க்கையும் இவற்றில் தெளிவாகக் கூறப்பட் டுள்ளன. இராமாயணக் கதையை ஆதாரமாகக் கொண்டு சில சரித்திரக்காரர்கள் ஆரியர்கள்தென்னிந்தியாவிலும்பரவிய தாகக் கூறுகிறார்கள். இந்நூல்களில் அனேக நீதிகளும் புலப் படும்.

பயிற்சி:

1. ஆரியர்களின் முதலிருப்பிடம் எது? அவர்கள் ஏன் அன்னிய நாடுகளுக்குச் சென்றார்கள்?
2. ஆரியர்களின் நாகரிகத்தைப்பற்றி ஒரு குறிப்பெழுது.
3. புராணங்களிலிருந்து நாம் அறியும் சரித்திர சம்பந்த மான விஷயங்கள் யாவை?
4. நான்கு ஜாதிகள் யாவை? ஒவ்வொரு ஜாதியாருக்குமுரிய முக்கியமான கடமைகள் யாவை?

5. ஆரியர்களின் சமூக நிலைமை

[ராஜ்யங்கள் - குடியரசுகள் - கிராமங்கள் - தொழில்கள் - வியாபாரம் - அரசரின் அதிகாரம் - கல்வி வளர்ச்சி - மதச் சடங்கு கள் - நான்கு ஆச்சிரமங்கள் - சொத்துப் பிரிவினை]

வட இந்தியாவில் ஆரியர்கள் அனேக சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள். அவற்றில் சில, அரசர்களால் ஆளப்பட்டு வந்தன; சில குடியரசுகளும் இருந்தன. அரசரின்றி, ஜனங் களின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்டுவந்த ஆட்சி முறைக்குக் **குடி அரசு** என்பது பெயர். இந்த ராஜ்யங்களின் எல்லையைக் குறிப்பிடுவது கடினம். ஏனெனில், ஆரியர்கள் ஒரே இடத்தில்

ராஜ்யங்கள்

நிலையாய் இல்லாமல், அடிக்கடி நகர்ந்துகொண்டே இருந்தார்கள்.

அக்காலத்தில் பட்டினங்கள் அதிகமாய் இல்லை. ஒவ்வொரு ராஜ்யத்தின் தலைநகருமே அந்நாட்டின் முக்கிய பட்டினமாய் இருந்தது. பொதுவாக ஜனங்கள் கிராமங்களிலேயே வசித்து வந்தார்கள். கிராமங்களுக்கருகில் அடர்ந்த காடுகள் இருந்தன. அவை கள்வர்களுக்கும் குற்றவாளிகளுக்கும் மிருகங்களுக்கும் உறைவிடமாய் இருந்தன. இல்லற வாழ்க்கையைத் துறந்த துறவிகளும் அங்கு வசிப்பார்கள்.

கிராமங்கள்

அக்காலத்தில் ஜனங்கள் பற்பல தொழில்களைக் கற்றறிந்திருந்தார்கள். அவற்றில் முக்கியமானது பயிர்த்தொழில். ஆனால், ஆரியர்கள் பயிர்த்தொழிலை ஈனமான வேலை என்று கருதினபடியால் அதைத் தாங்களே செய்யாமல், தங்கள் அடிமைகளைக்கொண்டு செய்து வந்தார்கள். பெரிய கிராமங்களில் தச்சர்களும், கருமார்களும், தட்டார்களும், ஆயுதம் போர்க் கவசம் முதலியன செய்பவர்களும் இருந்து வந்தார்கள். பட்டாலும், பருத்தியாலும் அழகிய ஆடைகளை நெய்பவர்களும் இருந்தார்கள்.

தொழில்கள்

நாட்டில் வியாபாரம் பெருகுவதற்குச் சரியான வசதிகள் இல்லை. ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் சரியான பாதைகள் இல்லை. கரடுமுரடான பாதைகளே இருந்து வந்தன. கள்வர்களின் பயமும் அதிகமாய் இருந்தது. ஆகையால், வியாபாரிகள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும்பொழுது கூட்டம் கூட்டமாய்த்தான் செல்வார்கள். அக்காலத்திலேயே பண்டங்களின் மீது வரிகள் விதிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், பொன், பட்டு, தந்தம், சந்தன

வியாபாரம்

மரம் முதலியவைகளை விற்பனை செய்து வந்தார்கள். நாணயங்கள் அனேகமாகத் தாமிரத்தால் செய்யப்பட்டு வழங்கின; சில பொன் நாணயங்களும் உண்டு.

அரசரின் அதிகாரம்

வேத காலத்து அரசர்களைவிடப் பிற்காலத்து அரசர்கள் அதிக அதிகாரம் படைத்தவர்கள். ஜனங்களின் சபைகள் தங்கள் உரிமைகளை இழந்தன. மந்திரி சபை இருந்தது. ஆனால், அரசரின் இஷ்டப்படியே மந்திரிகள் நடந்து வந்தார்கள். இவ்வாறாக அரசர்கள் சர்வாதிகாரம் பெற்றிருந்த போதிலும், அவர்கள் தங்கள் குடிகளின் க்ஷேமத்திற்காகவே பாடுபட்டு வந்தார்கள். ஜனங்கள் தங்கள் வருவாயில் அரசருக்கு ஆறில் ஒரு பங்கு நில வரியாகக் கொடுத்தார்கள். ஆனால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டால், அரசர் நில வரி வசூலிப்பதில்லை. அச் சமயங்களில் ஜனங்களின் உணவிற்காக அரசாங்கத் தானியக் களஞ்சியங்களிலிருந்து தானியம் கொடுத்து உதவப்பட்டது.

கல்வி

அரசர்களும் பெரிய பணக்காரர்களும் பல கலாசாலைகள் ஏற்படுத்திக் கல்வியைப் பரவச் செய்தார்கள். கல்விமான்கள் மிக்க மரியாதையுடன் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்கு வெகுமானங்கள் அளிக்கப்பட்டன. ஒரு குருவினிடம் கற்கும் சிஷ்யர்கள், அவருக்கு எல்லாவித பணிவிடைகளும் செய்து, அவரிடமிருந்து பாடம் கற்பார்கள். பாடங்களை எழுதும் பழக்கம் அக்காலத்தில் இல்லை. வாய்ச் சொற்களாலேதான் பாடங்கள் போதிக்கப்பட்டன.

மதச் சடங்குகள்

நாளடைவில் யாகங்களும் மந்திரங்களும் அதிகரித்தன. இருக்கு, யஜுர், சாம வேதங்களைப் பாராயணம் செய்து பாடுவதற்குத் தனித்தனி குருமார்கள் இருந்தார்கள். **கல்ப சூத்திரங்கள்** என்னும் நூல் குருமார்கள் அனுசரிக்க வேண்டிய முறை

களைப்பற்றிக் கூறுகிறது. **ஜோதிட சாஸ்திரமும் வியாகரணம்** என்னும் இலக்கணமும் விருத்தியடைந்துகொண்டு வந்தன.

அக்காலத்துப் பிராமணரின் வாழ்க்கை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்பிரிவுகள், **பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்** எனப்படும்.

நான்கு ஆச்சிரமங்கள்

பிராமணன் சிறுவனாயிருக்கும் பொழுதே அவனுக்குப் பூணூல் போடுவார்கள். அதற்குப் பிறகு அவன் கலியாணமாகும் வரை **பிரமசாரி**யெனக் கருதப்படுவான்; பிரமசாரியாய் இருக்கும்பொழுது ஒரு குருவை அணுகிச் சாஸ்திரங்கள் முதலியவற்றைக் கற்பான்; பிறகு கலியாணஞ் செய்துகொண்டு, இல்லற வாழ்க்கையை நடத்துவான். அப்பொழுது அவனுக்குக் **கிருகஸ்தன்** எனப் பெயர் வழங்கும். அவன் வயது முதிர்ந்தவுடன் காடுகளுக்குச் சென்று கடவுளைத் தியானிப்பதில் காலத்தைக் கழிப்பான். அவ்வாறிருக்கும் நிலைமையை **வானப்பிரஸ்த ஆச்சிரமம்** என்பர். கடைசியாக அவன் துறவறம் பூண்டு **சன்னியாசி**யாகித் தான் இறக்கும் வரை தன் நாட்களைப் போக்குவான்.

தந்தையாரது ஆஸ்தியை அவர் இறந்த பிறகு அவர் புத்திரர்கள் சமமாகப் பங்கிட்டு எடுத்துக்கொள்வார்கள். ஆனால்,

சொத்துப் பிரிவினை

சில இடங்களில் மூத்த பிள்ளை அதிகமான பங்கையும், மற்றும் சில இடங்களில் கடைசிப் பிள்ளை அதிகமான பங்கையும் எடுத்துக்கொள்வது வழக்கமாயிருந்தது.

பயிற்சி:

1. பண்டைக் காலத்துக் கிராம வாழ்க்கை எவ்வாறு இருந்தது ?



ஸாஞ்சியில் உள்ள பௌத்த தோப்பு.

2. பண்டைக் கால அரசரின் அதிகாரத்தைப்பற்றி நீ என்ன அறிந்துகொண்டாய் ?
3. பழைய காலத்துக் கல்வித் திட்டத்திற்கும் இப்போதுள்ள கல்வித் திட்டத்திற்குமுள்ள பேதங்கள் யாவை ?
4. பிராமணனுக்குரிய நான்கு ஆச்சிரமங்கள் யாவை ?

6. புத்த மதமும் சமண மதமும்

(i) புத்த மதம்

புதிய மதங்களின் தோற்றம்

ஆரியர்களின் மதத்தில் சடங்குகள் யாகங்கள் முதலியவை அதிகரித்து விட்டபடியால், சில ஜனங்களுக்கு அது திருப்தியை அளிக்கவில்லை. ஆகவே, புதிய மதங்கள் தோன்றலாயின. முற்காலத்தில் இமயமலையை அடுத்திருந்த **சாக்கிய நாடு** என்ற நாட்டில் **கபிலவஸ்து** என்ற ஒரு நகரம் இருந்தது. அந்நகரை ஆண்டுவந்த **சுத்தோதனர்** என்ற அரசரின் குமாரர் **புத்தர்.** அவரது இயற்பெயர், **சித்தார்த்தர்** என்பது. அவர் இளம்பருவத்தில் ஆயுதப் பயிற்சி செய்து, ராஜ வமிசத்தில் பிறந்த ஒருவன் கற்க வேண்டியவை யாவும் கற்றுக்கொண்டார்; வேதங்களையும் தத்துவ நூல்களையும் கற்றார்; தம் காலத்தில் இருந்த ஜனங்களின் நிலைமையையும், அரசியல் விஷயங்களையும் தெரிந்துகொண்டார். இளம்பிராயத்திலேயே **யாசோதரை** என்பவளை மணந்து, சில காலம் அவளுடன் வாழ்ந்து வந்தார். அவர்களுக்கு **இராகுலன்** என்ற ஒரு மைந்தன் பிறந்தனன். சகல சௌகரியங்களும் வாய்ந்திருந்த போதிலும், சித்தார்த்தர் வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டார்.

அவ்வாறு அவர் வெறுப்புக் கொண்டதற்கு ஒரு காரணம் கூறப்படுகிறது:

ஒரு நாள் சித்தார்த்தர் கபிலவஸ்துவின் தெருக்கள் வழியே சென்றார். அப்பொழுது ஏழை மக்களையும், பிணியால் வருந்துபவர்களையும், இறந்த பிரேதத்தின் ஊர்வலத்தையும் அவர் கண்டார். அந்தக் காட்சிகள் அவரை ஆழ்ந்த துயரத்

படம் 9. புத்தர் ஸ்தூபி

திற்காளாக்கின. செல்வத்திற் செல்வக் குமாரராய் வளர்ந்த அவருக்கு மானிட வாழ்க்கையின் கஷ்டங்கள் அன்றுதான் புலப்பட்டன. ஆகவே, ஒரு நாள் நள்ளிரவில் அவர் தம் அரண் மனையை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் காட்டிற்கு ஓடிவிட்

டார். இவ்வாழ்க்கையின் பந்தத்தினின்று ஆத்துமாவை விடுவிக்க ஒரு வழி தேடவேண்டுமென்பதே அவருடையநோக்கம். அவர் முதலில பல மஹான்களையடைந்து அவர்களின் உபதேசங்களைப் பெற்று, உண்மை ஞானம் பெற வழி தேடினார். ஆனால், அவை அவருக்குச் சமாதானத்தை அளிக்கவில்லை. பிறகு அவர் **கயை** என்னுமிடத்திற்குச் சென்று, அங்கு ஓர் அரச மரத்தின் கீழ்த் தங்கிக் கடவுளைத் தியானித்தார்.ஒருநாள் திடீரென்று அவருக்கு ஞானோதயமாயிற்று. ஆகையால் அம்மரத்திற்கு '**மஹாபோதி மரம்**' என்றும், அவருக்கு '**புத்தர்**' என்றும் பெயர்கள் வழங்கலாயின. அவருக்கு ஞானோதயமான இடம் **புத்த கயை** என்று பெயர் பெற்றது.

புத்தமதக் கோள்கைகள்

அவர் கண்டுபிடித்த பெரிய உண்மை என்னவெனில், 'இவ்வாழ்க்கையின் துன்பங்களுக்கெல்லாம் மனிதனின் ஆசையே காரணம். ஆகையால், அவ்வாசையை ஒழிக்க மனிதன் இவ்வுலகத்தில் அதிக பற்று இல்லாமல்,மனச்சாட்சிக்குவிரோதமின்றிநடத்தல் வேண்டும். இதற்கு எட்டு வழிகள் உண்டு. அவையாவன: ஒரு மனிதன்களங்கமற்ற மனத்துடனும், உண்மையான நோக்கத்துடனும், பேச்சு எண்ணம் காரியம் இவைகளில் தூய்மையாகவும், நியாயமான வாழ்க்கையுடனும், உண்மையான தியானத்துடனும் இருத்தல் வேண்டும். பிற ஜீவன்களைத் துன்புறுத்தல் கூடாது.' இவைகளே புத்த மதத்தின் முக்கியமான கொள்கைகள்.

புத்த சங்கம்

புத்தர் மனிதரின் கஷ்டத்திற்கும்துக்கத்திற்கும் காரணத்தையும், அவைகளிலிருந்து எப்படி விடுதலை அடையக்கூடும் என்பதையும் நாற்பது வருஷகாலம் ஜனங்களுக்குப் பிரசாரம் செய்து, தமது 80-ஆம் வய்தில் **குசி நகரம்** என்ற இடத்தில்இறந்தார். அவர் இறக்கும் முன்னரே **புத்த சங்கம்** என்று கூறப்

படும் புத்த சன்னியாசிகளும் சன்னியாசினிகளும் அடங்கிய கூட்டத்தை ஏற்படுத்தினர்.

புத்த மதத்தைச் சார்ந்தவர்கள் மூன்று விஷயங்களைப் போற்றலானார்கள். அவை, **புத்தர்**, புத்த மதக் கொள்கைகள் அல்லது **புத்த தர்மம், புத்த சங்கம்** என்பன.

ii. சமண மதம்

ஏறக்குறையக் கௌதம புத்தர் தம் மதத்தைப் பிரசாரம் செய்துவந்திருந்த காலத்தில் **வைசாலி** என்ற நாட்டில் **வர்த்தமானர்** என்ற ஒரு மகான் பிறந்தார். அவர் அத்தேசத்தின் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர். புத்தரைப் போலவே வர்த்தமானரும் தம் இளமையிலேயே, தம் நாட்டைவிட்டுக் காட்டிற்குச் சென்றார். பன்னிரண்டு வருஷங்கள் அலைந்த பின்னர் அவருக்கு ஞானோதயம் ஆயிற்று. அவருக்கு அதன் பிறகு **மகாவீரர், ஜினர்** அல்லது **ஜயித்தவர்** என்னும் பெயர்கள்வழங்கலாயின.

வர்த்தமானர்

சமண மதத்தின் முக்கியமான கொள்கைகள் மனிதன் ஜீவராசிகளைத் துன்புறுத்தல் கூடாதுஎன்பதை வற்புறுத்தின. ஆனால், மனிதன் தன்னைத்தானே சித்திரவதை செய்து கொண்டு தற்கொலை செய்துகொள்வானேயானால், மோக்ஷம் அல்லதுஆத்துமாவின் விடுதலை அடையலாம் என்று கூறின. ஜைன சங்கத்தில் சன்னியாசிகளும் சன்னியாசினிகளுமேயன்றி, வாழ்க்கையில் ஈடுபட்ட மனிதர்களும் சேரலாம். ஜைனர்களின் **மூன்று இரத்தினங்கள்** உண்மையான நம்பிக்கை, உண்மையான அறிவு, உண்மையான நடத்தை என்பன. ஜைன மதத்தைச் **சமண மதம்** எனவும் வழங்குவர்.

சமண மதக் கொள்கைகள்

மகாவீரர் இம்மதத்தை 30 வருஷ காலம் போதித்த பின்னர் இறந்தார்.

இவ்விரு மதங்களின் ஒற்றுமைகள்

புத்த மதமும் சமண மதமும் ஏறக்குறைய ஒரே காலத்தில் தோன்றியவை. அவைகளின் நோக்கமும் ஒன்றே. அது, மனிதனைப் பிறவிக் கடலினின்று காக்க வேண்டுமென்பதே. இவ்விரண்டும் பிராமண மதத்திற்கு முக்கியமான வேதங்களையும் யாகங்களையும் வெறுத்தன; ஜீவஹிம்ஸை கூடாதென்பதை வற்புறுத்தின; ஜாதி பேதங்களை ஒழித்தன.

வேற்றுமைகள்

ஆனால், ஜைன மதத்தின் சில கொள்கைகளைப் புத்த மதத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஜைன மதத்தினர் உயிரற்ற வஸ்துக்களிலும் ஆத்துமா இருக்கிறதென்று கூறினர். மிருகங்களுக்கு யாதொரு தீங்கும் இழைக்கலாகாதென்று கூறிய இச்சமண மதம், மனிதன் அன்ன ஆகாரமின்றித் தன்னைச் சித்திரவதை செய்துகொள்வதே மோக்ஷத்திற்குச் சாதனம் என்று கருதிற்று. ஜைன சன்னியாசிகளில் **திகம்பரர்** என்னும் ஒரு வகுப்பினர் உண்டு. அவர்கள் ஆடைகள் அணிவதில்லை. இவை யாவும் புத்த மதத்திற்கு விரோதமான கொள்கைகளாகும்.

புத்த மதம் பரவியதற்குக் காரணங்கள்

புத்த மதம் சமண மதத்தைவிட அதிகமாகப் பரவலாயிற்று. புத்தரின் வசீகரத் தோற்றமும், அவர் சங்கத்தில் சேர்ந்த சன்னியாசிகளின் ஊக்கமும், அக்காலத்தில் ஆண்டுவந்த அரசர்களின் ஆதரவும் அதற்கு முக்கிய காரணங்களாகும். அவற்றுடன் புத்தர் கொள்கைகள் பின்பற்றுவதற்கும் எளியனவாய் இருந்தன. ஆனால், இக்காலத்தில் புத்த மதம் இந்தியாவில் உன்னத நிலைமையில் இல்லை. சமண மதம் **குஜராத்து, ராஜபுதனம்** முதலிய இடங்களில் முக்கிய மதமாய் இருந்து வருகிறது.

பயிற்சி:

1. புத்தர் காட்டிற்கு ஏகக் காரணம் என்ன ?
2. புத்த மதக் கொள்கைகள் யாவை ?
3. சமண மதத்தை உண்டாக்கியவர் யார் ?
4. புத்த மதத்திற்கும் சமண மதத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் யாவை ?
5. புத்த மதம் அதிகமாகப் பரவியதற்குக் காரணங்கள் யாவை?

7. மகத ராஜ்யம் : சைசுநாக வமிசம்

[மகத ராஜ்யம் - சிசுநாகர் - பிம்பிசாரர் - அஜாத சத்துரு - நந்த வமிசம் - மகாபதும நந்தர் - சந்திரகுப்த மௌரியர்]

சைசுநாக வமிசம்

ஆரியர்கள் அனேக ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள் என்பதை முன்னமே படித்துள்ளோம். அவற்றில் தென் பீஹாரில் தோன்றிய மகத ராஜ்யம், பலம் பொருந்தியதாயிற்று. சுமார் கி.மு. 600-ஆம் ஆண்டில் **சிசுநாகர்** என்பவர் **கிரிவிரசம்** என்ற நகரில் ஒரு புதிய வமிசத்தை ஸ்தாபித்தார். அவ்வமிசத்தின் ஐந்தாம் அரசரான **பிம்பிசாரர்** பிரதானமானவர். அவர் **கோசலம், வைசாலி, அங்கம்** முதலிய தேசங்களை ஜயித்தார்; **ராஜகிருகம்** என்ற ஒரு புதிய பட்டணத்தை நிர்மாணித்தார். அதுவே மகத ராஜ்யத்திற்குத் தலைநகரமாயிற்று.

பிம்பிசாரர்

அஜாதசத்துரு

பிம்பிசாரரின் மூத்த புதல்வரான **அஜாதசத்துரு** என்பவர், தம் தந்தையாரைக் கொன்றுவிட்டுப் பட்டத்திற்கு வந்ததாகக் கூறப்படுகிறது. இவர் காலத்திலும் கோசலம், வைசாலி நாடுகளுடன் போர் நிகழ்ந்தது. இவரும் ஒரு புதிய பட்டி

னத்தை ஸ்தாபித்தார். இதன் பெயர் **பாடலிபுத்திரம்** என்பது. இதுதான் பிற்காலத்து மகத அரசர்களுக்குத் தலைநகராய் விளங்கிற்று. அஜாதசத்துரு மிகவும் சிறந்த போர் வீரர்.

அஜாதசத்துருவிற்குப் பின்னர், சைசுநாக வமிசத்தைச் சேர்ந்த இரண்டு அரசர் ஆண்டனர். அவர்களுக்குப் பிறகு மகத ராஜ்யத்தில் **நந்தர்கள்** என்ற ஒரு புதிய வமிசத்தார் ஆளத் தொடங்கினர். அவ்வமிசத்தின் முதல் அரசர் **மகாபதும நந்தர்**. இவர் கி. மு. 5-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பட்டத்திற்கு வந்தார் எனக் கொள்ளலாம். இவருக்குப் பின்னர் இவருடைய எட்டுப் பிள்ளைகள் மகத ராஜ்யத்தை ஆண்டார்கள். கடைசி நந்த அரசர், கி. மு. 321-ஆம் ஆண்டில் சிம்மாசனத்தினின்று நீக்கப்பட்டுச் **சந்திரகுப்த மௌரியர்** என்பவர் அரசரானார். நந்தர்களின் ஆட்சியில் மகத ராஜ்யம் மிக்க செல்வாக்குடன் விளங்கியது.

நந்த வமிசம் : மகாபதும நந்தர்

மகத ராஜ்யத்தைச் சந்திரகுப்த மௌரியர் நந்த அரசரிடமிருந்து கைப்பற்றியதைப்பற்றி, **விசாகதத்தர்** என்ற ஒரு புலவர் வடமொழியில் '**முத்திரா ராக்ஷஸம்**' என்ற ஒரு நாடகத்தில் எழுதியிருக்கிறார்.

பயிற்சி :

1. சைசுநாக வமிசத்தின் முக்கிய அரசர்கள் யார்? அவர்களைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுது.
2. நந்த வமிசத்தினரைப் பற்றி நீ என்ன கற்றுக்கொண்டாய்?

8. அலெக்ஸாந்தரின் படையெழுச்சி

[அலெக்ஸாந்தரின் பிறப்பு வளர்ப்பு - அவரது பேரவா - பாரசீக சாம்ராஜ்யத்தை ஜயித்தல் - இந்தியாவின்மீது படையெடுப்பு- 'போரஸ்' என்னும் **புருஷோத்தமர்** - படையெடுப்பின் பயன்கள்]

மகத ராஜ்யத்தில் நந்த வமிசத்தார் ஆண்டு வந்த காலத்து இந்தியாவில் ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது: தென்கிழக்கு ஐரோப்பாவில் **கிரீஸ்** என்னும் புகழ்பெற்ற நாடு இருக்கிறது. அந்நாட்டில் கி.மு.330-ஆம் ஆண்டில் **அலெக்ஸாந்தர்** என்ற போர் வீரர் ஆண்டு வந்தார். அவர் வெகு தைரியசாலி; மிகுந்த விடாமுயற்சி உடையவர்; இளமையிலேயே யாவரும் அடக்கமுடியாத **பியூஸிபாலஸ்** என்ற குதிரையை அடக்கிச் சவாரி செய்தவர். அலெக்ஸாந்தரின் கூர்மையான புத்தியையும் சாமர்த்தியத்தையும் விளக்க ஒரு கதை கூறப்படுவதுண்டு:

அலெக்ஸாந்தரின் பிறப்பு



படம் 10. அலெக்ஸாந்தர்

அலெக்ஸாந்தர் வாலிபராயிருந்த பொழுது, விற்பனைக்காக வந்த ஒரு குதிரையைப் பார்க்க அவர் தந்தையாரான **பிலிப்பு** மன்னருடன் சென்றார். அக்குதிரை மிகவும் உயர்ந்த ஜாதிக் குதிரை. அக்குதிரையை அடக்கி அதன்மீது ஏறிச் சவாரி செய்யப் பலர் முயன்றனர். ஆனால், அவர்கள் ஏறி உட்கார்ந்ததும் குதிரை அவர்களைக் கீழே வீழ்த்தியது. அலெக்ஸாந்தர் தம் தந்தையார் அனுமதி பெற்றுக்கொண்டு, அக்குதி

ரையின் மீதேறிச் சவாரி செய்தார். அக்குதிரை தன் நிழலைக் கண்டே மிரளுகிறது என்பதை அறிந்து, அது தன் நிழலைப் பாராத வண்ணம் அதன் தலையை நிமிர்த்தவே, அது ஒழுங்காய் ஓடிற்று. அக்குதிரையின் பெயர் **பியூஸிபாலஸ்.** அதையே அலெக்ஸாந்தர் தம் போர்க் குதிரையாக வைத்துக்கொண்டார். இதிலிருந்து அவருடைய புத்திக் கூர்மையும், மனோ தைரியமும் வெளியாகின்றன அல்லவா ?

பாரசீகத்தை ஜயித்தல்

அலெக்ஸாந்தர் இளம்பிராயத்திலேயே பட்டத்துக்கு வந்தார். அவருக்கு உலகத்தையே ஜயித்துத் தாம் ஏக சக்கிராதிபதியாய் ஆள வேண்டும் என்ற பேரவா இருந்தது. அவர் தம் 19-ஆம் வயதில் அன்னிய நாடுகளை ஜயிக்க வேண்டுமென ஒரு பெரிய சேனையுடன் வெளிக் கிளம்பினார். அவர் முதன் முதலாகப் பாரசீக சாம்ராஜ்யத்தைத் தாக்கினார். சுமார் மூன்று வருஷங்கள் வரையில் கடும்போர் நடந்தது. கடைசியில் அலெக்ஸாந்தர் வெற்றி பெற்று, பாரசீகத்திற்கு அதிபதியானார். கி. மு. 327-ஆம் ஆண்டில் அவர் **ஹிந்துகுஷ்** மலையைக் கடந்து, ஆப்கானிஸ்தானத்திற்குள் பிரவேசித்தார்; அதை ஜயித்த பின்னர், இந்தியாவின் செல்வத்தை அறிந்துகொண்டு, அதைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்னும் அவாவுடன் கைபர்க் கணவாயின் வழியே நம் நாட்டின் மீது ஒரு பெரிய சேனையுடன் படையெடுத்து வந்தார்.

இந்தியாவின்மீது படையெழுச்சி

அக்காலத்தில் வட இந்தியாவில் அனேக சிறு ராஜ்யங்கள் இருந்தன. அந்த ராஜ்யங்களின் அரசர்கள் ஒருவரோடொருவர் எப்பொழுதும் போர் புரிந்துகொண்டிருந்தார்கள். அன்னிய நாட்டார் நம் நாட்டிற்குப் படையெடுத்து வந்த பொழுதுங்கூட அவரை எதிர்க்க அவர்கள் ஒன்று சேரவில்லை. அப்பொழுது பஞ்சாபில், **தக்ஷசீலம்** என்



படம் 11. அலெக்ஸாந்தரின் படையெழுச்சி

னும் தலைநகரைக்கொண்ட ஒரு சிறந்த ராஜ்யம் இருந்தது. முன் காலத்தில் தக்ஷசீலம் கல்வியில் புகழ் பெற்றது. அதை ஆண்டுவந்த **அம்பி** என்னும் அரசர், அலெக்ஸாந்தருடன் போர் புரியாமல், சமாதானம் செய்துகொண்டார். ஆனால், ஜீலம் நதிப் பிரதேசத்தில் ஆண்டுவந்த '**போரஸ்**' என்னும் **புருஷோத்தமர்,** அலெக்ஸாந்தரை எதிர்த்தார். ஜீலம் நதிக் கரையில் பெரிய யுத்தம் நடந்தது. அதில் போரஸ் வீரத்துடன் சண்டை செய்து, கடைசியில் தோல்வியடைந்தார். அலெக்ஸாந்தர் போரஸின் வீரத்தை மெச்சி, அவர் நாட்டை அவருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டதுமன்றி, வேறு சில நாடுகளையும் கொடுத்துத் தம் பிரதிநிதியாக அவற்றை ஆளும்படி அவருக்கு உத்தரவளித்தார்.

அலெக்ஸாந்தருக்கு மகத நாட்டைத் தாக்க வேண்டுமென்ற நோக்கம் இருந்தது. ஆனால், அவருடைய படை வீரர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பவேண்டுமென்று பிடிவாதமாகக் கூறினார்கள். அலெக்ஸாந்தர் அவர்கள் விருப்பத்திற்கிணங்க வேண்டியதாயிற்று. **பீயாஸ்** நதிக்கரையில் பன்னிரண்டு கல்

திரும்புதல்

தூண்களைத் தமது வெற்றியின் ஞாபகார்த்தமாக நிறுத்திவிட்டுத் தம் நாட்டுக்குத் திரும்பலானார். திரும்புமுன்னர் அவர் தம் பரிவாரங்களுடன் படகுகளில் சிந்து நதி முகத்துவாரம் வரையில் சென்றார்; அக்காலத்தில் நதிக்கரையில் வசித்துவந்த பழங்குடி மக்களையும் வென்றார்; பின்னர்த் தம் சைனியத்தின் ஒரு பகுதியைக் கடல் மார்க்கமாக அனுப்பிவிட்டு, மற்றொரு பகுதியைத் தாம் அழைத்துக்கொண்டு பாரசீகத்தின் தலைநகராகிய **பாபிலோ**னைக் கி.மு. 325-ஆம் ஆண்டில் அடைந்தார்; அங்குக் கி.மு. 323-ஆம் ஆண்டில் தம் முப்பத்திரண்டாம் வயதில் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.

அவர் இந்தியாவில் 19 மாதமே தங்கினர். ஆகையால், அவர் வருகையால் இந்தியாவில் பெரிய மாறுதல்கள் ஏற்படவில்லை. ஆனால், இந்தியர்கள் கிரேக்கரின் யுத்த முறையையும், கிரேக்கரின் சிற்ப சாஸ்திரத்தையும் கற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இந்துக்களின் வான சாஸ்திரத்திலும் கிரேக்கர்களின் கருத்துகள் புலப்படுகின்றன. இந்தியாவிற்கு மேற்கே உள்ள தேசங்களுக்கும் போக்கு வரவு சாதனங்கள் ஏற்பட்டன.

படையெடுப்பின் பயன்கள்

அலெக்ஸாந்தர் இறந்த பின்பு அவருடைய பெரிய சாம்ராஜ்யம் நிலைகுலைந்து போயிற்று. பல சிறிய ராஜ்யங்கள் தோன்றி, அவருடைய தளகர்த்தர்களால் ஆளப்பட்டு வந்தன.

பயிற்சி :

1. அலெக்ஸாந்தரின் குணாதிசயங்களை விளக்க ஒரு சிறு கதை எழுது.
2. அவர் எந்தெந்த நாடுகளை ஜயித்தார் ?
3. அவர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்ததன் பயன்கள் என்ன ?

9. மௌரிய அரசர்கள்

[சந்திரகுப்த மௌரியர் - சாணக்கியர் - ஸெலியூகஸ் என்பவரின் படையெடுப்பு - மெகஸ்தனீஸ் - பிந்துசாரர் - அசோகர் - கலிங்க யுத்தம் - புத்த மதத்தைப் பரவச் செய்தல்]

அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த பொழுதுதான் மகத தேசத்தில் நந்த வமிசத்துக் கடைசி அரசரான **மகாபதும நந்தர்** ஆட்சி செய்து வந்தார். அவர் ஒரு

கொடுங்கோல் மன்னர். அவருக்கு நெருங்கின உறவினரான **சந்திரகுப்த மௌரியர்**, ஒரு பெரிய

மௌரியர் என்னும் பெயர்க் காரணம்

சேனையைத் திரட்டிக்கொண்டு மகததேசத்தின்மீது படையெடுத்து வந்து, மகாபதும நந்தரைத் தோற்கடித்துவிட்டு, தாமே மகத ராஜ்யத்திற்கு அரசரானார். அவருக்கு **மௌரியர்** என்னும் பெயர் வந்ததற்கு அனேக காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவருடைய தாயாரின் பெயர் **மூரா தேவி** என்றும், ஆகையாலேதான் அவருக்கு மௌரியர் என்னும் பட்டப் பெயர் வந்ததாகவும் கூறுகிறார்கள். 'அவர் மோரிய வகுப்பைச் சார்ந்தவர் ஆகையால், அவருக்கு மௌரியர் என்னும் பெயர் வழங்கியது,' என்பர் சிலர். சந்திரகுப்தர் நந்த அரசனிடம் சேனாதி

சாணக்கியர்

பதியாய் இருந்து, அரசருடன் ஏற்பட்ட பகையினால், நாட்டை விட்டு விலக வேண்டியதாயிற்று. ஆகையால், அவர் மகாபதும நந்தரைத் துரத்திவிட்டுத் தாமே அரசராக வேண்டுமென்று தீர்மானித்தார். அப்படி நந்த அரசரை விரட்டிவிட்டுப் பட்டத்தைக் கைப்பற்றியதில் **சாணக்கியர்** என்ற ஒரு பிராமணர் அவருக்கு உதவி புரிந்தார். சந்திரகுப்தர் அரசரான பின், சாணக்கியர் மந்திரியாராக நியமனம் செய்யப்பட்டார். சாணக்கியர் **அர்த்த சாஸ்திரம்** என்னும் ஓர் அரிய நூலை எழுதி இருக்கிறார்.

பஞ்சாபை ஜயித்தது

அலெக்ஸாந்தர் இறந்த பின்னர், பஞ்சாபு குழப்பமான நிலையிலிருந்தது. ஆகையால், சந்திரகுப்தர் அங்குள்ள கிரேக்கர்களைத் தோற்கடித்து, அந்நாட்டை எளிதாகக் கைப்பற்றிக்கொண்டார்.

கி.மு. 305-ஆம் ஆண்டில் **ஸெலியூகஸ்** என்ற **ஸிரியா** தேசத்துக் கிரேக்க அரசர், அலெக்ஸாந்தருக்குச் சொந்தமான இந்திய நாடுகளைச் சந்திரகுப்தரிடமிருந்து ஜயிக்க எண்ணி

இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். ஆனால், அவர் சந்திரகுப்தரால் எளிதில் தோற்கடிக்கப்பட்டார். பிறகு இரண்டு அரசர்களும் ஒரு சமாதானம் செய்துகொண்டார்கள். அதன்படி சந்திரகுப்தர் ஸெலியூகஸிற்கு 500 யானைகளைப் பரிசாக அளித்தார். ஸெலியூகஸ் ஆப்கானிஸ்தானம்,பலுச்சிஸ்தானம் முதலிய நாடுகளைச்சந்திரகுப்தருக்குக் கொடுத்தார். சந்திரகுப்தர் ஸெலியூகஸ் மகளைக் கலியாணம் செய்துகொண்டார்.

ஸெலியூகஸின் படையெடுப்பு

ஸெலியூகஸ், சந்திரகுப்தரின் சபைக்கு **மெகஸ்தனீஸ்** என்பவரைத் தூதுவராக அனுப்பினார். மெகஸ்தனீஸ் சில வருடங்கள் பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்தார். அவர் இந்தியாவில் கண்டவற்றைப்பற்றி '**இந்திகா**' என்னும் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தினின்று, நாம் அக்காலத்துப் பழக்க வழக்கங்களைப் பற்றியும், அரசியல் முறையைப் பற்றியும் அறிகிறோம். சந்திரகுப்தர் மகா பராக்கிரமசாலி. பெரிய சேனைகள் அவரிடம் இருந்தன. அவர் காலத்தில் மகத ராஜ்யம் மிகவும் புகழ் பெற்றது என்றும் நாம் மெகஸ்தனீஸிடமிருந்து அறிகிறோம்.

மெகஸ்தனீஸ்

சந்திரகுப்தர் தம் சாம்ராஜ்யத்தை வட இந்தியா முழுவதிலும் பரப்பியதாகத் தெரிகிறது. சில சரித்திரக்காரர்கள், அவர் தக்காணத்தின் ஒரு பகுதியை ஜயித்துத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டதாகக் கூறுகிறார்கள்.

சாம்ராஜ்யத்தின் பரப்பு

சந்திரகுப்தர் சுமார் 25 வருடங்கள் வரையில் ஆண்டார். கி.மு. 297-ஆம் ஆண்டில், அவர் துறவறம் பூண்டு, ஜைன மதக் குருவாகிய **பத்திரபாகு**என்பவருடன்மைசூருக்குச் சென்றதாகக்கூறப்படுகிறது.

ஆட்சியின் முடிவு

பிந்துசாரர்

சந்திரகுப்தருக்குப் பிறகு அவருடைய குமாரர் **பிந்துசாரர்** என்பவர் பட்டத்திற்கு வந்தார். அவர் கி. மு. 297-ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 274-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டு வந்ததாகத் தெரிகிறது. அவர் காலத்தில் முக்கியமான சம்பவங்கள் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை.

அசோகர்

பிந்துசாரர் இறந்த பின்னர், அவர் மைந்தரான **அசோகர்** கி. மு. 274-ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். அவருடைய தந்தையார் காலத்தில் அவர் ராஜப் பிரதிநிதியாய் வேலை பார்த்து அனுபவம் பெற்றவர்.

கலிங்க யுத்தம்

அசோகர் அரசரான பொழுது, தென் இந்தியாவிலுள்ள **கலிங்க நாடு** ஒன்றுதான் மகத சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்படவில்லை. ஆகையால், கி.மு. 261-ஆம் ஆண்டில் அசோகர் கலிங்க நாட்டின்மீது படையெடுத்தார். அவர் வெற்றிகொண்டு, அந்நாட்டைத் தம் கைவசமாக்கிக்கொண்டார்.

கலிங்க யுத்தத்தின் பயன்

ஆனால், கலிங்க யுத்தம் அசோகருடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படக் காரணமாயிற்று. 'சண்டையில் பலரைக் கொன்று ஒரு சிறு நாட்டைக் கைப்பற்றுவது தகாது,' என்று அசோகர் கருதினார். அவர் புத்த மதத்தைத் தழுவி, அதன் கொள்கைகளைப் பரப்புவதில் தம் எஞ்சிய வாழ்நாட்களைக் கழித்தார்.

வாழ்க்கையின் மாறுதல்

புத்த மதத்தின் முக்கியமான கொள்கையான அஹிம்ஸா தர்மத்தைப் பின்பற்றி, அசோகர் புலால் உண்ணல், வேட்டையாடுதல் முதலியவற்றை அறவே ஒழித்தார்; 'இனி எப்பொழுதும் யுத்தம் செய்வதில்லை!' என்று



படம் 12. அசோகர் நாட்டிய கற்றூண்

உறுதி செய்துகொண்டார்; அரசாட்சியை நடத்திவந்தபோதிலும் தம் சொந்த வாழ்க்கையில் ஒரு துறவியைப் போலக் காலங்கழித்தார்.

புத்த மதத்தைப் பரவச் செய்த வழிகள்

அசோகர், நாடெங்கும் பிரசாரம் செய்யுமாறு பௌத்த சன்னியாசிகளை அனுப்பினர்; அவர்களுக்குப் புதிய மடங்களைக் கட்டுவித்தார். அவருடைய சகோதரரும், சகோதரியாரும் இலங்கைக்குச் சென்று, புத்த மதத்தைப் பரவச் செய்தனர்.

படம் 13. கல்வெட்டுச் சாஸனங்கள்

பல கற்றூண்களில் புத்த மதக் கொள்கைகள் செதுக்கப்பட்டன. பல கற்பாறைகளிலும் குகைகளிலும் அத்தகைய

சாஸனங்களைக் காணலாம். அவற்றில் காணப்படும் முக்கிய மான கொள்கைகள், 'எல்லோரும் பிராணி களிடத்தில் அன்பாய் இருத்தல் வேண்டும்; தாய் தந்தையர் குரு முதலிய பெரியோர் களிடம் மரியாதையாய் நடத்தல் வேண்டும்; எக்காலத்திலும் உண்மையே பேச வேண்டும்; பிற மதத்தினரை வெறுத்தல் கூடாது,' என்பன.

சாஸனங்கள்

அசோகர் பௌத்தர் கூட்டமொன்றைக் கூட்டியதாகத் தெரிகிறது. அதில் புத்த மதக் கொள்கைகள் ஒழுங்குபடுத்தப் பட்டன.

அசோகர் ஜனங்களின் சௌகரியத்திற்காக அனேக சாலை களை ஏற்படுத்தினர்; பிரயாணிகள் தங்குவதற்கு அனேக விடுதி களைக் கட்டினர்; பல நகரங்களில் வைத் திய சாலைகளை ஏற்படுத்தினர். பஞ்சாபில் **ஸ்ரீநகரம்** என்னும் பட்டினத்தையும், நேபாளத்தில் **தேவபட்டணம்** என்னும் நகரத்தையும் அவர் கட்டினர் என்று கூறப்படுகிறது. அவர் **கிர்நார்** என்னும் இடத்தில் ஒரு பெரிய ஏரியைக் கட்டினர்.

மற்ற வேலைகள்

உலகத்திலேயே அசோகர் ஒரு பெரிய அரசரெனக் கரு தப்படுகிறார். அவர் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னமே யுத்தம் செய்வதை ஒழித்தவர். அவர் ஒரு மதத்தைத் தீவிர மாகப் பரவச் செய்வதில் ஊக்கம் கொண்ட பொழுதிலும் மற்றைய மதத்தினரையும் சமமாகப் பரிபாலித்து வந்தார்; நாட்டின் அபிவிருத்திக்காகவும் ஜனங்களின் சௌகரியத்திற்காகவும் தம் ஆயுள் முழுவதும் பாடுபட்டார். அப்பெரிய மன்னர் கி. மு. 232-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார்.

ஒரு பெரிய அரசர்

பயிற்சி:

1. சந்திரகுப்தருக்கு 'மௌரியர்' என்னும் பெயர் வழங்கியதற்கு என்ன காரணங்கள் கூறப்படுகின்றன?
2. அவர் வென்ற நாடுகள் எவை?
3. அவருக்குப் பின் அரசரானவர் யார்?
4. அசோகர் மனம் மாறக் காரணம் என்ன?
5. அவர் புத்த மதத்தைப் பரவச் செய்ய என்ன முறைகளைக் கையாண்டார்?
6. அவரைப் பெரிய அரசரெனக் கூறக் காரணம் என்ன?

10. மௌரிய ஆட்சி முறை

[அரசரின் அதிகாரம் - அமைச்சர் சபை - சேனையின் பலம் - நகர பரிபாலனம் - கிராம பரிபாலனம் - நாட்டின் நிலைமை]

மௌரிய அரசியல் முறை நாம் இவ்விருபதாம் நூற்றாண்டில் காணுவது போலவே இருந்தது.

அரசர்

அரசருக்குப் பூரண அதிகாரமிருந்தது. அவருடைய விருப்பத்தைத் தடுப்பதற்கு ஒருவித நிபந்தனையுமில்லை. அவர் ஆடம்பரமாய் வாழ்ந்து வந்தார்.

அமைச்சர் முதலியவர்

அரசர் இடும் கட்டளைகளை நிறைவேற்ற ஒரு மந்திரி சபையும் இருந்தது; அனேக உத்தியோகஸ்தர்களுமிருந்தார்கள். வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பளிக்க நியாயாதிபதிகள் இருந்தார்கள். குற்றவாளிகளுக்குக் கடுந்தண்டனைகள் விதிக்கப்பட்டன.

80,000 குதிரை வீரர்களும், 8000 இரதங்களும், 6000 போர் யானைகளும், இரண்டு லக்ஷம் காலாட்களும் அடங்கிய



படம் 14. அசோக சாம்ராஜ்யம்

ஒரு பெரும்படை இருந்தது. அச்சைனியத்தைக் கவனிக்க ஒரு தனி இலாக்கா இருந்தது. அசோகர் யுத்தத்தை நிறுத்திவிட்டபடியால் தம் சைனியத்தின் பலத்தைக் குறைத்தார்.

சேனை

நகரங்களின் விவகாரங்களைப் பரிபாலிப்பதற்குத் தனிச் சபைகளிருந்தன. தற்காலத்து நகர பரிபாலன சபைகளைப் போல சுகாதாரம், வியாபாரம் முதலிய விஷயங்கள் சபைகளால் கவனிக்கப்பட்டு வந்தன.

நகர பரிபாலனம்

கிராமங்களில் **பஞ்சாயத்து** என்று சொல்லப்படும் கிராமப் பெரிய மனிதர்களடங்கிய சபைகள் ஏற்பட்டு, கிராம விவகாரங்களைக் கவனித்து வந்தன.

பஞ்சாயத்து

நாட்டில் அமைதியிருந்தது. வியாபாரம் செழித்தோங்கியது. அந்நிய நாடுகளுடனும் வியாபாரப் போக்குவரவுகள் இருந்ததாகத் தெரிகிறது. பல அன்னியர்கள் இந்தியாவிற்கு வந்து சென்றார்கள்.

நாட்டின் நிலைமை

பயிற்சி:

1. மௌரிய அரசர்கள் தங்கள் ஆட்சியை நடத்திய முறையைப் பற்றி எழுது.
2. நகர பரிபாலன சபை என்பது யாது?
3. உன்னுடைய ஊரிலுள்ள சபையின் வேலைகள் என்ன?

11. மௌரியர்களுக்குப் பின் வந்த அரசர்கள்— கனிஷ்கர்

[மௌரிய சாம்ராஜ்யம் க்ஷீணமடைந்தது - சுங்க வமிசம் - கண்ணுவ வமிசம் - ஆந்திரர்கள் - குஷானர்கள் - கனிஷ்கர் - புதிய புத்த மதம் - கனிஷ்கர் அதைப் பரவச் செய்தது]

மௌரிய ராஜ்யம் க்ஷீணமடைந்தது

அசோகருக்குப் பின் வந்த மகத அரசர்கள் பலம் பொருந்தியவர்களல்ல. அவர்களுக்கு ஆளும் திறமையுமில்லை. இராணுவத்தின் பலமும் அசோகரால் குறைக்கப்பட்டதென்பதை நாம் அறிவோம். ஆகையினால், தலைநகருக்குத் தூரத்திலுள்ள மாகாணங்கள் சுயேச்சையாக ஆட்சிபுரியத் தொடங்கின. வடமேற்கு எல்லைப்புறத்தில் கிரேக்கர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டினார்கள். தென்மேற்குப் பாகத்தில் **ஆந்திரர்கள்** பலமடைந்து வந்தார்கள். அசோகரால் வெல்லப்பட்ட கலிங்க நாடும் சுயேச்சையடைய முயற்சி செய்தது.

கி.மு. 185-ஆம் ஆண்டில் **பிருகத்ரதர்** என்ற கடைசி மௌரிய அரசரை அவரிடம் சேனைத் தலைவராய் இருந்த **புஷ்யமித்திர சுங்கர்** என்பவர், சிம்மாசனத்தினின்று நீக்கி, தாம் அரசரானார். புஷ்யமித்திர சுங்கரால் ஏற்படுத்தப்பட்ட வமிசத்திற்குச் **சுங்கவமிசம்** என்பதுபெயர்.

சுங்க வமிசம்

அவரது ஆட்சியில் கிரேக்கர்கள் மறுபடியும் படையெடுத்து வந்ததாகத் தெரிகின்றது. ஆனால், புஷ்யமித்திரர் அவர்களைத் தோற்கடித்து, விரட்டிவிட்டார். அதற்குப் பின்னர், அவர் அஸ்வமேத யாகம் ஒன்று செய்தார். அவருடைய வமிசம் சுமார் 112 வருஷ காலம் மகத தேசத்திலும், அயோத்தியிலும், மத்திய இந்தி

யாவிலும் அரசு புரிந்து, கி. மு. 72-ஆம் ஆண்டில் முடிவடைந்தது.

கண்ணுவர்கள்

கடைசிச் சுங்க அரசரை அவரிடம் மந்திரியாயிருந்த **வாசுதேவ கண்ணுவர்** கொன்றுவிட்டுப் பட்டத்திற்கு வந்தார். அவரும், அவர் சந்ததியாரும் சுமார் 45 வருஷங்கள் ஆண்டார்கள். அதற்குப் பிறகு மகத ராஜ்யம் ஆந்திரர்கள் ஆளுகைக்கு உட்பட்டதாகத் தெரிகின்றது.

ஆந்திரர்கள்

ஆந்திர அரசர்கள் **சாதவாகனர்** அல்லது **சாலிவாகனர்** என்னும் பெயரைக் கொண்டவர்கள். முதன்முதலில் கிருஷ்ணு கோதாவரி நதிகளுக்கிடையில் உள்ள பிரதேசத்தை ஆண்டு வந்த அவ்வரசர்கள், நாளடைவில் தக்காணப் பீடபூமி முழுமையும் தங்கள் ஆட்சிக்கு உட்படுத்தினர்கள். பிறகு அவர்கள் மகத ராஜ்யத்துடன் போர் புரிந்து வெற்றி பெற்றதால், அவர்களது ஆதிக்கம் வட இந்தியாவிலும் பரவலாயிற்று. ஆந்திரர்கள் சுமார் 400 வருஷ காலம் ஆண்டு வந்தார்கள். ஆந்திர அரசர்களில் சிலர் வெகு கீர்த்திபெற்றிருந்தனர். அவர்களில் **கௌதமி புத்திர**ரும், **வாசிஷ்ட புத்திர**ரும் மிகவும் கியாதி பெற்றவர்கள்.

மௌரியர்கள் சாம்ராஜ்யம் அழியத் தொடங்கியபோது, அன்னியர் பலர் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் குடியேறினர். அவர்களுள் ஒரு ஜாதியினர் **சாக்கர்** எனப்படுவர். அவர்கள் சிந்துநதி முகத்துவாரத்திற்கருகிலும், மாளவத்திலும், கத்தியவாரிலும் சிறு ராஜ்யங்களை ஸ்தாபித்து, ஆண்டு வந்தார்கள். சாக அரசர்களுக்கு **க்ஷத்திரபர்கள்** என்னும் பெயர் உண்டு.



படம் 15. கனிஷ்க சாம்ராஜ்யம்

கி.மு. 2-ஆம் நூற்ருண்டில் **குஷானர்கள்** என்று வழங்கப்பட்ட புதிய ஜாதியார்கள் பாரசீகம், ஆப்கானிஸ்தானம் முதலிய பிரதேசங்களில் குடியேறிஞர்கள். சிறுகச் சிறுக அவர்கள் இந்தியாவுக்கு வடமேற்கிலிருந்த கிரேக்கர்களை வென்று, இந்தியாவிற்குள் பிரவேசித்தார்கள். அவர்களுள் சிறந்தவராய் விளங்கியவர் **கனிஷ்கர்** என்ற அரசர். கனிஷ்கர் கி.பி. 120 முதல் கி.பி. 160 வரையில் ஆட்சி புரிந்தார்.

குஷானர்கள்

அவரது சாம்ராஜ்யம் இந்தியாவிலுள்ளதைவிட இந்தியாவின் வெளிப்பாகத்தில்பெரிதாய்இருந்தது. இந்தியாவில் பஞ்சாபும் கங்கை நதிப் பிரதேசத்தில் வட மதுரை வரையிலும், தெற்கே கூர்ஜரம்வரையிலும் அவர் ஆட்சிக்குள் அடங்கியிருந்தன. அவர் **காஷ்கார், யார்க்கண்டு, கோடான்** முதலிய நாடுகளை ஜயித்து, தம் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

கனிஷ்கரின் சாம்ராஜ்யம்

கனிஷ்கர் புத்த மதத்தைச் சேர்ந்தவர். அவர் காலத்திற்கு முன்பே புத்த மதம் மாறுதல் அடைந்திருந்தது. புத்தர் போதித்த மதத்தில் கடவுளைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.



படம் 16. கனிஷ்கரின் நாணயம்

ஆனல், கனிஷ்கர் காலத்தில் பௌத்தர்கள் புத்த விக்கிரகங்களைத் தொழுதார்கள். **பௌத்தப் பள்ளி** என்னும் கோவில்கள் கட்டப்பட்டன. உற்சவங்கள் நடத்தப்பட்டன. கனிஷ்கர் இந்த நவீன புத்த மதத்தைச் **சீன, துருக்கிஸ்தானம்** முதலிய நாடுகளில் பரவச்

புதிய புத்த மதத்தைப் பரவச் செய்தது

செய்தார். அசோகரைப் போல அவரும் ஒரு புத்த மகா நாட்டைக் கூட்டுவித்தார். அச்சபைக்கு **நாகார்ச்சுனர்** எனும் பௌத்த சந்நியாசி தலைவராயிருந்தார். கனிஷ்கருடைய தலை நகரமான **புருஷபுரம்** அல்லது **பிஷாவ**ரில் புத்த சின்னங்களின்மேல் 400 அடி உயரமுள்ள ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டினார். கனிஷ்கர் மற்ற மதங்களையும் ஆதரித்து வந்ததாகத் தெரியவருகிறது.

கனிஷ்கருக்குப் பிறகு, அவருடைய சாம்ராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கியது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குஷான அரசர்களின் ஆட்சி முடிவடைந்தது. கனிஷ்கர் பெரிய கல்விமான். அவருடைய சபையில் பல பண்டிதர்களும், அறிஞர்களும் இருந்தார்கள். நாகார்ச்சுனரும், **அசுவகோஷ**ரும் புத்த சரித்திரத்தை எழுதியிருக்கிறார்கள்.

பயிற்சி :

1. மௌரிய சாம்ராஜ்யம் க்ஷீணிக்கக் காரணங்கள் யாவை?
2. சுங்க வமிசத்தின் முதல் அரசர் யார்? அவ்வமிசம் எவ்வளவு காலம் ஆண்டு வந்தது?
3. கண்ணுவர்கள் ஆண்ட காலத்தைக் குறிப்பிடு.
4. ஆந்திரர்களைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய்?
5. கனிஷ்கர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்? அவர் காலத்துப் புத்த மதம் எத்தகையது?

12. குப்த மன்னர்கள்

[சந்திர குப்தர் - சமுத்திர குப்தர் - தென்னிந்தியாவின் மீது படையெடுப்பு - இரண்டாம் சந்திர குப்தர் - பாஹியான - ஹூணர்களின் வருகை - அதன் பயன் - பொற்காலம்]

ஆந்திரர்கள் பலமும் குஷானர்கள் பலமும்குன்றிப்போன வுடன், வட இந்தியாவில் பல சிறு ராஜ்யங்கள் தோன்றின.

குப்தர்கள்

கி. பி. 4-ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் குப்த வமிசத்தினர் கங்கை நதிக் கரையிலுள்ள **கன்னோசியில்** தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபித்து, பலப்படுத்தினார்கள். அவ்வமிசத்திற்கு மூல புருஷர் **ஸ்ரீகுப்தர்.** முதலில் அவர் ஒரு சிற்றரசராயிருந்தார்.

சந்திர குப்தர்

ஸ்ரீகுப்தருடைய பேரரும், குப்த வமிசத்தின் மூன்றும் அரசருமான **சந்திர குப்தர்** பிற நாடுகளை வென்று, தம் ராஜ்யத்தைப் பெரிதாக்கினார். அவர் கி. பி. 320-ஆம் ஆண்டில் குப்த சகாப்தத்தை ஆரம்பித்தார். அதற்குப் பின் 10 வருஷங்கள் அரசு புரிந்து, அவர் இறந்தார்.

சந்திரகுப்தருடைய சாம்ராஜ்யம் வடக்கில் **இமயமலையி**லிருந்து தெற்கே **நருமதை**நதி வரையிலும், மேற்கே **சம்பால்** நதியிலிருந்து கிழக்கே கங்கை நதியின் முகத்துவாரம் வரையிலும் பரவி இருந்தது.

சமுத்திர குப்தர்

சந்திர குப்தரின் புதல்வர்களுள் மிகவும் திறமை வாய்ந்த **சமுத்திர குப்தர்** என்பவர் பட்டத்திற்கு வந்தார். அவர் சிறந்தகல்விமான்; மகாவீரம் பொருந்தியவர்; கவிகள் இயற்றுவதிலும் பாடுவதிலும் ஆற்றல் உள்ளவர். அவர் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்.



படம் 17. குப்த சாம்ராஜ்யம்

அவர் போர்களும் வெற்றிகளும்

அவர் வட இந்தியாவிலேயே ஒன்பது ராஜ்யங்களுடன் போர் புரிந்து, அவற்றைத் தமது ராஜ்யத்தில் இணைத்துக் கொண்டார். மௌரிய சாம்ராஜ்யத்திற்குப் பிறகு அவருடைய ராஜ்யமே பெரிது. பிறகு தென் இந்தியாவின்மீதும் படையெடுத்தார்; செல்லும் வழியில் கிழக்குக் கரையோரமாகத் தெற்கே **பல்லவர்** ஆண்டுவந்த காஞ்சீபுரம் வரையில்சென்று திரும்பும்பொழுது மேற்குக்கரை வழியாக வந்தார். அவர் அனேக அரசர்களை வென்ற போதிலும், அவர்கள் நாடுகளைத் தம் சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ள

படம் 18. குப்தரின் நாணயம்

வில்லை. ஆனால், அவரால் தோற்கடிக்கப்பட்ட அரசர்கள், அவருக்குக் கப்பம் கட்டினார்கள். அவர் தம்மை அவர்கள் சக்கரவர்த்தி என்று ஒப்புக்கொண்டு, தம் பாதுகாப்புக்குள் அடங்கி நடப்பது போதுமென்று எண்ணினார்.

புஷ்யமித்திரரைப் போலவே அவரும் ஓர் அசுவமேத யாகம் செய்தார்.

இலங்கைத் தூதுவர்

அவர் காலத்தில் இலங்கையை ஆண்டுவந்த **மேகவர்ணர்** என்ற அரசர், ஒரு தூது கோஷ்டியை அவர் சபைக்கு அனுப்பினார். அவர் வேண்டுகோளின்படி **கயையி**ல் ஒரு புத்த

மடம் கட்டுவதற்குச் சமுத்திர குப்தர் உத்தரவளித்தார். அவர் கி.பி. 375-ஆம் ஆண்டில் இறந்தார்.

இரண்டாம் சந்திர குப்தர்

சமுத்திர குப்தருக்குப் பின் அவருடைய புதல்வர் **இரண்டாம் சந்திர குப்தர்** சிங்காதனமேறினார். நாம் கதைகளில் படித்துள்ள **விக்கிரமாதித்தர்** இவரே என்று கூறப்படுகிறது. சாக்கர்கள் ஆண்டு வந்த மாளவம், கூர்ஜரம், சௌராஷ்டிரம் முதலிய நாடுகள் இவரால் ஜயிக்கப்பட்டுக் குப்த சாம்ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டன. இவருடைய புதல்வியார் தக்காணத்தில் ஆண்டுவந்த **பிருதிவி சேன**ரின் புதல்வருக்கு மணம் செய்விக்கப்பட்டபடியால், குப்த ஆதிக்கம் விந்திய மலைக்குத் தெற்கிலும் பரவலாயிற்று. இவர் ராஜ்யத்தின் தலைநகரம் **உஜ்ஜயினி**.

பாஹியான்

இரண்டாம் சந்திர குப்தரின் ஆட்சியில் **பாஹியான்** என்ற ஒரு சீன யாத்திரிகர் இந்தியாவிற்கு வந்தார். அவர் இங்குள்ள பௌத்த ஸ்தலங்களைச் சுற்றிப் பார்த்துப் பௌத்த நூல்களைச் சேகரித்துப் போக வேண்டுமென்ற நோக்கங் கொண்டவர். அவர் இங்குச் சில வருடங்கள் தங்கியிருந்து, தாம் கண்டவை கேட்டவைகளைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இதினின்று அக்காலத்து நாட்டின் நிலைமையையும், குப்த மன்னர்களின் ஆட்சி முறையையும் நாம் அறிகிறோம்.

சந்திர குப்தர் செவ்வனே ஆட்சி புரிந்தார். அவர் குடிகள் சௌக்கியமாயும் சந்தோஷமாயும் வாழ்ந்து வந்தார்கள். குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படவில்லை. ஆனால், குற்றம் செய்பவர்கள் அதிகம் இல்லை. அதிகமான வரிகள் விதிக்கப்படவில்லை.

சந்திர குப்தர் கல்விமான்களை ஆதரித்தார். அவருடைய சபையில் இருந்த அனேக வித்துவான்களுள் **காளிதாஸர்** மிகவும் பிரசித்திபெற்றவர். காளிதாஸர் எழுதியுள்ள அனேக காவியங்களுள் **சாகுந்தலம்** என்னும் நாடகம் மிக்க கீர்த்தி வாய்ந்தது. சந்திரகுப்தர் கி.பி. 413-ஆம் ஆண்டில் இறந்தார்.

கல்விமான்கள்

சந்திரகுப்தருக்குப் பின் வந்த அரசர் **குமார குப்தர்**.அவரது ஆட்சியின் கடைசியில் **ஹூணர்கள்** இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள். குமார குப்தரின் மைந்தரான **ஸ்கந்த குப்த**ரின் ஆட்சியிலும் ஹூணர்கள் அடிக்கடி வந்துகொண்டிருந்தார்கள். குப்த மன்னர்களுக்கும் ஹூணர்களுக்கும் அனேக போர்கள் நிகழ்ந்தன. அவற்றின் பயனாகக் குப்த சாம்ராஜ்யத்தின் பலம் குன்றத்தொடங்கியது. குப்த சாம்ராஜ்யத்தின் மாகாணங்கள் சுயேச்சையடைந்து, தனி ராஜ்யங்களாய்ப் பிரிந்துவிட்டன.

ஹூணர்களின் வருகை

குப்த மன்னர்கள் முழு வலிமையுடன் ஆண்டு வந்த காலத்தை, அதாவது, கி.பி. 300-ஆம் ஆண்டிலிருந்து 500-ஆம் ஆண்டுவரை, '**பொற்காலம்**' என்று கூறலாம்.

அரசாங்கம் ஜனங்களின் சௌகரியத்தையே கோரியது. வியாபாரப் பெருக்கால் நாட்டில் செல்வம் நிறைந்திருந்தது. சம்ஸ்கிருத பாஷையில் அரிய பெரிய காவியங்கள் எழுதப்பட்டன. **ஆரியபட்டர்** என்ற கணித நிபுணரும், **வராகமிஹிரர்** என்ற வான சாஸ்திரியாரும் இக்காலத்தில் இருந்தார்கள்.

குப்த காலம் பொற்காலம்

குப்தர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இந்து கோவில்கள் அனேகம் கட்டினார்கள். இவர்கள் பிற

மதத்தினரைத் துன்புறுத்தவில்லை; புத்த மதத்தை ஆதரித்த தாகவும் தெரிகிறது. ஆகையாலேதான் இக்காலத்தைப் **பொற் காலம்** என்று வழங்குகிறார்கள்.

பயிற்சி :

1. குப்தர்கள் யார்? குப்த சகாப்தம் எப்பொழுது ஆரம்பம் ஆயிற்று?
2. சமுத்திர குப்தர் ஒரு சிறந்த அரசர் என்பதை நீ எவ்வாறு அறிந்துகொண்டாய்?
3. குப்தர்களின் காலத்தைப் 'பொற்காலம்' என்று ஏன் வழங்குகிறார்கள்?
4. பாஹியான், ஹூணர்கள்—இவர்களைப்பற்றிக் குறிப்புகள் எழுது.

13. ஹர்ஷ வர்த்தனர்

[குப்த காலத்திற்குப் பின் வந்த புதிய வமிசங்கள்-வர்த்தனர் கள்-பிரபாகர வர்த்தனர் - ராஜ்ய வர்த்தனர் - ஹர்ஷ வர்த்தனர் - அவர் வென்ற நாடுகள் - சீன யாத்திரிகர்-ஹர்ஷரின் மேன்மை]

குப்த சாம்ராஜ்யம் அழிந்த பிறகு சுமார் நூறு வருஷங் கள் வரையில் வேறு பெரிய ராஜ்யம் ஒன்றும் தோன்றவில்லை.

வர்த்தனர்கள் முதலியவர்கள்

கன்னோசியில் **மௌகாரிகள்** என்ற வமி சத்தினர்களும், மாளவத்தில் குப்த வமிசத் தினரும், கூர்ஜரத்தில் **மைத்திரகர்கள்** என்ற வமிசத்தினர்களும், **தானேஸ்வரம்** என்னும் இடத்தில் **வர்த்தனர்**களும் ஆட்சி புரிந்து வந்தார் கள். இந்த ராஜ்யங்களில் தானேஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்ட வர்த்தனர்களின் ராஜ்யம், நாளடைவில் பலம் பொருந்தியதாய் விளங்கியது.

கி. பி. 6-ஆம் நூற்றுண்டின் இறுதியில் தானேஸ்வரத்தில் **பிரபாகர வர்த்தனர்** என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் காலத்திலும் ஹூணர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர்கள் தோற் கடிக்கப்பட்டார்கள். பிரபாகர வர்த்தனருக்கு **ராஜ்ய வர்த் தனர், ஹர்ஷ வர்த்தனர்** என்ற இரண்டு குமாரர்களும், **ராஜ்யஸ்ரீ** என்ற ஒரு புதல்வியும் இருந்தனர். ராஜ்யஸ்ரீயைக் கன்னோசியின் அரசரான **கிருஹ வர்ம**ருக்கு மணம் செய்வித் தனர்.

பிரபாகரவர்த்தனர்

பிரபாகர வர்த்தனர் இறந்துபோகையில் **ராஜ்ய வர்த்த னர்** பட்டத்திற்கு வந்தார். மாளவத்தின் அரசரும், வங்காள அரசரும் ஒன்று சேர்ந்து கன்னோசியைத் தாக்கி, கிருஹ வர்மரைக் கொன்றுவிட்டு, ராஜ்யஸ்ரீயைச் சிறைப்படுத்தினர். அவ்வரசர்களைத் தண் டித்துத் தம் சகோதரியைச் சிறையினின்று விடுவிப்பதற்காக ராஜ்ய வர்த்தனர் கன்னோசியின்மீது படை யெடுத்துச் சென்றார். ஆனால், அவர் அங்குச் சூழ்ச்சியால் கொல்லப்பட்டார். 'அப்பொழுது ஏற்பட்ட குழப்பத்தில் ராஜ்யஸ்ரீ சிறையினின்று தப்பி ஓடிவிட்டாள்.

ராஜ்ய வர்த்தனர்

தம் சகோதரர் இறந்த பின்னர், **ஹர்ஷ வர்த்தனர்** கி.பி. 606-ஆம் ஆண்டில் அரசரானார். மாளவ அரசர் தோற்கடிக்கப் பட்டு, அவருடைய நாடு ஹர்ஷரின் ராஜ்யத்துடன் சேர்க்கப் பட்டது. வங்காள அரசர், தம் நாட் டிற்கு ஓடிவிட்டார். அவரைத் தண்டிப்ப தற்கு ஹர்ஷர் ஒரு சேனையை அனுப்பி விட்டு, தம் சகோதரியைத் தேடுவதற்காகச் சென்றார்; சில வருஷங்கள் அலைந்து திரிந்த பின்னர்த் தம் சகோதரியை விந்திய மலைக் காடுகளில் கண்டுபிடித்து, அவளைத் தம்முடன்

ஹர்ஷ வர்த்தனர்

அழைத்துக்கொண்டு வந்தார். வங்காள அரசர் தோற்கடிக்கப்பட்டு, ஹர்ஷருக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக்கொண்டார். ராஜ்யஸ்ரீ கன்னோசியை ஆள மறுத்ததால், அதுவும் ஹர்ஷரால் ஆளப்பட்டு வந்தது. இவ்வாறு பஞ்சாபு நீங்கலாக வட இந்தியா முழுவதும் ஹர்ஷரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. ஹர்ஷர் கன்னோசியைத் தமது தலைநகரமாகச் செய்துகொண்டார். அவர் 40 வருஷ காலம் ஆட்சி புரிந்தார்.

தென்னிந்தியாவின் மீது படையெடுப்பு

ஹர்ஷர் தென்னிந்தியாவிலும் தம் சாம்ராஜ்யத்தைப் பரவச் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்தார். ஆனால், அவர் படையெடுத்து வந்தபொழுது தக்காணத்தின் மேற்குப் பாகத்தை ஆண்டு வந்த **இரண்டாம் புலகேசி** என்ற சாளுக்கிய அரசர் அவரைத் தோற்கடித்தார். ஆகையால், அவர் எண்ணம் நிறைவேறாமல் போயிற்று.

ஹர்ஷரின் குணாதிசயங்கள்

ஹர்ஷரைப் பெரிய சக்கரவர்த்தியார் என்று கூறுவது, அவர் பல்வேறு நாடுகளை வென்றதனால் மட்டுமன்று. அவர் புத்த மதத்தைப் பெரிதும் ஆதரித்தார்; தம் நாட்டின் குடிகளின் க்ஷேமத்திற்காக மிகவும் பாடு பட்டார்; கல்விமான்களைப் போற்றி வந்தார்.

ஹயூந்தஸாங்கு

அவர் ஆட்சி புரியுங்காலையில் **ஹயூந்தஸாங்கு** என்ற ஒரு சீன யாத்திரிகர் இந்தியாவிற்கு வந்தார். அவரும் **பாஹியானைப்** போலவே பௌத்த ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கும், பௌத்த நூல்கள் விக்கிரகங்கள் முதலியவற்றைச் சேகரிப்பதற்கும் வந்தவரே. அவர் இந்தியாவில் ஏறக்குறைய 15 வருடங்கள் இருந்தார். அவரும் தாம் பார்த்தவைகளைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். இதினின்று நாம் ஹர்ஷரின் குணாதிசயங்



படம் 19. ஹர்ஷ சாம்ராஜ்யம்

களைப் பற்றியும், அவருடைய ஆட்சி முறையைப் பற்றியும் அறிகின்றோம்.

அரசியல் முறை

ஹர்ஷர் ராஜாங்க விஷயங்களை நேரில் கண்காணித்து வந்தார்; தமது பரந்த சாம்ராஜ்யத்தை அடிக்கடி சுற்றிப் பார்வையிட்டு வந்தார். தங்கள் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கே குடிகள் அரசருக்கு வரியாகச் செலுத்தினார்கள். குப்தர்கள் காலத்தைவிட இக்காலத்தில் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள்.

ஹர்ஷரின் கல்வி மேன்மை

அரசரே சிறந்த கல்விமான். அவர் வடமொழியில் **நாகானந்தம், இரத்தினவளி** என்னும் இரண்டு அரிய நாடகங்களை எழுதியிருக்கிறார். அவரது சமஸ்தான வித்துவானாகிய **பாணர்** என்பவர், **ஹர்ஷ சரித்திரம்** என்னும் நூலை இயற்றியுள்ளார். ஹர்ஷர் அனேக கலாசாலைகளை ஏற்படுத்தினர். அவற்றுள் ஒன்றான **நளந்தாச் சர்வகலாசாலை**யில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் படித்து வந்தார்கள்.

புத்த மதத்தை ஆதரித்தது

புத்த மதத்தை அவர் அதிகமாக ஆதரித்த போதிலும், இந்துக்களின் தெய்வங்களையும் தொழுது வந்ததாகத் தெரிகின்றது; 5 வருடங்களுக்கு ஒரு தடவை **பிரயாகை** என்னும் கன்னோசியில் ஒரு பெரிய உற்சவத்தை நடத்தினர். அச்சமயங்களில் எல்லா மதத்தினருக்கும் தானங்கள் வழங்கப்பட்டன. ஹர்ஷர் அனேக புத்த மடங்களைக் கட்டினார்; பொது மக்களின் சௌகரியத்திற்காக அனேக வைத்தியசாலைகள், சத்திரங்கள், அழகிய ரஸ்தாக்கள் முதலியவற்றை ஏற்படுத்தினர். அவர் கி. பி. 648-ஆம் ஆண்டில் இறந்தார். அவர் இறந்த பிறகு அவரது சாம்ராஜ்யம் அழியத்

தொடங்கியது. இந்தியாவில் மறுபடியும் வேறு இந்து சாம்ராஜ்யம் ஏற்படவேயில்லை.

ஹர்ஷர் இறந்த பின்னர், அவரிடம் மந்திரியாராயிருந்த **அர்ச்சுனர்** என்பவர் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், அவரது ஆட்சி நீடித்திருக்கவில்லை. சீன தேசத்தினின்று வந்த தூதுவரை அவர் அவமரியாதையாக நடத்தினார். அதனால், சீனச் சக்கரவர்த்தியார் கோபம் கொண்டு, திபேத்து மன்னரைக் கன்னோசியின்மீது படையெடுக்குமாறு தூண்டினார். அதற்கிணங்கித் திபேத்து மன்னர் கன்னோசியைத் தாக்கி, அதை அழித்தார்.

அர்ச்சுனர்

பயிற்சி:

1. ராஜ்ய வர்த்தனரைப் பற்றி நீஎன்னதெரிந்துகொண்டாய்?
2. ஹர்ஷ வர்த்தனரை ஒரு பெரிய அரசரென்று கூறக் காரணங்கள் யாவை?
3. அர்ச்சுனர் என்பவர் யார்? அவரைப் பற்றிச் சுருக்கமான குறிப்பு எழுது.

14. ராஜ புத்திரர்கள்

[ராஜ புத்திரர்கள் யார்? - ராஜ புத்திரர்களின் பழக்க வழக்கங்கள் - ராஜ புத்திர ராஜ்யங்கள் - கூர்ஜரப் பிரதிகாரர்கள்-சந்தலர்கள்—பரமாரர்கள் - கூர்ஜரர்கள் -பால வமிசத்தினர்]

ஹர்ஷரின் சாம்ராஜ்யம் சீர்குலைந்த பிறகு, வட இந்தியாவில் அனேக சிறு ராஜ்யங்கள் தோன்றின. அவற்றை ஸ்தாபித்தவர்கள் ராஜ புத்திரர்கள். அவர்கள் க்ஷத்திரிய வகுப்பினைச் சேர்ந்தவர்கள்.

படம் 20. ராஜ புத்திர வீரன்

ராஜ புத்திரர்களை ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வதற்கில்லை. நாம் இதற்கு முன்பே பல வேறு அன்னியர்கள் இந்தியாவிற் குடியேறினர்கள் என்பதைப் பற்றிப் படித்திருக்கின்றோம். அவ்வாறு குடியேறினவர்களுள் குஷானர்கள், சாக்கர்கள், ஹூணர்கள் என்பவர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் இந்தியாவில் தங்கி நாளடைவில் இந்து மதத்தையும், பழக்க ஒழுக்கங்களையும் தழுவினர்கள். இவர்கள் சண்டை செய்வதில் ஆற்றல் உள்ளவர்களாயிருந்தபடியால், க்ஷத்திரியர்களெனப் பெயர்பெற்றார்கள். இந்தியாவின் குடிமக்களுள் சிலரும் ஆரிய பழக்க வழக்கங்களை அனுசரித்து வந்ததால், அவர்களும் ராஜ புத்திரர்களெனக் கருதப்பட்டார்கள். அவர்களைத் தவிர, நசித்துப் போன பழைய அரச குடும்பங்களின் சந்ததியார்களும் ராஜபுத்திரர்களென வழங்கப்பட்டார்கள்.

ராஜ புத்திரர்கள் யார்?

ராஜபுத்திரர்கள் சிறந்தபோர்வீரர்களாய் விளங்கினர்கள். அவர்களுக்கு விவசாயம் விபாபாரம் முதலிய தொழில்களில் விருப்பம் இல்லை. அவர்கள், ஒருவனிடம் தைரியம் இல்லாவிடில் அவனை மிகவும் அவமானப்படுத்துவார்கள். அவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்களாதலால், பிராமணர்களை மிக்க மரியாதையுடன் நடத்தி வந்தார்கள். அவர்கள் கல்விமான்களையும் போற்றி வந்தார்கள். அவர்களுக்கு இதிகாசங்களாகிய இராமாயண பாரதங்களில் கூறப்பட்டுள்ள **இராமர், அர்ச்சுனன்** முதலிய பெரிய வீரர்களைத் தங்கள் மூதாதையர்கள் என்று சொல்லிக்கொள்வதில் மிக்கபிரியம் உண்டு.

அவர்கள் பழக்க வழக்கங்கள்

ராஜ புத்திரப் பெண்மணிகளும் மேன்மையான குணம் பொருந்தியவர்கள். அவர்கள் மானத்தை இழந்த பின் உயிர்

வைத்திருத்தல் பிரயோஜனமற்றது என்று எண்ணினார்கள். ஒரு ராஜ புத்திரக் கோட்டை எதிரிகளால் பிடிக்கப்பட்டால், அக்கோட்டையில் உள்ள பெண்டிர் அனைவரும் ஒரு பெரிய நெருப்பு வளர்த்து அதில் வீழ்ந்து மாள்வர். இத்தகைய பழக்கத்திற்கு **'ஜோஹர்'** என்பதுபெயர். ராஜபுத்திரர்களிடையில் **'சுயம்வரம்'** என்னும் பழக்கம் இருந்துவந்தது. அதாவது, ஓர் உயர்குலத்து ராஜ புத்திரச் சீமாட்டி மணம் செய்துகொள்வதாயிருந்தால், பலரை அழைப்பு அனுப்பி வரவழைப்பார்கள். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களுள் ஒருவரை மணப்பெண் தன் கணவராகத் தேர்ந்தெடுப்பாள். பிறகு விவாகம் நடைபெறும்.

ராஜ புத்திர ராஜ்யங்கள்

ராஜ புத்திர ராஜ்யங்கள் அனேகம் உண்டு. அவற்றுள் சிறந்த சில ராஜ்யங்களைப் பற்றி மாத்திரம் இங்குக் குறிப்பிடுவோம் :

கூர்ஜரப் பிரதிகாரர்கள்

கி.பி.8-ஆம் நூற்றாண்டிற்குள் **கூர்ஜரப் பிரதிகாரர்கள்** என்ற ராஜ புத்திர வமிசத்தார்கள் இப்பொழுது **ராஜபுதனம்** என்று சொல்லப்படும் பிரதேசத்தின் கிழக்குப் பாகத்தையும் மாளவத்தையும் வென்று, ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அவர்களுள் பிரசித்தி பெற்ற அரசரான **வத்ச** ராஜர் என்பவர், கன்னோசியையும் வங்காளத்தையும் கைப்பற்றினார். ஆனால், அவர் **ராஷ்டிரகூடர்**களால் தோற்கடிக்கப்பட்டார். பிரதிகாரர்களுக்கும் வங்காளத்தை ஆண்டுவந்த **பால** அரசர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நிகழ்ந்துவந்தன. 9-ஆம் நூற்றாண்டின் மத்தியில் **போஜர்** என்ற பிரதிகார அரசர், பாலர்களைத் தோற்கடித்தார். அவர் தம்முடைய தலைநகரை **உஜ்ஜயினி**யினின்று கன்னோசிக்கு மாற்றினார். போஜரின்

மைந்தரான **மஹேந்திர பாலர்** இவ்வமிசத்தின் கடைசிப் பெரிய அரசர். அவருக்குப்பின் இவ்வமிசம் க்ஷீணிக்கத் தொடங்கியது. தக்காணத்தில் ஆண்டு வந்த ராஷ்டிரகூடர்கள், உஜ்ஜயினியையும் கன்னோசியையும் அழித்தார்கள். 11-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் **கஜினி மாமூது** என்ற முகம்மதிய அரசர் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தபொழுது இவ்வமிசம் அடியோடு அழிக்கப்பட்டது.

பண்டல்கண்டு என்று வழங்கும் **ஜெஜாகபுத்தி** என்ற நாட்டைச் **சந்தலர்கள்** என்ற ராஜபுத்திரர்கள் ஆண்டுவந்தார்கள். **மகோபா** என்ற நகரம் அவர்களுக்குத் தலைநகராயிருந்தது. அந்நாட்டில் **கலஞ்சார்க் கோட்டை** மிகவும் பலம்பொருந்தியது. இவ்வமிசத்தில் பிரசித்திபெற்ற முதல் அரசர் **யசோ வர்மர்**. இவர் காலத்தில் அனேக போர்கள் நிகழ்ந்தன. அவையாவற்றிலும் இவரே ஜயம் பெற்றார். சந்தலர்கள் அனேக கோவில்கள் கோட்டைகள் முதலியவற்றைக் கட்டியுள்ளார்கள். 12-ஆம் நூற்றாண்டில் இவர்கள் தங்கள் ஆதிக்கத்தை இழந்தார்கள்.

சந்தலர்கள்

அவந்தி அல்லது **மாளவம்** என்ற நாட்டைப் **பரமார** வமிசத்தினர் ஆண்டு வந்தனர். அவர்களுள் மிகவும் கீர்த்தி வாய்ந்த அரசர்கள் **முஞ்ச**ரும், **போஜ**ரும் ஆவார்கள். போஜ ராஜாவைப்பற்றி அனேக கதைகள் எழுதப்பட்டுள்ளன. இவர் சிறந்த போர் வீரராயிருந்ததுமன்றி, மிகுந்த அறிவாளராயுமிருந்தார். இவர் கல்விமான்களைப் போற்றினார். இவரே அரிய நூல்கள் பல இயற்றினார். இவர் இறந்த பின்னர், இவரது வமிசம் க்ஷீணிக்கத் தொடங்கியது. 13-ஆம் நூற்றாண்டில் மாளவம் முகம்மதியர்களால் வெல்லப்பட்டு, அவர்களுடைய சாம்ராஜ்யத்தில் சேர்க்கப்பட்டது.

பரமாரர்கள்

கூர்ஜரத்தில் குப்தர்களாதிக்கம் அழிந்த பிறகு, **கூர்ஜரர்கள்** என்ற ராஜ புத்திரர்கள் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபனஞ் செய்தார்கள். அவர்களாலேதான் இந்நாட்டிற்குக் '**கூர்ஜரம்**' என்னும் பெயர்வழங்கலாயிற்று. 8-ஆம் நூற்றாண்டின் மத்தியில் அரபியர்கள் இந்நாட்டைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். பிறகு ராஷ்டிரகூடர்கள் 10-ஆம் நூற்றாண்டு முடிவு வரையில் இந்நாட்டில் ஆட்சி புரிந்து வந்தார்கள்.

கூர்ஜரர்கள்

ஹர்ஷர் இறந்த பின்னர் வங்காளத்தில் **கோபாலர்** என்பவர் ஒரு புதிய வமிசத்தை ஆரம்பித்தார். இவ்வமிசத்தில் பிரசித்தி பெற்ற மன்னர், **தர்ம பாலர்** என்பவர். இவர் கூர்ஜரர்களுடனும் ராஷ்டிரகூடர்களுடனும் போர் புரிந்து வெற்றி பெற்றார். இவருடைய மைந்தரான **தேவ பாலர்,** இவரைவிட அதிக கீர்த்தி பெற்றார். தேவ பாலருக்குப் பின் இவ்வமிசத்தின் பலம் குன்றத் தொடங்கியது. பாலர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் திபேத்தில் புத்த மதத்தைப் பரவச் செய்தார்கள்; அனேக பௌத்த மடங்களையும் கல்விச்சாலைகளையும் ஏற்படுத்தினார்கள். 12-ஆம் நூற்றாண்டில் **விஜயசேனர்** என்பவரால் இவ்வமிசம் முடிவடைந்தது. இவரால் ஆரம்பிக்கப்பட்ட **சேன வமிசம்** நெடுநாள் நீடித்திருக்கவில்லை. அந்நூற்றாண்டின் இறுதியில் வங்காளம் முகம்மதியரால் வெல்லப்பட்டது.

பாலவமிசத்தினர்

பயிற்சி :

1. ராஜ புத்திரர்களின் உற்பத்தியைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய் ?
2. இவர்களுடைய பழக்க வழக்கங்களைப்பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுது.
3. ராஜ புத்திரர்களின் முக்கியமான ராஜ்யங்கள் யாவை ? இவைகளைப்பற்றி நீ என்ன கற்றுக்கொண்டாய் ?

15. இஸ்லாம் மதம் தோன்றிப் பரவுதல்

[முகம்மது நபி அரேபியாவில் அவதரித்தல் - நபி போதித்த புதிய மதம் - முகம்மதிய சகாப்தம் - புது மதத்தின் வளர்ச்சி - காலிப்புகள் - முகம்மது பின் காசிம் - சிந்து நதிப் பிரதேசத்தை வெல்லுதல் - அதன் பயன்கள்]

கி.பி. 576-ஆம் ஆண்டில் **அரேபியாவில் மெக்கா** எனும் இடத்தில் **முகம்மது நபி** பிறந்தார். அரபியர்கள் ஆடுமாடு மேய்ப்பதை முக்கியமான தொழிலாகக் கொண்டவர்கள். அவர்கள் அனேக கடவுளர்களை வழிபாடு செய்து வந்தார்கள்; விக்கிரகங்களைப் பூசித்து வந்தார்கள்.

முகம்மது நபி

முகம்மது அவர்களுக்கு ஒரு புதிய மதத்தைப் போதித்தார். கடவுள் ஒருவரே என்றும், விக்கிரகங்களை ஆராதனை செய்யக் கூடாதென்றும் அவர் பிரசாரம் செய்தார். இப்பொதுக் கொள்கைகளை அரபியர்கள் முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் முகம்மதுவுக்குப் பல தீங்குகளை இழைத்தார்கள். ஆகையால், அவர் மெக்காவை விட்டு **மெதீனு**விற்கு ஓடினார்.

ஹிஜிரா

அவ்வாறு அவர் ஓடிய வருஷமான கி. பி. 622-ஆம் ஆண்டு, முகம்மதிய சகாப்தத்திற்கு முதல் வருஷமாகும். இச்சகாப்தத்தை '**ஹிஜிரா**' என்று கூறுவார்கள். முகம்மது நபி இதற்குப் பின் பத்து வருஷங்கள் தம் மதத்தைப் பிரசாரம் செய்துவிட்டு இறந்தார். அவர் காலத்திலேயே அனேகஅரபியர்கள் இப்புதிய மதத்தைத் தழுவினார்கள்.

இம்மதத்தைத் தழுவியவர்கள் '**இஸ்லாமியர்கள்**' என்றும் வழங்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் மதத்தை அன்னிய நாடுகளில் பரவச் செய்வதற்குப் பெரு

இஸ்லாம் பரவுதல்

முயற்சிகள் செய்தார்கள். அவைகளின் பயனாக இஸ்லாமிய மதம் சிரியா, பாரசீகம், துருக்கிஸ்தானம், எகிப்து முதலிய நாடுகளில் பரவலாயிற்று. அவர்கள் இப்புதிய மதத்தை ஐரோப்பாவிலும் பரவச் செய்ய



படம் 21. மெக்கா நகரம்

வேண்டுமென்ற நோக்கங்கொண்டிருந்தார்கள். ஆனால், அங்கு அவர்கள் தோல்வியடைந்தபடியால், இம்மதம் அதிகமாகப் பரவவில்லை.

நாளடைவில் **பாக்தாதின்** அரசர்களான **காலிப்புகள்** மதத் தலைவர்களும் ஆனார்கள். காலிப்புகளே இம்மதத்தை அதிகமாகப் பரவச் செய்வதற்குத் தக்க வழிகளைத் தேடினார்கள். கி.பி. 712-ஆம் ஆண்டில் **முகம்மது பின் காசிம்** என்ற அரபியப் போர்வீரர் ஒரு சிறு சேனையுடன் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார். அவர் சிந்து நதிப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார். அப்பொழுது அந்நாட்டை ஒரு பிராமண அரசர் ஆண்டு வந்தார். அவர் எளிதில் தோற்கடிக்கப்படவே, அவருடைய ராஜ்யம் முகம்மதியர் வசமாயிற்று. இவ்வாறாக முதன்முதலில் அரபிய முகம்மதியர்கள் இந்தியாவிற் குடியேறினார்கள். முகம்மது பின் காசிம் எக்காரணத்தாலோ காலிப்பின் கோபத்திற்கு ஆளானார். ஆகையால், காலிப்பு அவரை இந்நாட்டினின்று வரவழைத்துக் கொன்றுவிட்டார்.

அரபியர்கள்
இந்தியாவில்
குடியேறுதல்

அரபியர்கள் தங்கள் இந்திய ராஜ்யத்தைப் பெருக்கமுயலவில்லை. அவர்கள் இந்துக்களின் நாடுகளுடன் சினேகப் பான்மையில் இருந்து வந்தார்கள். ஆனால், அவர்கள் ஆண்டு வந்த பிரதேசத்தில் அனேக இந்துக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவலானார்கள். அரபியர்களுக்கும் இந்துக்களுக்கும் ஏற்பட்ட சம்பந்தத்தினால் இந்துக்களின் வான சாஸ்திரம், கணிதம், சங்கீதம், சிற்ப சாஸ்திரம் முதலியவை மேற்கே உள்ள நாடுகளில் பரவலாயின. நாம் இப்பொழுது உபயோகப்படுத்தும் எண்களுக்கு **அராபிய எண்கள்** என்பது பெயர். ஆனால், இந்துக்கள் தங்களிடமிருந்து இவற்றை அரபியர்கள் கற்றுக்கொண்டார்கள் எனக் கூறுவார்கள்.

அதன் பயன்கள்

பயிற்சி :

1. முகம்மது நபி எங்கே, எந்த வருடத்தில் அவதரித்தார் ?
2. அவர் போதித்த மதத்தின் முக்கியமான கொள்கைகள் யாவை ?
3. 'ஹிஜிரா' என்பது எதற்குப் பெயர் ?
4. அரபியர்கள் இந்தியாவிற்கு எப்பொழுது வந்தார்கள் ?
5. அவர்கள் வருகையின் பயன்களென்ன ?

16. தக்காண ராஜ்யங்கள்

i. சாளுக்கியர்கள்

[சாளுக்கியர்கள் - முதலாம் புலகேசி - இரண்டாம் புலகேசி - கீழைச் சாளுக்கிய வமிசம் - வமிசத்தின் அழிவு]

தக்காணப் பீடபூமியின் மேற்குப் பாகத்தில் ஆறும் நூற்றாண்டில் ஒரு புதிய ராஜ்யம் தோன்றிற்று. அதை ஸ்தாபித்த வமிசத்திற்குச் **சாளுக்கிய வமிசம்** என்பது பெயர். அவ்வமிசத்தின் முதலரசர் **ஜயசிங்கர்**. அவருக்குப் பிறகு **முதலாம் புலகேசி** என்ற அரசர் பெரும்புகழுடன் ஆண்டார். அவர் காலத்தில் மகாராஷ்டிரத்தை ஆண்டு வந்த **ராஷ்டிரகூடர்கள்** அவரால் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்களுடைய ராஜ்யம், சாளுக்கிய மன்னரின் குடைக்கீழ் வந்தது. அவர் **வாதாபி** என்னும் நகரைத் தம் தலைநகராக்கிக்கொண்டார்.

முதலாம் புலகேசி

கி.பி. 608-ஆம் ஆண்டில் **இரண்டாம் புலகேசி** என்பவர் அரசரானார். இவர் இச்சாளுக்கிய வமிசத்திற்கே திலகம் போன்றவர். இவர் தம் அதிகாரத்தைத் தக்காணத்திலும், அதற்குத் தெற்கேயும் நிலை நாட்டினார்.

இரண்டாம் புலகேசி

இவர் காலத்தில் கிருஷ்ண நதிக்குத் தெற்கேயுள்ள பிரதேசத்தைப் **பல்லவ வமிசத்தினர்** ஆண்டு வந்தனர். அவர்களது தலைநகரம் **காஞ்சீபுரம்**. இரண்டாம் புலகேசி ஆண்டு வந்த காலத்தில், காஞ்சீபுரத்தில் **மஹேந்திர வர்மர்** என்ற அரசர் ஆட்சி புரிந்து வந்தார். இரண்டாம் புலகேசி இவருடன் போர் தொடுத்து, இவரைத் தோற்கடித்து, இவர் நாட்டின் ஒரு பகுதியைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டார்.

அவர் வெற்றிகள்

பிறகு இரண்டாம் புலகேசி கிழக்குக் கரையோரமாயுள்ள பிரதேசத்தைத் தாக்கி, அதனைக் கைப்பற்றினர். அந்நாடு கலிங்கத்திலிருந்து கிருஷ்ண நதிவரையில் பரவியிருந்தது. அதைப் புலகேசி தம் சகோதரரான **குப்ஜா விஷ்ணு வர்த்தன**ருக்குக் கி.பி. 610-ஆம் ஆண்டில் அளித்து, அவரை அரசாளும்படி செய்தார். இவ்வாறு கிழக்கில் தோன்றிய வமிசத்திற்குக் **கீழைச் சாளுக்கிய வமிசம்** என்பது பெயர். இவ்வமிசம் கி.பி. 1070-ஆம ஆண்டு வரையில் நீடித்திருந்தது.

கீழைச் சாளுக்கிய வமிசம் தோன்றுதல்

புலகேசி ஹர்ஷரைத் தோற்கடித்ததைப் பற்றி முன்னமே படித்திருக்கிறோம். இப்பெரிய மன்னரின் கீர்த்திப் பிரதாபம் அயல் நாடுகளிலும் பரவிற்று. கி. பி. 625-ஆம் ஆண்டில் பாரசீகத்திலிருந்து ஒரு தூதுவர் இவருடைய சபைக்கு வந்தார். அவர் வருகைக்குப் பதில் மரியாதைக்காக இவரும் பாரசீகத்திற்கு ஒரு தூதரை அனுப்பினர்.

இவர் புகழ்

ஹயூந்தஸாங்கு என்ற சீன யாத்திரிகர், இவருடைய சபைக்கும் வந்திருந்தார். அவர் அரசருடைய பராக்கிரமத்தைப்பற்றியும், அரசரிடம் குடிகள் கொண்டிருந்த அன்பைப் பற்றியும், நாட்டின் செல்வத்தைப் பற்றியும் புகழ்ந்து எழுதியிருக்கிறர்.

நாட்டின் வளம்

சாளுக்கியர்களுக்கும் பல்லவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நிகழ்ந்தன. கி.பி. 642–ஆம் ஆண்டில் இரண்டாம் புலகேசி, **நரசிம்ம வர்மர்** என்ற பல்லவ அரசரால் தோற்கடிக்கப்பட்டுச் சண்டையில் மாண்டார்.

மரணம்

இவருக்குப் பிறகு **விக்கிரமாதித்தர்** என்பவர் அரசரானார். இவர் பல்லவரின் நாட்டின்மீது படையெடுத்துக் காவேரி நதிக்கரை வரையில சென்றார். இவர் கூர்ஜரத்தை வென்று, அங்கு ஒரு கிளை வமிசத்தை ஏற்படுத்தினார்.

முதலாம் விக்கிரமாதித்தர்

எட்டாம் நூற்றாண்டின் மத்திய பாகத்தில் ஆண்டு வந்த **இரண்டாம்விக்கிரமாதித்தர்**, பல்லவர்களின் தலைநகராகிய காஞ்சீபுரத்தைக் கைப்பற்றினார்; தமிழ் நாட்டு வேந்தர்களான சேர சோழ பாண்டியர்களையும் தோற்கடித்தார். ஆனால், கி.பி. 753-ஆம் ஆண்டில் ராஷ்டிரகூடர்கள் சாளுக்கியர்களைத் தோற்கடித்து, அவர்கள் நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இத்துடன் மேலைச் சாளுக்கிய வமிசம் முடிவடைந்தது.

இரண்டாம் விக்கிரமாதித்தர்

பயிற்சி :

1. முதலாம் புலகேசி காலத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் யாவை ?
2. இரண்டாம் புலகேசி கீர்த்தி வாய்ந்த அரசரென்பதை விளக்கிக் காட்டு.
3. சாளுக்கிய வமிசம் எப்பொழுது, எவ்வாறு முடிவடைந்தது ?

ii. பல்லவர்கள்

[பல்லவர்கள் யார்? - அவர்கள் ஆண்டு வந்த பிரதேசங்கள் - மஹேந்திர வர்மர் - நரசிம்ம வர்மர் - இவர்கள் ஆட்சியின் முக்கிய நிகழ்ச்சிகள் - மஹாபலிபுரம் - காஞ்சீபுரம்]

கி. பி. 3-ஆம் நூற்றுண்டில் ஆந்திரர்களின் ஆதிக்கம் அழிந்ததென்று நாம் படித்திருக்கிறோம். அதற்குப் பின் கிழக்குக் கரைப் பிரதேசத்தில், கிருஷ்ணு நதிக்கும் காவேரி நதிக்கும் இடையில் ஒரு சிறு ராஜ்யம் தோன்றியது. அதைத்தான் பல்லவர்கள் ஆண்டார்கள்.

பல்லவர்கள் யார்?

பல்லவர்கள் யார் என்பதைப் பற்றிச் சரித்திரக்காரர்கள் பல வேறு அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள். அவர்கள் இந்நாட்டினர்களே எனச் சிலர் கருதுகின்றனர். சில சரித்திராசிரியர்கள், அவர்கள் பாரசீகத் தேசத்தினின்று வந்தவர்கள் எனக் கூறுகிறார்கள்.

பல்லவர்கள் ஆண்ட ராஜ்யங்கள்

பின்பு பல்லவர்கள் தக்காணத்தின் மேற்குப் பாகத்திலும், கிழக்குப் பாகத்திலும், காஞ்சீபுரத்திலும் ஆண்டு வந்தார்கள். ஏனைய ராஜ்யங்கள் அழிந்து போய், காஞ்சீபுரத்தைத் தலை நகராகக் கொண்ட ராஜ்யமே சிறந்து விளங்கியது.

பெரிய பல்லவர்கள்

கி. பி. 6-ஆம் நூற்றுண்டின் இறுதியில் **சிம்ம விஷ்ணு** என்பவர் ஒரு புதிய பல்லவ வமிசத்தைத் தோற்றுவித்தார். இவ்வமிசத்தரசர்களுக்குப் **பெரிய பல்லவர்கள்** என்னும் பெயர் வழங்கியது.

இவ்வமிசத்தின் முதல் பெரிய அரசர் **மஹேந்திர வர்மர்**. இவரைப் பற்றித்தான் நாம் முன் அத்தியாயத்தில் கூறியிருக்

கிறேம். இவர் சிற்ப சாஸ்திரத்தைப் பெரிதும் போற்றினர்; அனேக மலைகளைக்குடைந்து கோவில்களைக் கட்டினர். அத்தகைய கோவில் ஒன்று திரிசிராப்பள்ளி மலைக்கோட்டையில் உள்ளது. சங்கீதத்தையும், கல்வியையும் இவர் ஆதரித்தார்.

மஹேந்திர வர்மர்



படம் 22. திரிசிராப்பள்ளி மலைக்கோட்டை

அப்பர் வருகை

மஹேந்திர வர்மர் முதலில் ஜைன மதத்தினராயிருந்தார். ஆனால், இவர் சபைக்குச் சைவமதத்து அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய **அப்பர்** என்பவர் விஜயம் செய்து, இவரைச் சைவ மதத்தில் சேர்த்தார்.

நரசிம்ம வர்மர்

மஹேந்திர வர்மர் கி. பி. 630-ஆம் ஆண்டில் இறந்து போகவே, அவருடைய மைந்தரான **நரசிம்ம வர்மர்** பட்டத்திற்கு வந்தார். இவர் மிக்க பராக்கிரமம் பொருந்தியவர். ஆகையால், இவருக்கு **மஹாமல்லர்** என்ற பெயர் வழங்கியது.

இவரைப் பற்றியும் நாம் இதற்கு முன்பே படித்திருக்கிறோம். இரண்டாம் புலகேசியைத் தோற்கடித்துக் கொன்றவர் இவரே. இவர் தமிழரசர்களான சேர சோழ பாண்டியர்களேயும் தோற்கடித்தார்.

மஹாபலிபுரம்

இவர் சென்னைக்குச் சுமார் 40 மைல் தூரத்திலுள்ள மஹாபலிபுரம் என்னும் பட்டினத்தை உண்டாக்கினார். அதற்கு இவர் பெயரால் **மஹாமல்லபுரம்** என்னும் பெயர் வழங்கியது. அங்குக் கற்களால் செய்யப்பட்ட பல அழகிய கோவில்களும்,



படம் 23. மஹாபலிபுரக் கல் ரதங்கள்

கற்சித்திரங்களுமிருக்கின்றன. அவை இவரால் செய்யப்பட்டனவே.

கலங்கரை விளக்கம்

மஹாபலிபுரம் பல்லவர்கள் காலத்தில் ஒரு முக்கிய துறைமுகப்பட்டினமாயிருந்தது. அங்கு இப்பொழுது ஒரு கலங்கரை விளக்கம் (Light House) இருக்கிறது.

நாட்டின் நிலைமை

நரசிம்ம வர்மர் ஆட்சி புரிந்த போது **ஹயூந்தஸாங்கு** என்ற சீன யாத்திரிகர் இவர் சபைக்கும் வந்திருந்தார். இந்நாடு மிகவும் செழிப்புற்றிருந்ததாகவும், ஜனங்கள் படித்தவர்களென்றும், அவர்கள் தைரியசாலிகளென்றும், நல்வழியைக் கடைப்பிடித்தொழுகினார்களென்றும் இவர் எழுதியிருக்கிறார்.



படம் 24. மஹாபலிபுரக் கோவில்

பல்லவ வமிசத்தின் அழிவு

நரசிம்ம வர்மர் கி. பி. 662-ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்குப்பின் நூறு வருட காலம் பல்லவர்கள் கீர்த்தியுடன் அரசாண்டார்கள்; அதற்குப் பிறகு சோழ மன்னர்களால் தோற்கடிக்கப்பட்டுத் தங்கள் தலைநகரான காஞ்சீபுரத்தையும் இழந்தார்கள்.

காஞ்சீபுரம் இப்பொழுதும் **தக்ஷிணகாசி** என்னும் பெயருடன் இந்துக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. அங்குப் பல்லவர்களால் அனேக கோவில்கள் கட்டப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை, **கைலாசநாதர் கோவில், ஏகாம்பரேஸ்வரர் கோவில், வைகுண்டப் பெருமாள் கோவில், வரதராஜப் பெருமாள் கோவில்** முதலியன. 'புத்த மதத்தின்

காஞ்சீபுரம்



படம் 25. வரதராஜப் பெருமாள் கோவில்

நூறு **விகாரங்கள்**' என்று சொல்லப்படும் மடங்களுமிருந்தன. இங்குப் பதினாயிரம் பௌத்த சன்னியாசிகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சந்திர குப்த மௌரியரின் முதன் மந்திரியாரான **சாணக்கிய**ரின் பிறப்பிடமும் இதுவே என்று சிலர் கூறுகின்றனர்.

பயிற்சி:

1. பல்லவர்கள் ஆண்ட பிரதேசங்கள் யாவை?
2. மஹேந்திர வர்மரைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய்?
3. நரசிம்ம வர்மர் கீர்த்தி பெற்ற அரசர் என்பதற்குக் காரணங்கள் யாவை?
4. காஞ்சீபுரத்தின் பெருமையை விளக்கிக் காட்டு.

iii. ராஷ்டிரகூடர்கள்

[ராஷ்டிரகூடர்கள் யார்? - தந்தி துர்க்கர் - கிருஷ்ணர் - மூன்றும் கோவிந்தர் - அமோகவர்ஷர் - பிற்காலச் சாளுக்கியர்கள் - தைலப்பர் - சோமேஸ்வரர் – விக்கிரமாதித்தர் - இவ் வமிசத்தின் அழிவு]

ராஷ்டிரகூடர்கள் யார்?

சாளுக்கியர்கள் அழிவடைந்ததற்குக் காரணமாயிருந்தவர்கள் ராஷ்டிரகூடர்கள் என்பதை நாம் அறிவோம். இவர்கள் இப்பொழுது **மகாராஷ்டிரம்** என்று கூறப்படும் பிரதேசத்தில் ஆண்டு வந்தார்கள். இந்நாட்டிற்குப் பழங்காலத்தில் **ரட்ட பாடி** என்னும் பெயர் வழங்கியது.

தந்தி துர்க்கர்

சாளுக்கியர்களைத் தோற்கடித்துத் தம் அதிகாரத்தைப் பலப்படுத்திய ராஷ்டிரகூட அரசர், **தந்தி துர்க்க வைர மேகர்** என்பவர். இவர் ஆட்சி நெடுநாள் நீடித்திருக்கவில்லை. இவருக்குப் பின் அரசரானவர் **முதலாம் கிருஷ்ணர்** என்பவர்.

முதலாம் கிருஷ்ணர்

இவர் காலத்தில் ராஷ்டிரகூடர்களின் அதிகாரம் வடக்கே மாளவம் சௌராஷ்டிரம் வரையில் பரவியது. **எல்லோராவி**லுள்ள கைலாசநாதர் கோவில், இவராலேதான் கட்டப்பட்டது. காஞ்சீபுரத்திலுள்ள **கைலாசநாதர்** கோவிலைவிட இது மிக்க அழகு பொருந்தியது.

மூன்றும் கோவிந்தர்

இவருக்குப் பின் அதிக கீர்த்தி வாய்ந்த அரசர் **மூன்றும் கோவிந்தர்**. இவர் தம் ஆதிக்கத்தை வடக்கே கங்கை நதி வரையிலும், தெற்கே காஞ்சீபுரம் வரையிலும் நிலை நாட்டினர். இவர் தம் ராஜ சின்னங்களை இமய மலைகளின் பாறைகளில் செதுக்கி வைத்தார்.



படம் 26. எல்லோராவிலுள்ள கற்சித்திரம்

அமோக வர்ஷர்

இவர் இறந்த பின், இவர் புதல்வரான **அமோக வர்ஷர்** பட்டத்திற்கு வந்தார். இவர் பல்லவர்களுடன் போர் புரிய நேரிட்டது. அதில் இவரே வெற்றிகொண்டார். இவர் காலத்தில் கீழைச்சாளுக்கியர்களுடனும் சண்டை நிகழ்ந்தது. இப்போரில் கீழைச்சாளுக்கியர்கள் அடக்கப்பட்டார்கள். இவர் கல்விமான்களைப் போற்றினர். இவரது ஆதரவில் அனேக

கன்னட வித்துவான்களும், வடமொழி வித்துவான்களும் அரும்பெரு நூல்களை இயற்றியுள்ளார்கள். இவர் சமண



படம் 27. அஜந்தாக் குகை

மதத்தைச் சார்ந்தவர். அம்மதத்தின் கொள்கைகளின்படி இவர் தம் சிம்மாசனத்தைத் தம் மைந்தரிடம் ஒப்படைத்து விட்டுப் பட்டினி கிடந்து இறந்ததாகக் கூறப்படுகிறது.

இக்காலத்தில் அனேக அராபிய வர்த்தகர்கள் மேற்குக் கரைப் பிரதேசங்களில் குடியேறினார்கள். அவர்கள் எழுதி யுள்ள புத்தகங்களில் ராஷ்டிரகூட ராஜ்யம் உலகத்தி லேயே நாலு பெரிய ராஜ்யங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட் டிக்கிறது. மற்ற மூன்று ராஜ்யங்களாவன, **பாக்தாது** ராஜ் யம், **ரோமாபுரி** ராஜ்யம், **சீன** ராஜ்யம் என்பன.

தைலப்பர்

அமோக வர்ஷருக்குப் பிற்காலத்தில் வந்த ராஷ்டிரகூட அரசர்கள், பலம் பொருந்தியவர்கள் அல்லர். கி. பி. 973-ஆம் ஆண்டில் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்த **தைலா** என்ற **தைலப்பர்**, ராஷ்டிரகூடர்களைத் தோற்கடித்து, சாளுக்கிய வமிசத்தை நிலைநாட்டினார். இவர் **கலி யாணி** என்ற நகரைத் தலைநகராகக் கொண்டதால், இவ்வமிசத்தினருக்குக் **கலியாணிச் சாளுக்கியர்** என்னும் பெயர் வழங்கலாயிற்று. இவர் மாளவத்தை ஆண்டு வந்த **முஞ்சா** என்ற அரசரைத் தோற்கடித்துக் கொன்றார்.

சோமேஸ்வரர், விக்கிரமாதித்தர்

இதே சமயத்தில் தமிழ் நாட்டில் ஆண்டு வந்த சோழ மன்னர்கள் பலமடைந்து வந்தார்கள். சாளுக்கியர்கள் ராஷ் டிரகூடர்களைத் தோற்கடித்த போதுதான் சோழ நாட்டில் **ராஜ ராஜர்** என்பவர் அரசரானார். சோழருக்கும் தைலப்பருக் குப் பிறகு வந்த **சோமேஸ்வர**ருக்கும் சண்டை நடந்ததாகத் தெரிகிறது. சோமேஸ்வரருக்குப் பின் **விக்கிரமாதித்தர்** என்பவர் பெரும்புகழுடன் அரசாண்டார். இவருடைய சம்ஸ்தானத்தில் **பில்ஹணர்** என்ற கவிஞரும், **விஞ்ஞானேஸ்வரர்** என்ற இந்து சட்டப் புலவரும் ஆஸ் தான வித்துவான்களாய் இருந்தார்கள். **பில்ஹணர்** தம் அரசரைப் பற்றி **விக்கிரமாங்கதேவ சரித்திரம்** என்னும் அரிய நூலைச் செய்யுள் வடிவில் எழுதியுள்ளார்.

விக்கிரமாதித்தர் ஐம்பது வருஷங்கள் ஆண்ட பின்னர் இறந்தார். அவருக்குப் பின்னர்ச் சாளுக்கியர்களின் பலம் குன்றத் தொடங்கியது. கி. பி. 1157-ஆம் ஆண்டில் **விஜ்ஜலர்** என்ற ஒரு சிற்றரசர், சாளுக்கிய அரசரைக் கைதி செய்து, பட்டத்திற்கு வந்தார். இவர் ஜைன மதத்தைச் சேர்ந்தவர். இவரிடம் மந்திரியாராயிருந்த **பஸவர்** என்பவர், **லிங்காயத்து மதம்** என்ற தீவிர சைவ மதத்தை ஸ்தாபித்தார். இம்மதத்தை மைசூரிலும், தெற்கு மஹாராஷ்டிரத்திலும் இப்பொழுது அனேகர் பின்பற்றி வருகின்றனர். விஜ்ஜலர் காலத்திற்குப் பிறகு இச்சாம்ராஜ்யம் சிதறுண்டு போயிற்று.

இவ்வமிசத்தின் அழிவு

வடக்கில் **தேவகிரி**யைத் தலைநகராகக்கொண்டு **யாதவர்கள்** என்ற வமிசத்தினர்கள் தனி ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். கிழக்கே **காகதீயர்கள்** என்பவர்கள் **வாரங்கலைத்** தலைநகராகக் கொண்டு ஒரு பிரத்தியேக ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். தெற்கிலும் **ஹொய்சலர்கள், பேலூர்** என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு, ஒரு தனி ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். இவ்வாறு ராஷ்டிரகூடர்களும் சாளுக்கியர்களும் ஆண்டு வந்த சாம்ராஜ்யம் சீர்குலைந்து போயிற்று.

பயிற்சி :

1. ராஷ்டிரகூடர்கள் யார்? அவர்கள் எந்தப் பிரதேசத்தில் ஆண்டார்கள்?
2. எல்லோராக் கோவிலைக் கட்டியவர் யார்?
3. அமோக வர்ஷரைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய்?
4. பிற்காலத்துச் சாளுக்கியரைப் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுது.

17. தமிழ் நாட்டு ராஜ்யங்கள்

[தமிழ் நாடு - திராவிடர்கள் - அவர்கள் சிறப்பு-கரிகால் சோழர் - பிற்காலத்துச் சோழர்கள் - பாண்டியர் - நெடுஞ்செழியர் -நெடுமாறர் - சுந்தர பாண்டியர் - நெடுஞ்சேரலாதர் - செங்குட்டுவர்]

தமிழ் நாடு

இக்காலத்தில் **தமிழ் நாடு** என்பது சென்னைக்குத்தெற்கே உள்ள ஜில்லாக்களை மாத்திரம் குறிக்கும். **திருவிதாங்கூர், மலையாளம், தென்கன்னடம்** முதலிய ஜில்லாக்கள் அதில் சேரா. ஆனால், பண்டைக்காலத்தில் தமிழ் நாடு என்பது **திருப்பதி மலை**க்குத் தெற்கே **கன்னியா குமரி முனை** வரையிலும், அரபிக்கடலினின்று வங்காள விரிகுடா வரையிலும் உள்ள பிரதேசமாகும்.

திராவிடரும் ஆரியரும்

இத்தமிழ் நாட்டில் ஆதிகாலம் தொட்டுத் திராவிடர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிப் பல நாட்கள் சென்ற பின், அவர்களுள் சிலர் தமிழ் நாட்டிற்கும் வந்தனர். ஆனால், அவர்கள் மற்றப் பாகங்களில் செய்தது போலத் திராவிடர்களை விரட்டிவிட்டுத் தங்கள் ஆதிக்கத்தை இங்கு ஏற்படுத்தவில்லை. இந்நாட்டில் அசோகர் காலத்திற்கு முன்பாகவே மூன்று ராஜ்யங்கள் இருந்து வந்தன. அவை சோழ ராஜ்யம், பாண்டிய ராஜ்யம், சேர ராஜ்யம் என்பவை.

வியாபாரம்

பண்டைக் காலத்திலேயே, திராவிடர்கள் சிறந்த நாகரிகம் உடையவர்களாய் இருந்தார்கள். அனிய நாடுகளுடன் வியாபாரப் போக்கு வரவும் இருந்து வந்தன. மேற்கே எகிப்து, ரோமாபுரிச் சாம்ராஜ்யம், கிழக்கே பர்மா, மலேயா, சீன



படம் 28. தென் இந்திய நாடுகள்

தேசம் முதலியவற்றுடன் நெருங்கிய வர்த்தகச் சம்பந்தம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. **கொற்கை, காவிரிப்பூம் பட்டினம்** முதலியவை முக்கிய துறைமுகப்பட்டினங்களாய் இருந்தன.

திராவிடர்கள் அதிகமாகத் தமிழ்ப் பாஷையையே போற்றி வந்தார்கள். தமிழ்ப் பாஷையில் சிறந்த நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை **திருக்குறள், நாலடியார், சிலப்பதிகாரம், மணிமேகலை** முதலியன. **ஔவையார், திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர்** என்னும் புலவர்கள் பிரசித்தி பெற்றவர்கள்.

கல்வி

கல்வியில் மட்டுமல்லாது, சங்கீதம், சிற்ப சாஸ்திரம் முதலிய துறைகளிலும் திராவிடர்கள் பெயர் பெற்றவர்கள். அவர்கள் கட்டியுள்ள கோவில்களின் அழகும், அரண்மனைகளின் நேர்த்தியும் அவர்களது உயர்ந்த நாகரிகத்தைத் தெளிவாகக் காட்டுகின்றன.

சிற்ப சாஸ்திரம்

புத்தசமண மதங்கள் தென்னிந்தியாவில்பரவிய காலத்தில் தமிழ் நாட்டினரும் அம்மதங்களைத் தழுவினர். பிறகு இந்து மதக் கிளர்ச்சி ஏற்பட்டு, சைவ **நாயன்மார்**களும், வைஷ்ணவ **ஆழ்வார்**களும் தங்கள் தங்கள் மதத்திற்காகப் பாடுபட்டபொழுது, இந்து மதம் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கியது.

மதம்

இவ்வாறு, தமிழ்நாட்டினர் அனேக ஆயிர வருடங்களுக்கு முன்பிருந்தே சிறந்த நாகரிகமுள்ளவராய் இருந்து வந்தனர் என்பதை நாம் அறிகிறோம்.

(1) சோழ ராஜ்யம்

ஆதிகாலத்திலே சோழர்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்ஆற்காடு முதலிய ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசத்தை ஆண்டு வந்தார்கள். அவர்களுக்குத் திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள **உறையூர்** தலைநகரமாய்இருந்தது. அக்காலத்தில் உறையூர் சிறந்த பட்டினமாய் இருந்திருக்க வேண்டும். நாளடைவில் அப்பட்டினம் அழிந்துபோய்விட்டது. புராணங்களில், மலைக்கோட்டையிலுள்ள **தாயுமான சுவாமி**, ஒரு சோழ அரசன்மீது கோபங்கொண்டு, அந்நகரின்மீது மண் மாரி பெய்யுமாறு செய்து அழித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. சோழ அரசர்களுக்குக் **காவிரிப்பூம்பட்டினம்** முக்கிய துறைமுகமாய் இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்தின் செல்வத்தைப்பற்றிச் **சிலப்பதிகாரம்** என்னும் கோவலன் கதையில் கூறப்பட்டிருப்பதை நீ படித்திருப்பாய்.

முக்கியமான பட்டினங்கள்

முதற்சோழ அரசர்களுள் மிக்க கீர்த்தி பெற்றவர் **கரிகால் சோழர்**. கரிகால் சோழர் என்பது காரணப்பெயர். இவருக்கு இப்பெயர் வந்ததற்குப்பல கதைகள் கூறப்படுகின்றன. இவர் சிறுவராயிருக்கும் பொழுதே, இவர் விரோதிகள் இவர் அரண்மனையைக் கொளுத்திவிட்டபடியால், இவருடைய கால் எரிக்கப்பட்டதாம். இவர் வியாதியுற்று மூர்ச்சையாகி இருக்கையில், இவர் இறந்துவிட்டதாக எண்ணி இவரைத் தகனம் செய்ய ஆரம்பித்தபோது இவர் காலில் நெருப்புப்பட்டவுடன் இவருக்குச் சுய நினைவு வர, இவர் எழுந்து ஓடி வந்துவிட்டார் என்பது மற்றொரு கதை.

கரிகால் சோழர்

கரிகால் சோழர்சேரமன்னருடனும்,பாண்டியமன்னருடனும் போர் புரிந்து, அவர்களைத் தோற்கடித்தார்; காஞ்சீபுரத்தைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் வென்றார். இதற்குத்தான் **தொண்டை மண்டலம்** என்னும் பெயர் வழங்கலாயிற்று. காவேரி நதியில் அடிக்கடி வெள்ளம் வந்து, சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்குச் சேதம் விளைவித்தபடியால், அதைத் தடுக்க இவர் உயர்ந்த கரைகளைக் கட்டினார். இவர் **சிங்களத் தீவின்** மீது படையெடுத்தார். இவர் காவிரிப்பூம் பட்டினத்தைத் தம் தலைநகராக்கிக் கொண்டார்.

கரிகால் சோழர் வெற்றிகள்

கரிகால் சோழர் இறந்த பின்னர், சோழர்களின் வலிமை குன்றியது. சேர மன்னரான செங்குட்டுவரும், அவருக்குப்பின் பாண்டிய மன்னரான நெடுஞ்செழியரும் பலமடைந்தனர். கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் பல்லவர்கள் தோன்றி, சோழ ராஜ்யத்தின் ஒரு பகுதியான தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் பல்லவர்களின் அதிகாரம் அழிந்து போகவே, பாண்டியர்கள் மீண்டும் பலமடைந்தார்கள். ஆனால், பாண்டியர்களால் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியவில்லை. கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அவர்கள் ஆதிக்கம்குன்றியது.அதன் பிறகு சோழர்கள் மீண்டும் பலம் பொருந்தியவர்களானார்கள்.

பாண்டியரும் பல்லவரும் பலமடைதல்

பிற்காலத்துச் சோழ அரசர்கள் :

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதியில் **விஜயாலயர்** என்றவர், தஞ்சாவூரைத் தலை நகராகக் கொண்டு, ஒரு சோழ ராஜ்யத்தை ஸ்தாபித்தார். அவருடைய மைந்தரான **ஆதித்தர்** என்பவர், பல்லவர்களின் நாட்டை வென்று, தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டார்.

தஞ்சாவூர்ச் சோழர்கள்

இப்புதிய சோழ வமிசத்தின் முதற் பெரிய அரசர், **முதலாம் பராந்தகர்**. இவர் கி.பி. 905-ஆம் ஆண்டு முதல் கி.பி. 955-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி புரிந்து வந்தார். இவர் பாண்டி நாட்டை மூன்று முறை தாக்கிப் பெரிய வெற்றி பெற்றார். பாண்டியர்களுடைய தலைநகராகிய **மதுரை**யை இவர் கைப் பற்றியதால், இவருக்கு '**மதுரை கொண்ட சோழர்**' என்ற பெயர் வழங்கலாயிற்று. பாண்டியர்களுக்கு உதவி புரிந்த சிங்கள அரசரின்மீதும் இவர் போர் தொடுத்து, அவரையும் தம் சிற்றரசராக்கிக்கொண்டார்.

முதலாம் பராந்தகர்

இவருக்குப் பின் இவ்வமிசத்தில் தோன்றிய மிகப் பெரிய அரசர், **ராஜராஜ சோழர்** என்பவர். இவர் கி. பி. 985-ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தார். இவர் சிறந்த போர் வீரர்; தம் ராஜயத்தைப் பெருக்க வேண்டுமென்ற பேரவாக் கொண்டவர். இவர் பலம் பொருந்திய ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு, பாண்டி நாட்டின்மீது படையெடுத்து, அதை ஜயித்தார். சேர அரசர், தம்மிடமிருந்த கப்பற்படையின் பலத்தால், ராஜராஜரை அவமதித்தார். அவருக்குப் புத்தி கற்பிக்க வேண்டுமென்று, சோழ அரசர் ஒரு பெருங் கப்பற்படையைத் தயாரித்தார்; திடீரெனச் சேரர்களின் துறைமுகப்பட்டினமான **காந்தளூ**ரை அடைந்து, சேரர்களின் கப்பற்படையைத் தாக்கிச் சின்னபின்னப் படுத்தினர். பிறகு, சேர அரசர் ராஜராஜருடைய ஆதிக்கத்திற்குள் அடங்கிய சிற்றரசரானர். மைசூரை ஆண்டு வந்த **கங்கர்**களும் இவரால் வெல்லப்பட்டார்கள். அதன் பின், இவர் சாளுக்கியர்களுடன் சண்டை செய்தார்; சிங்களத் தீவின் மீதும் படையெடுத்துச் சென்று, அதையும் தம் ஆட்சிக்குட் படுத்தினர்.

ராஜராஜ சோழரின் வெற்றிகள்

ராஜராஜ சோழர் ஒரு சிறந்த சிவ பக்தர். தம் தலைநக ரான தஞ்சாவூரில், இப்பொழுதும் நாம் காணும் **பிருகதீஸ் வரர் கோவில்** இவரால் கட்டப்பட்டது. இக்கோவிலின்



படம் 29. தஞ்சாவூர்ப் பிருகதீஸ்வரர் கோவில்

கோபுரத்தின் உயரம் 200 அடி. இந்தக் கோபுரத்தின் நிழல், சூரியன் எந்தப் பக்கத்தில் சென்றாலும் பூமியில் படியாது.

தஞ்சாவூர்ச் சிவன் கோவில்

ஆயிர வருடங்களுக்கு முன்பே திராவிடர்கள் கட்டட வேலையில் எவ்வளவு திறமை பெற்றிருந்தார்கள் என்பதை இது விளக்கிக் காட்டுகிறது. இக்கோவிலின் மதில் சுவர்களில் ராஜராஜர் அடைந்த வெற்றிகளும், மற்றும் அவர் ஆட்சியில் நடந்துள்ள முக்கிய சம்பவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்துதான், நாம் இவரைப் பற்றிய

பல விஷயங்களை அறிகிறோம். இவர் இந்து மதத்தினராயிருந்த போதிலும், மற்றைய மதத்தினரைத் துன்புறுத்தவில்லை. தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள **நாகப்பட்டினத்**தில் ஒரு பௌத்த கோவிலுக்கு இவர் சன்மானங்கள் செய்திருக்கிறார்; விவசாய அபிவிருத்திக்காகவும் அனேக குளங்கள், கால்வாய்கள் முதலியவைகளைக் கட்டினார்.

ராஜராஜ நரேந்திரர்

ராஜராஜர் தம் மகளைக் கீழைச் சாளுக்கிய வமிசத்து அரசிளங்குமரரான **விமலாதித்த**ருக்கு மணம் செய்வித்தார். விமலாதித்தருக்கும் சோழ மன்னரின் புதல்விக்கும் பிறந்த பிள்ளையே **விஷ்ணு வர்த்தனர்** என்ற **ராஜராஜ நரேந்திரர்**. இவர் கீழைச் சாளுக்கிய வமிசத்தை மீண்டும் உயர்ந்த பதவிக்குக் கொண்டுவந்தார்.

ராஜேந்திர சோழர்

ராஜராஜ சோழர் கி.பி. 1013-ஆம் ஆண்டில் இறந்தார். அவருக்குப் பின் அவர் மைந்தரான **ராஜேந்திர சோழர்** அரசரானார். இவரும் தம் தந்தையாரைப் போன்ற பராக்கிரமம் பொருந்திய அரசர். இவர் வட இந்தியாவின்மீது படையெடுத்துக் கங்கை நதிக்கரை வரையில் சென்றார் ; வங்காளத்தில் ஆண்டுவந்த **பால** அரசரையும் தோற்கடித்தார். இக்காலத்தில் **ஒரிஸ்ஸா** என்று வழங்கும் நாட்டிற்கு அப்போது **கலிங்கம்** என்பது பெயர். அதையும் இவர் வென்றார்; ஒரு பெரிய கப்பற் படையைத் தயாரித்து, **ஜாவா, சுமத்திரா, மலேயா, நிகோபார்**த் தீவுகள் முதலிய நாடுகளுக்கனுப்பித் தம் அதிகாரத்தை நிலை நாட்டினார். அதன் பயனாக இந்துக்களின் நாகரிகம் அப்பிரதேசங்களிலும் பரவலாயிற்று. இன்றைக்கும் ஜாவாத் தீவில் உள்ளவர்கள் **அகஸ்திய ரிஷி**யைத் தெய்வமாகத் தொழுகிறார்கள்.

ராஜேந்திர சோழர் தம் வெற்றிகளின் ஞாபகார்த்தமாக ஒரு புதிய பட்டினத்தை உண்டாக்கினார். இதற்குக் **கங்கை கொண்ட சோழபுரம்** என்பது பெயர்.

கங்கைகோண்ட சோழபுரம்

இதுவே ராஜேந்திரசோழரின் தலைநகராகும். இங்கு இவர் தம் தந்தையார் கட்டியதைப் போல ஒரு பெரிய சிவன் கோவிலைக் கட்டினார். இவர் தம் புதல்வியை மேற்கூறிய கீழைச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்த **ராஜராஜ நரேந்திர**ருக்கு மணம் செய்வித்தார். ராஜேந்திரர் கி. பி. 1044-ஆம் ஆண்டில் இறந்தார்.

இவருக்குப் பின்னர் மூன்று சோழ அரசர் ஆண்டு வந்தனர். அவர்களுக்குப் பிறகு ராஜராஜ நரேந்திரரின் மைந்தரான **குலோத்துங்கர்** அரசரானார்.

குலோத்துங்கர்

இவர் கீழைச் சாளுக்கிய வமிசத்தைச் சேர்ந்தவராதலால், அந்நாடும் இவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவர் கி. பி. 1070-ஆம் ஆண்டு முதல் 1118-ஆம் ஆண்டு வரையில் அரசாண்டார். இவர் கலிங்க நாட்டை வென்றார். இதைப்பற்றித்தான் **ஜயங்கொண்டார்** என்ற புலவர், **கலிங்கத்துப்பரணி** என்னும் ஒரு சிறந்த பிரபந்தத்தை எழுதியுள்ளார்.

குலோத்துங்கர் பாண்டிநாட்டையும் ஜயித்தார்; ஜனங்களின் நன்மைக்காகப் பெரிதும் பாடுபட்டார்; அனேக கால்வாய்களை வெட்டி, விவசாயத்திற்குப் போதுமான நீர் கிடைக்குமாறு செய்தார்;

இவர் செய்த நன்மைகள்

நிலங்களை அளந்து பார்த்துத் தீர்வையை நிர்மாணித்தார்; சுங்க வரி வசூலிப்பதை நிறுத்தினார். ஆகையால், இவருக்குச் **சுங்கம்தவிர்த்தசோழர்** என்ற பெயருமுண்டு. இவர் கல்விமான்களைப் போற்றி வந்தார். இவர் காலத்திலேதான் தமிழ் நாட்டுக் கவிச் சக்கரவர்த்

தியாரான **கம்பரும்**, **ஒட்டக்கூத்தரும்**, பெரிய புராணத்தை எழுதிய **சேக்கிழார் நாயனாரும்** வாழ்ந்திருந்தனர். வைஷ்ணவ மதாசாரியரான **இராமானுசர்** இவர் காலத்தில் தோன்றியவர். குலோத்துங்கர் சைவ மதத்தினரானபடியால், இராமானுசருக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஆகையால், இராமானுசர் சோழ நாட்டை விட்டு மைசூருக்குப் போக நேர்ந்தது.

சோழ வமிசம் க்ஷீணித்தல்

குலோத்துங்கர் இறந்த பிறகு சோழ வமிசம் க்ஷீணிக்கத் தொடங்கியது. மதுரையை ஆண்டு வந்த **சுந்தர பாண்டியர்** தஞ்சாவூரைத் தாக்கி, அதனைப் பிடித்துக் கொண்டார். சோழ ராஜ்யத்தின் வட பாகத்தைத் தெலுங்கர்கள் தாக்கினார்கள். கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சோழ ராஜ்யம் அடியோடு ஒழிந்தது.

சோழர்களின் அரசியல் முறை

சோழர்களின் அரசியல் முறையைப் பற்றிச் சிறிது கவனிப்போம்: அவர்கள் ராஜ்யம் **கோட்டங்கள்** என்ற மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டத்திலும் **நாடுகள்** என்ற ஜில்லாக்கள் அடங்கியிருந்தன. சில கிராமங்கள் ஒன்றுசேர்ந்த பிரிவுக்குக் **கூற்றம்** என்பது பெயர். கிராம விவகாரங்களைக் கவனிப்பதற்குப் பஞ்சாயத்துகள் இருந்தன. வரி வசூலித்தல், நாட்டில் அமைதியிருக்குமாறு பார்த்துக்கொள்ளுதல், தரும சத்திரங்களை மேற்பார்த்தல் முதலிய வேலைகளுக்குத் தனித் தனி இலாக்காக்கள் உண்டு. குடிகள் தங்கள் வருமானத்தில் ஆறில் ஒரு பங்கை அரசருக்கு நிலத்தீர்வையாகக் கொடுக்க வேண்டும். வர்த்தகப் பண்டங்களின்மீது வரி வசூலிக்கப் பட்டது. சோழர்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுதற்காக அனேக சௌகரியங்கள் செய்தார்கள் எனப் படித்திருக்கிறோம்.

அதற்கென ஒரு தனி இலாக்கா, பாலங்கள் கட்டுவது, அணை கள் போடுவது முதலியவற்றைக் கவனித்து வந்தது. சோழ மன்னர்கள் பலம் பொருந்திய சேனையும் கப்பற்படையும் வைத்திருந்தார்கள் என்பதை நாம் அறிவோம்.

பயிற்சி :

1. தமிழ் நாட்டினரின் மேன்மையைப்பற்றி ஒரு குறிப்பு எழுது.
2. ராஜராஜ சோழரின் காலத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சி கள் யாவை?
3. ராஜேந்திர சோழர் பெரிய அரசர் என்பதற்குக் காரணங் கள் யாவை?
4. குலோத்துங்க சோழர் எவ்வமிசத்தைச் சேர்ந்தவர்? அவர் ஆட்சியின் முக்கிய சம்பவங்களைப் பற்றிக் கூறு.

(2) பாண்டிய ராஜ்யம்

பாண்டிய ராஜ்யம் எனச் சொல்லப்படுவது, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசம். முதலில் **கொற்கை** என்ற நகர் அதற்குத் தலைநகராய் இருந்தது. பிறகு **மதுரை**, பாண்டியரின் தலைநகராய் விளங்கிற்று. பாண்டிய மன்னர்களும் தமிழைப் பெரிதும் ஆதரித்து வந்தார்கள் ; தமிழ் அபிவிருத்திக்காக மதுரையில் சங்கம் ஒன்று ஏற்படுத்தினார்கள். **சங்க நூல்கள்** தமிழ்ப் பாஷையிலேயே மிகச் சிறந்தவை.

பாண்டிய ராஜ்யத்தின் பரப்பு

முன் அத்தியாயத்தில் கரிகால் சோழர் இறந்த பின் **நெடுஞ்செழியர்** என்ற பாண்டிய அரசர் பலமடைந்தார் என்று கூறியிருக்கிறோம். நெடுஞ்செழியர் சிறந்த போர் வீரர். அவர் சேர சோழ ராஜ்யங்களை ஜயித்துத் தம் அதிகாரத்தை அந்

நெடுஞ்செழியர்

நாடுகளில் நிலை நிறுத்தினர். தமிழ்க் காவியங்களில் பெயர் பெற்ற **சிலப்பதிகாரம்** இவர் காலத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றித்தான் கூறுகிறது. நெடுஞ்செழியர் இராணியின் பொற் சிலம்புகளில் ஒன்றை அரண்மனையில் வேலை செய்துகொண் டிருந்த ஒரு தட்டான் திருடிவிட்டனன். அதே சமயத்தில் சோழ நாட்டினின்று வந்த **கோவலன்,** தன் மனைவி **கண்ணகி** யின் சிலம்பை விற்க யத்தனித்தான். தட்டான் செய்த சூழ்ச்சி யால், கோவலன் கள்வன் எனக் கருதப்பட்டான். அரசர் வழக்கை நன்குக விசாரியாமல் அவனுக்கு மரண தண்டனை விதித்தார். அவன் இறந்ததைக் கேள்வியுற்ற கண்ணகி, நெடுஞ்செழியர் சபைக்குச் சென்று, தன் கணவன் திருட னல்லன் என்பதை நிரூபித்துக் காட்டினள். கண்ணகியின் சிலம்பை உடைத்துப் பார்த்தபோது அதில் அனேக வயிரக் கற் களும், இரத்தினங்களும் இருந்தன. ஆனல், இராணியின் சிலம் பிலோ, முத்துக்கள் இருந்தன. தம் குற்றத்தை உணர்ந்த பாண்டியர் சிம்மாசனத்தினின்று கீழே விழுந்து இறந்தார். கண்ணகி தன் பதிவிரதா மகிமையால் மதுரையைத் தீயினல் அழித்தாள்.

நெடுஞ்செழியர் இறந்த பிறகு **நெடுமாறர்** என்ற **கூன் பாண்டியர்** அரசரானர். இவருடைய முதுகு வளைந்திருந்தது.

நெடுமாறர் என்ற கூன் பாண்டியர்

இவர் மனைவியாரான **மங்கையர்க்கரசி யார்** சோழ வமிசத்தினர். அரசர் சமண மதத்தைச் சேர்ந்தவர். ஆனல், அரசியா ரோ, சைவ மதத்தைச் சேர்ந்தவர். அரசர் தம் வெப்பு நோயைக் குணப்படுத்த வேண்டுமென்று பலவித முயற்சிகள் செய்தார். அரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கித் **திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர்** மதுரைக்குச் சென்று, அரசரைக் குணப்படுத்தினர். அதற்குப் பின் பாண்டியர் சைவ மதத்தைத் தழுவினர் எனக் கூறப்படுகிறது.

மீனாட்சியம்மன் கோவில்

மதுரையிலுள்ள **மீனுட்சியம்மன்** கோவில் பாண்டியர்களால் கட்டப்பட்டது. அது தென் இந்தியில் உள்ள கோவில்களுள் மிகப்பெரியது. அதன் மேன்மை, பாண்டிய மன்னர்கள் சிற்ப சாஸ்திரத்தைப் போற்றி வந்ததற்கு அத்தாட்சியாய் இருக்கிறது.



படம் **30.** மதுரை மீனுட்சியம்மன் கோவில்

முதலாம் பராந்தகர் காலத்தில் பாண்டியர்கள் தோற்கடிக்கப்பட்டு, அவர்கள் தலைநகர் கைப்பற்றப்பட்ட தென்பதை நாம் படித்திருக்கிறோம். சோழ மன்னர்கள் 13-ஆம் நூற்றாண்டில் தங்கள் அதிகாரத்தை இழந்துவிடவே, பாண்டியர்களின் அதிகாரம் மறுபடியும் பலமடைந்தது. **சுந்தரபாண்டிய**ரைப் பற்றி நாம் முன்னமே கூறியுள்ளோம். இவர் கி. பி. 1251-ஆம்

ஆண்டில் பட்டத்திற்கு வந்ததாகத் தெரிகிறது. இவர் சோழ நாட்டை ஜெயித்ததுமன்றிச் சேர அரசரையும்வென்றார். இவர் சிங்களத்தீவின் மீது படையெடுத்துச் சென்று, அதையும் தம் ஆட்சிக்குட்படுத்தினார். சுந்தர பாண்டியர் ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோவிலை மிகவும் அழகுபடுத்தினார்; அங்குப் பல கோபுரங்களைக் கட்டினார். முக்கிய கோபுரத்திற்குப் பொன் தகடுகள் வேய்ந்ததால், இவருக்குக் **கோவில்பொன்வேய்ந்த பெருமான்** என்ற விருதுப் பெயர் வழங்கலாயிற்று.

சுந்தரபாண்டியர்

இவர் கி. பி. 1271-ஆம் ஆண்டில் இறந்தார். இவருக்குப் பின் பெரிய பாண்டிய அரசர்கள் தோன்றவில்லை. விஜயநகர சாம்ராஜ்யம் பலமடைந்த பொழுது பாண்டியரின் ராஜ்யம் அதன் ஆதிக்கத்திற்குள் அடங்கியது.

பாண்டியரின் வீழ்ச்சி

பயிற்சி:

1. நெடுஞ்செழியரைப்பற்றி நீ என்ன கற்றுக்கொண்டாய்?
2. நெடுமாறருக்குக் 'கூன் பாண்டியர்' என்னும் பெயர் வரக் காரணம் என்ன?
3. சுந்தர பாண்டியர் சிறந்த அரசர் என்பதை விளக்கிக் காட்டு.

(3) சேர ராஜ்யம்

சேரர்கள் இப்பொழுது மலையாளம், கொச்சி, திருவிதாங்கூர் என வழங்கப்படும் பிரதேசங்களை ஆண்டு வந்தார்கள். இவர்கள் **வஞ்சி நகரைத்** தலைநகராகக் கொண்டிருந்தமட்டில் சேரர்களுக்கு **'வஞ்சியர் கோமான்கள்'** என்னும் பெயர்வழங்கலாயிற்று. இவர்களுக்குக் **'கிராங்கனூர்'** என்ற **முசிரி** முக்கியமான துறைமுகப்பட்டினமாய் இருந்தது.

சேர ராஜ்யம்

'பதிற்றுப்பத்து' என்னும் நூலில் சேர மன்னர்களின் சிறப்பைப்பற்றிக் கூறியிருக்கிறது. அந்நூலினின்றும் மற்ற நூல்களினின்றும் சேரநாட்டினர் வியாபாரப் பெருக்கைப்பற்றி நாம் அறிகிறோம். பண்டைக் காலத்திலேயே சேர நாட்டினர் ரோமாபுரி சாம்ராஜ்யத்துடனும், கிரேக்கர்களுடனும் வியாபாரம் செய்து வந்ததாகத் தெரிகிறது. இந்நாட்டில் அதிகமாக விளையும் ஏலம்,ஜாதிக்காய்,மிளகு முதலிய வாசனைத் திரவியங்கள் அயல் நாட்டாரால் விரும்பப்பட்டன. அவைகளை வாங்குவதற்காகவே ஐரோப்பியரும் 15-ஆம் நூற்றுண்டிலிருந்து இந்தியாவிற்கு வரலாயினர்.

சேர ராஜ்யத்தின் பெருமை

சேர மன்னர்களுள் கீர்த்தி வாய்ந்தவர்கள் **நெடுஞ்சேரலாதர், செங்குட்டுவர்** முதலியோர். நெடுஞ்சேரலாதர் இமய மலை வரையில் படையெடுத்ததாகக் கூறப்படுகிறது. ஆகையால், இவருக்கு **'இமய வரம்பர்'** என்ற பெயருமுண்டு. இவர் வட இந்தியாவிலிருந்த கிரேக்கர்களை அடக்கி, அவர்களிடமிருந்து கப்பம் பெற்றதாகச் சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நெடுஞ்சேரலாதர்

இவருடைய மைந்தரான **செங்குட்டுவர்,** இவரைப் போலவே புகழ் வாய்ந்தவர். செங்குட்டுவரும் இமய மலைவரையில் சென்று,அங்குப் பாறைகளின்மீது தம் **விற்கொடி**யைப் பொறித்து வைத்தார்; அக்காலத்தில் வட இந்தியாவில் ஆண்டு வந்த **கனகர் விஜயர்** என்ற அரசர்களைத் தோற்கடித்தார். இவர்கண்ணகியின்சிலையைச்செய்வதற்காக இமயமலையினின்று கனகவிஜயர்களின் தலைமீது கல்லை ஏற்றிக்கொண்டு வந்தார் எனச் சிலப்பதிகாரக் கதை கூறுகின்றது. சிலப்பதிகார நூலை இயற்றிய **இளங்கோவடிகள்** இவர் இளைய சகோதரராவர்.

செங்குட்டுவர்

இவருக்குப் பின் வந்த சேர அரசர்களைப்பற்றி நாம் அதிகமாய் அறிந்துகொள்ள வேண்டுவதில்லை. சேர மன்னருள் ஒருவரைச் சோழ அரசர் ஒருவர் சிறை பிடித்ததாகவும், அவரைச் சிறையினின்று விடுவிப்பதற்காகப் **பொய்கையார்** என்ற புலவர் **களவழி நாற்பது** என்னும் நூலைப் பாடியதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அவ்வரசர் மானமிழந்து உயிர் வாழ்வதைவிட இறத்தலே மேலெனக் கருதி உயிர் துறந்தார்.

பொய்கையார்

பாண்டிய சோழ மன்னர்களைப் போல, சேர அரசர்களும் தமிழைப் போற்றி வந்தார்கள். **சீத்தலைச் சாத்தனார், கபிலர்** போன்ற பெரிய புலவர்கள், சேர மன்னர்களால் ஆதரிக்கப்பட்டு வந்தார்கள்.

சேரநாட்டுப் புலவர்கள்

சேரர்கள் இந்து மதத்தினர்கள். இவர்களுள் சிலர் சைவ மதத்தையும், சிலர் வைஷ்ணவ மதத்தையும் பின்பற்றினர். இவர்கள் அனேக கோவில்களைக் கட்டி உள்ளார்கள். அசோகர் சாஸனங்களில் இவர்களைக் **கேரள புத்திரர்கள்** எனக் கூறுவதாலும், தமிழ் நாட்டு வேந்தர்களைக் குறிப்பிடும்பொழுது இவர்களின் பெயர் முதலில் வைத்து எண்ணப்படுவதாலும், இவர்களுடைய பண்டைக்காலப் பெருமையைக் கண்டறியலாம்.

சேரர்களின் மேன்மை

பயிற்சி :

1. சேர ராஜ்யம் எங்குள்ளது?
2. 'இமய வரம்பர்' என்னும் பெயர் யாருக்கு ஏன் வழங்கியது?
3. செங்குட்டுவரைப்பற்றி நீ என்ன தெரிந்துகொண்டாய் ?

18. இந்து மதப் பெரியார்கள்

[நாயன்மார்கள் - அப்பர் - திருஞான சம்பந்தர் - மாணிக்க வாசகர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள் - ஆழ்வார்கள் — குலசேகர ஆழ்வார் - திருமங்கை ஆழ்வார் - கோதை என்ற ஆண்டாள் - இவர்கள் செய்த தொண்டு]

பௌத்தமும் சமணமும் தமிழ் நாட்டில் பரவியபொழுது இந்துமதத்தைக் காப்பதற்காகச் சில பெரியார் தோன்றினர்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும்

அவர்களுள் சிலர் சிவனை ஆராதித்தனர்; மற்றவர்கள், மகாவிஷ்ணுவைக் கடவுளாகத் தொழுதார்கள். சிவனடியார்களுக்கு **நாயன்மார்கள்** என்றும், விஷ்ணு பக்தர்களுக்கு **ஆழ்வார்கள்** என்றும் பெயர்கள் வழங்கும். இவர்கள் தோன்றிய காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரையிலாகும் என்று சொல்லலாம்.

நாயன்மார் மொத்தம் அறுபத்துமூவர். அவர்களுள் அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசகர் என்பவர்கள்பிரதானமானவர்கள்.

திருஞான சம்பந்தர்

திருஞான சம்பந்தர், சீர்காழியில் பிராமண குலத்தில் பிறந்தவர். அவர் சிறு குழந்தையாய் இருந்தபொழுது தம் தகப்பனாருடன் குளக்கரைக்குச் சென்றார். அவர் அங்குப் பசியால் அழவே, பார்வதி தேவியார் தாமே நேரில் வந்து அவருக்கு அமுது அளித்தனர். அப்பாலைப் பருகியதும் அவருக்கு ஞானோதயமாயிற்று. உடனே அவர் சிவனைத் தோத்தரிக்கும் பாடல்களைப் பாட ஆரம்பித்தார். பிறகு அவர் பல ஸ்தலங்களுக்குச் சென்று ஒவ்வோர் இடத்திலும் உள்ள கடவுள்மீது அனேக பாடல்களைப் பாடியுள்ளார். திருஞான சம்பந்தர் பாண்டிய அரசரைச் சமண மதத்தினின்று

சைவ மதத்தில் சேர்த்ததைப்பற்றி முன்பே கூறப்பட்டிருக்கிறது.

மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர், பாண்டி நாட்டில் திருவாதவூரில் பிறந்தார். அவர் பாண்டிய மன்னரிடம் மந்திரியார் வேலை பார்த்து வந்தார். ஒரு சமயத்தில் அரசர் அவரிடம் பணத்தைக் கொடுத்துக் குதிரைகள் வாங்கும்படி சொன்னார். ஆனால், அச்சிறந்த சிவபக்தர், அப்பணத்தைச் சிவன் கோவில்கள் கட்டுவதிற்செலவழித்தார். பாண்டிய அரசர், அவரைப் பல விதத் துன்பங்களுக்கு ஆளாக்கினார். ஆனால், சிவபெருமான் கிருபையால் அவர் தம் கஷ்டங்களினின்று காப்பாற்றப்பட்டார். குறிப்பிட்ட நாளில் சிவபெருமான் காடுகளிலிருந்த நரிகளைப் பரிகளாக்கி அரசரின் லாயங்களிற் கொண்டுவந்து சேர்த்தார். ஆனால், மறுநாட்காலையில் குதிரைகள் நரிகளாய் மாறி ஊளையிடத் தொடங்கின. அதன் பிறகுதான் அரசருக்குக் கடவுளின் திருவிளையாடல் நன்கு புலப்பட்டது.

நாயன்மார்களைப் பற்றிய முழு விவரங்களைச் **சேக்கிழார்** எழுதிய பெரிய புராணத்தில் காணலாம்.

தேவாரம்

அப்பரும், சுந்தரரும், திருஞான சம்பந்தரும் பாடிய பாடல்களே **தேவாரம்** எனப்படும். இப்பாக்களை இக்காலத்திலும் கோவில்களில் பாடி வருகிறார்கள்.

நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பன்னிருவர். அவர்களுள் குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், ஆண்டாள் என்ற கோதை சிலர் ஆவர். இவ்வாழ்வார்கள் பாடிய தோத்திரப் பாடல்களை **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** என்பர்.

குலசேகராழ்வார், சேர அரச வமிசத்தில் பிறந்தவர். அவர் இளம்பிராயத்திலேயே மகாவிஷ்ணுவிடம் மிகுந்த பக்தி

கொண்டவர். அவர் அரசரான பின்பும் தம் மனத்தைப் பகவானிடத்திலேயே செலுத்தி வந்தார். அவரைப்பற்றிச் சில கதைகள் கூறப்படுகின்றன. ஒரு நாள் அவர் இராமா யணத்தின் ஒரு பகுதியான இராமர் வனவாசத்தைப்பற்றிக் கேட்டபொழுது, இராமர் தனிமையாகக் காட்டிற்குச் செல்லலாகாதென ஒரு பெருத்த சேனை

குலசேகர ஆழ்வார் யுடன் கிளம்பினாராம். மற்றொரு சமயம், இராவணன் சீதையை அபகரித்துக் கொண்டு இலங்கைக்குச் சென்றுவிட்டான் என்று கேட்டுச் சீதையை மீட்பதற்காகத் தம் படைகளுடன் புறப்பட்டார். கடவுளே இவர் பக்திக்கு மெச்சி, இவருக்குக் காட்சி கொடுத் துத் தாம் சீதையை மீட்டுவிட்டதாகவும், ஆகையால் இவர் திரும்பலாமென்றும் சொன்னார். அதன் பிறகுதான் குலசேகராழ்வார் தம் நாட்டிற்குத் திரும்பினார். இவர் தம் அந்திம காலத்தை ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்க நாதர் கோவி லில் கழித்துப் பிறகு திருநெல்வேலி ஜில்லாவில் இறந்தார்.

திருமங்கை ஆழ்வார் என்பவர், சீர்காழிக்கருகிலுள்ள **திருக்குறையலூர்** என்னும் இடத்தில் பிறந்தவர். இவர் கள்ள ஜாதியைச் சேர்ந்தவர். வயது வந்த பிறகு இவர் சோழ மன்னரிடம் படைத் தலைவராய் அமர்ந்தார். இவருதவியால் அனேக வெற்றிகள் பெற்ற சோழ மன்னர், இவரை மங்கை நாட்டுச் சிற்றரசராக்கினார். இவர் **குமுத**

திருமங்கை ஆழ்வார் **வல்லி**யென்ற வைஷ்ணவ மாதைக் கலி யாணஞ் செய்துகொண்டதால், அவள் நிபந்தனையின்படி தினம் ஆயிரம் வைஷ்ணவர்களுக்கு உண வளித்து வந்தார். அதில் இவர் பொக்கிஷமே காலியாகிவிட் டது. சோழ அரசருக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தைச் செலுத்த முடியாமற் போயிற்று. ஆனால், கடவுளின் கருணை யால் அப்பணம் கொடுக்கப்பட்டது. பிறகு இவர் வழிபறிக்

கொள்ளைக்காரராய் மாறி, வழக்கம்போல வைணவர்களுக்கு உணவளித்து வந்தார். ஒரு சமயம் பகவான் மனித வேஷத்தில் இவர் முன் தோன்ற, அவர் அணிந்திருந்த ஆபரணங்களையும் இவர் எடுத்துக்கொண்டார். ஆனால், கடவுள் காலில் அணிந்திருந்த மோதிரத்தை மட்டிலும் கழற்ற முடியவில்லை. ஆகையால், அதைக் கடித்து நீக்க முயன்ற ஆழ்வார் கடவுளின் திருப்பாதத்தைத் தம் தலையால் தொடும்படி நேரிட்டது. பிறகு இவருக்கு ஞானோதயம் உண்டாக, இவர் எஞ்சிய நாட்களைப் பகவான் சேவையில் கழித்தார். இவர் ஸ்ரீரங்கத்தில் இறந்தார்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் புதல்வியாராய் ஆண்டாள் அவதரித்தார். தினந்தோறும் பெரியாழ்வார் மகா விஷ்ணுவிற்குப் பூமாலை தொடுத்துச் சூட்டுவது வழக்கம். அதை அவர் எடுத்துச் செல்லும் முன்னரே ஆண்டாள் சூடிப் பார்த்து, பூக்குடலையில் வைத்துவிடுவார். இது பெரியாழ்வாருக்குத் தெரியாமலிருந்தது. ஒரு நாள் இதை அவர் பார்க்க நேரிட்டது. மாலை அசுத்தமாகிவிட்டதெனக்கருதி, அன்று மாலை இல்லாமல் கோவிலுக்குச் சென்றார். அதன் காரணத்தை அறிந்த கடவுள், தமக்கு ஆண்டாள் சூடிக் கொடுக்கும் மாலையே மகிழ்ச்சியைத் தருகின்றது என்று கூறப் பெரியாழ்வார் அதனைக் கொண்டு வந்து கொடுத்தார். ஆகையால், ஆண்டாளுக்குச் '**சூடிக் கொடுத்த நாய்ச்சியார்**' என்னும் பெயர் உண்டாயிற்று. அவருக்கு வயது வந்த பின் 'ஸ்ரீரங்கநாதரைத்தான் மணப்பேன்' என்று கூறினார். பெரியாழ்வார் ஆண்டாளை அழைத்துக்கொண்டு ஸ்ரீரங்கத்திற்குச்

படம் 31.
ஸ்ரீ ஆண்டாள்

சென்றபொழுது ஸ்ரீரங்கநாதர் அவரைத் தம்முடன் சேர்த்துக் கொண்டார்.

மேற்கூறியவாறு நாயன்மார்களும் ஆழ்வார்களும் நம் நாட்டில் தோன்றி இந்து மதத்தின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டார்கள்.

பயிற்சி :

1. 'நாயன்மார்' என்பவர் யார் ? அவர்கள் எத்தனை பேர் ? அவர்களுள் இருவரைப்பற்றி ஒரு சிறு குறிப்பு எழுது.
2. 'ஆழ்வார்கள்' யார்? குலசேகர ஆழ்வாரைப்பற்றியாவது, கோதையாரைப்பற்றியாவது ஒரு சிறு கதை கூறு.

19. மூன்று சமயாசாரியர்கள்

[ஸ்ரீ சங்கராசாரியார்-ஸ்ரீ ராமாநுஜாசாரியார் - ஸ்ரீ மத்துவாசாரியார் - அத்வைதம் - விசிஷ்டாத்வைதம் - துவைதம் - இவைகளின் பொருள்கள் - மதாசாரியர்கள் செய்த வேலையின் பயன்கள்]

இந்து மதத்தினைப் பரவச் செய்வதற்குத் தொண்டு செய்த நாயன்மார்களைப் பற்றியும், ஆழ்வார்களைப்பற்றியும் முன் அத்தியாயத்தில் கூறினோம். இங்கு மூன்று மதாசாரியர்களைப்பற்றிச் சிறிதுகவனிப்போம்: அவர்களுக்கு **ஸ்ரீசங்கராசாரியார், ஸ்ரீராமாநுஜாசாரியார், ஸ்ரீமத்துவாசாரியார்** என்பன பெயர்கள்.

ஜீவாத்துமா பரமாத்துமா

இம்மூவரும் ஆராய்ச்சி செய்த விஷயம் என்னவெனில், ஒவ்வொரு மனிதனிடமுள்ள ஆத்துமாவிற்கும், மனிதனைச் சிருட்டி செய்த பரமாத்துமாவிற்கும் என்ன சம்பந்தம் என்பதே. ஒவ்வொரு மனிதனுடைய உடலும் அழியத் தக்கது. ஆனல், அவனுள் இருக்கும் ஆத்துமாஎன்



படம் 32. ஸ்ரீ சங்கராசாரியார்

பது அழியாப் பொருள். அது நம் புலன்களுக்குப் புலப்படாது. ஒரு மனிதன் இறந்துபோனான் என்றால், அவன் உடல் அழிந்து போயிற்று என்பதுதான் அர்த்தம். அவன் தன் வாழ் நாட்களில் செய்த பாவ புண்ணியங்களுக்கு ஏற்றவாறு, அவனுடைய ஆத்துமாவானது உயர் பிறப்பிலோ, தாழ்பிறப்பிலோ மறுபடியும் பிறக்கும் என்பது இந்துக்களின் கொள்கை. மனிதனைச் சிருஷ்டி செய்த கடவுளுக்குப் **பரமாத்துமா** என்பது பெயர். மனிதனது ஜீவாத்துமா என்பது பரமாத்துமாவா, அல்லது வேறா என்பதைப்பற்றி இம்மூன்று ஆசாரியர்களும் மூன்று வித அபிப்பிராயங்களை வெளியிட்டு, ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைகளைப் பிரசாரம் செய்து வந்தனர்.

சங்கராசாரியார்

இவர்களுள் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் முதன்முதலில் தோன்றியவர் **ஸ்ரீ சங்கராசாரியார்**. இவர் மலையாளத்திலுள்ள **காலடி** என்ற ஊரில் பிறந்தார். இவர் பிராமணர். இளமையிலேயே, இவர் எல்லாச் சாஸ்திரங்களையும் கற்று, அவைகளின் உண்மைகளை அறிந்தார். இவர் துறவறம் பூண்டு, வடக்கேயுள்ள காசி முதலிய இடங்களுக்குச் சென்று, தாம் கண்ட உண்மைகளைப் போதித்து வந்தார்.

அத்வைதம்

இவர் கூறியதாவது: மனிதனது ஜீவாத்துமாவும் பரமாத்துமாவும் ஒன்றே. மனிதனது ஜீவாத்துமா இவ்வுலகில் பிறவாது பரமாத்துமாவுடன்கலப்பதே **முத்தி** என்று உரைத்தார். இந்த உண்மையை அறிவதே **ஞானம்**. இதைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் கடவுளைக் குறித்துத் தியானித்து, அவரைத் தினம் பூஜை செய்யவேண்டும். இக்கொள்கைக்கு **அத்வைதம்**

என்பது பெயர். அத்வைதம் என்பது வடமொழிப் பெயர். இதன் பொருள் இரண்டற்றது என்பதாம்.

ஸ்ரீ சங்கராசாரியார் முக்கியமாகப் பரமசிவனையே தொழுது வந்தார். ஆனால், இவர் மஹாவிஷ்ணுவையும் துதித்து வந்தார். **வேதவியாஸர்** என்ற மகானால் எழுதப்பட்ட **பிரமசூத்திரத்**திற்கு இவர் தம் கொள்கையின்படி ஓர் உரை எழுதினார். அதற்குச் **சங்கரபாஷ்யம்** என்பது பெயர். இவர் தாம் கூறிய அத்வைத முறையை எல்லோரும் பின்பற்றுவதற்குப் பிரசாரம் செய்துவர அனேக மடங்களை ஏற்படுத்தினார். இம்மடங்கள் சாஸ்திர சம்பந்தமான கல்வியை ஜனங்களிடையில் பரப்பியது. இம்மடங்களுள் காஞ்சிக் **காமகோடி பீட**மும், சிருங்கேரிச் **சாரதா பீட**மும் பிரசித்தி பெற்றவை. ஸ்ரீ சங்கராசாரியார் கி. பி. 825-ஆம் ஆண்டில் சிவலோகப் பிராப்தி அடைந்தார்.

சங்கரபாஷ்யம்

ஸ்ரீராமாநுஜாசாரியார் கி.பி. 1017-ஆம் ஆண்டில் **ஸ்ரீ பெரும்பூதூ**ரில் பிறந்தார். இவர் விஷ்ணு பக்தர். இவர் **யாதவப் பிரகாசர்** என்பவரிடம் சாஸ்திரங்கள் முதலியவைகளைக் கற்றார். இவர் சிறிது காலம் இல்லற வாழ்க்கையிலீடுபட்டு, பிறகு துறவியானார்.

ஸ்ரீராமாநுஜாசாரியார்

துறவியான பின், இவர் ஸ்ரீரங்கத்திற்குச்சென்றார். ஆனால், அப்பொழுது ஆண்டு வந்த சோழ மன்னர் சிவபக்தராதலால், தம்மைத் துன்புறுத்தக் கூடுமென எண்ணி, இவர் மைசூருக்குச் சென்றார்; ஆங்கு ஆண்டு வந்த **விஷ்ணு வர்த்தனர்** என்ற மன்னரை வைஷ்ணவ மதத்தில் சேர்த்தார். இவரும் அனேக மடங்களைக் கட்டினார்.

மைசூருக்குச் செல்லுதல்

ஸ்ரீ ராமாநுஜர் கூறியதும் அத்வைதமே; ஆனல், சங்கராச்சாரியாரின் கொள்கைக்கு மாறுபட்டது. ஸ்ரீ ராமாநுஜர் கொள்கையின்படி, அழியாப் பொருள் விசிஷ்டாத்வைதம் என்பது **கடவுள்** ஒன்றே. கடவுள் என்ற பரமாத்துமாவிற்குள் ஜீவாத்துமாவும்,வஸ்துக்களும் அடங்கியிருக்கின்றன. ஜீவாத்துமா, பிறவியென்

படம் 33. ஸ்ரீ ராமாநுஜர்

னும் பந்தத்தினின்று விடுபட்ட பிறகும், பரமாத்துமாவிற்குத் தொண்டு செய்தலே அதன் கடமை என்று கூறினர்; அத்தகைய விடுதலை அடைவதற்குப் பக்தி மார்க்கத்தைப் போதித்தார். இவருடைய கொள்கைக்கு **விசிஷ்டாத்வைதம்** என்பது பெயர். இவர் கி.பி. 1137-ஆம் ஆண்டில் பரமபதம் அடைந்தார்.

ஸ்ரீ மத்துவாசாரியார் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் பிறந்தவர். இவர் தென்கன்னடம் என்ற ஜில்லாவிலுள்ள **உடுப்பி** என்ற ஊரில் பிறந்தார்; இளமையிலேயே பல சாஸ்திரங்களைக் கற்றறிந்தார். இளைஞராயிருக்கும் பொழுதே, இவரும் ஸ்ரீ சங்கராசாரியாரைப் போலச் சன்னியாசியானார். இவர் மஹாவிஷ்ணுவையும், அனுமாரையும் பூஜித்து வந்தார்.

ஸ்ரீ மத்துவாசாரியார்

படம் 34. ஸ்ரீ மத்துவாசாரியார்

இவர் போதித்த முறைக்குத் **துவைதம்** என்பது பெயர். அதாவது சிருஷ்டி கர்த்தாவான பரமாத்துமாவும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவாத்துமாவும், வஸ்துக்களும் வேறு என்பது. 'துவைதம்' என்பது 'இரண்டு' என்று பொருள்படும்.

துவைதம்

இவரும் அனேக மடங்களைக் கட்டினார். அவற்றில் உடுப்பியிலுள்ள மடங்களே சிறந்தவை. இவரைப் பின்பற்றியவர்களுக்கு **மாத்துவர்கள்** என்பது பெயர்.

மதாசாரியர்கள் செய்த வேலையின் பயன்கள்

இவ்வாறு ஒருவர் பின் ஒருவராக மூன்று மதாசாரியர்கள் தோன்றி, இந்து மதத்தைப் பரவச்செய்வதில் தங்கள் காலத்தைச் செலவழித்தார்கள். அதன் பயனாகப் புத்த சமண மதங்கள் தென்னிந்தியாவினின்று மறையத் தொடங்கின. வட இந்தியாவிலும், இவர்கள் செய்த பிரசாரங்களால், இந்து மதக் கிளர்ச்சி ஏற்படலாயிற்று. இங்கு வேறு அனேக மகான்கள் தோன்றி, இந்து மதத்தை நிலைநாட்டினார்கள்.

பயிற்சி :

1. மதாசாரியர்கள் எந்த விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள் ?
2. அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்னும் பதங்களுக்குப் பொருள் என்ன?

காலக் குறிப்பு

THE MADUR

கி.மு.	5000	ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிய காலம்
,,	3000	இராமாயண காலம்
,,	1500	மகாபாரத காலம்
,,	599—527	வர்த்தமான மகாவீரர்
,,	560—480	கௌதம புத்தர்
,,	600—400	மகத தேசத்தில் சைசுநாக வமிசத்தார் ஆட்சி
,,	400—321	மகதத்தில் நந்த வமிசத்தார் ஆட்சி
,,	327—325	அலெக்ஸாந்தர் இந்திய படையெடுப்பு
,,	236	ஜீல நதிச் சண்டை
,,	325—184	மகத தேசத்தில் மௌரிய அரசர்களின் ஆட்சி
,,	325—300	சந்திர குப்த மௌரியரின் ஆட்
,,	297—274	பிந்துசாரர் ஆட்சி
,,	274—232	அசோகரின் ஆட்சி
,,	261	கலிங்க யுத்தம்
,,	232—184	அசோகருக்குப் பின் வந்த ெ சர்களின் ஆட்சி
,,	184—72	மகத தேசத்தில் சுங்கவமிசத்தா புஷ்யமித்திரரின் ஆட்சி ஆரம்ப
,,	72—27	மகத தேசத்தில் கண்ணுவர்கள்
கி.பி.	1—200	தக்காணத்தில் ஆந்திரர்கள் ஆட்
,,	78	சாலிவாகன சகாப்தம்
,,	120—160	கனிஷ்கரின் ஆட்சி
,,	190	சாக்கர்கள்